# பளிச் பரிகாரங்கள்!

https://t.me/Digital_eLibrary




ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்



# பளிச் பரிகாரங்கள் !

https://t.me/Digital_eLibrary

ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்

கல்கி பதிப்பகம்

**பளிச் பரிகாரங்கள்!**
**© ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்**
முதல் பதிப்பு: டிசம்பர் 2012

விலை ₹ 50
கல்கி பதிப்பகம் : 19
கல்கி பதிப்பகம்,
பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டின்
ஓர் அங்கம்.

பதிப்பாளர், ஆசிரியர்:
**லக்ஷ்மி நடராஜன்**
பொறுப்பாசிரியர்:
**ஆர்.வெங்கடேஷ்**

அட்டை: Shutterstock

https://t.me/Digital_eLibrary

**கல்கி பதிப்பகம்**
கல்கி பில்டிங்ஸ்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை 600 032
ஆசிரியர் குழு தொ.பே: 91-044-4343 8822
விற்பனை தொ.பே: 91-044-4343 8844
மின்னஞ்சல்: books@kalkiweekly.com
இணையதளம்: www.kalkionline.com

இந்த நூலின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் முன் அனுமதி இன்றி மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் பிற மின் ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கும், மேற்கோள்களுக்கும் இந்த நூலில் இருந்து சிறு பகுதியை எடுத்தாளலாம்.

# முன்னுரை

**எ**திர்காலத்தை முன்கூட்டியே தெரிந்துகொள்ள முடியுமா, அது எனக்குச் சாதகமாக இருக்குமா? பாதகத்தை ஏற்படுத்துமா? என்பது மனிதன் சிந்திக்கத் தொடங்கிய நாளில் இருந்து வரும் ஓர் எதிர்பார்ப்பு. அடுத்த நொடி, அடுத்த நாள் என்பது மர்மம் நிறைந்ததாக இருக்கிறது. அதை எப்படியேனும் கட்டவிழ்த்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற பேரவாதான் ஜோதிடத்தின் தோற்றத்துக்கு அடிப் படை.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நமது முனிவர்களும் யோகியரும் இதை வானசாஸ்திரத்தின் அடிப்படையில் தெளிவுபடுத்தியும் ஒழுங்குபடுத்தியும் ஓர் கலையாக வளர்த்தெடுத்திருக்கிறார்கள். ஜோதிடம், அறிவியல் அடிப்படை கொண்ட கலை என்பதுதான் அதன் பெருமை. ஜோதிடக் கலையின் தொன்மை பற்றியும் அதன் அறிவியல் தன்மை பற்றியும் ஏராளமான நூல்கள் ஏற்கெனவே எழுதப்பட்டுவிட்டன. அதனால், அதைப் பற்றி நான் விரிவாகச் சொல்லத் தேவையில்லை.

ஆனால், இன்றைய நவீன வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள குழப்பதை மட்டுமே தெளிவு செய்ய விரும்புகிறேன். எல்லா துறைகளும் தம் உயரத்தை இழந்ததைப் போன்றே, ஜோதிட சாஸ்திரமும் தன் மேன்மையைத் தக்க வைத்துக்கொள்ளத் திணறுகிறது. இக்கலையை முறையாகத் தெரிந்துகொண்டு, பயபக்தியுடன், நெஞ் சுக்கு நேர்மையாக, ஜோதிட நூல்களின் வழியில், பலன்களைச் சொல்ல முனைவோர் படிப்படியாக அருகி வருகின்றனர். ஆனால், ஜோதிடத்தின் மேலுள்ள நம்பிக்கை, நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது. விளைவு, போதிய பயிற்சியும் தெய்வ அனுகிரகமும் (இந்த ஆசிர்வாதம் மிக முக்கியம்!) இல்லாதவர்கள் குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர்.

வாழ்க்கை ஏற்படுத்தும் வலிகள், மிகவும் குரூரமானவை. இயற்கையான சந்தோஷங்களோ, வாய்ப்புகளோ, வசதிகளோ கூட பெறாதவர்கள் ஏராளம். அவர்கள் துக்கப்படவும் துவண்டு போகவும் ஆயிரம் காரணங்கள் தினம் தினம் முளைத்துக்கொண்டே இருக்கின்றன. இப்படிப்பட்டவர்களுக்கு முதலில் தேவை, மனநிம்மதி. நம்பிக்கை. தைரியம். உற்சாகம். மெல்ல மெல்ல அவர்கள் தம் வாழ்க்கையின் போக்கைப் புரிந்துகொள்ளவும் அதன் வழியே தமது துணிவை உயர்த்திக்கொள்ளவும் ஜோதிடக் கலை உதவ வேண்டும். ஜோதிடம் யாரையும் பயமுறுத்தவோ, முடங்கிப் போகவோ வைக்கும் கலை அல்ல.

ஆனால், இன்றைய நிலைமை முற்றிலும் வேறாக இருக்கிறது. மக்கள் மனத்தில் தோன்றும் சந்தேகங்களுக்கு ஜோதிட ரீதியான, விருப்புவெறுப்பற்ற, வாக்கு சுத்தமான, தெய்வ அனுக்கிரகத்துடன் கூடிய பதில்கள் கிடைப்பதே அரிதாக இருக்கிறது. எல்லாமே சேவை என்றான பின்னர், சேவைக் கட்டணம் விண்ணை முட்டுகிறது. ஆனால், சந்தேகங்கள் தீர்ந்தபாடில்லை. குழப்பங்கள் விலகினபாடில்லை.

இதற்குக் காரணம், தெளிவான பதில்கள் இல்லை என்பதுதான். ஜோதிடத் துடன் நமது பண்டைய சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும் நம் வாழ்க்கைக்குத்

தேவையான அனைத்து பதில்களையும் ஏற்கெனவே கொடுத்து வைத்திருக்கின்றன. இந்து மதம் என்பது மதம் அல்ல; அது ஒரு வளமான வாழ்க்கை நெறி. அனைத்துக் கேள்விகளுக்குமான என்சைக்ளோபீடியா.

இந்த என்சைக்ளோபீடியாவில் இருந்து எடுத்துத் தரப்படும் பதில்களே, பளிச் பரிகாரம் பகுதி. கல்கி வார இதழில், வாசகர்கள் கேட்கும் கேள்விகளைப் பார்க்கும்போது, எனக்கு ஆச்சர்யமும் மகிழ்ச்சியும் சேர்ந்தே ஏற்படும். நமது பாரத பண்பாடும் வாழ்க்கை முறைகளும் இன்றைய தலைமுறைக்கும் வந்து சேர்ந்திருப்பதை பார்க்கும்போது மகிழ்ச்சி ஏற்படும். அதேசமயம், மேலைநாட்டு மோகம், நவீன சிந்தனைகள் என்ற பெயரில் ஏற்படும் சிக்கல்கள் எல்லாம் என்னை வருந்தச் செய்யும். இதற்கெல்லாம் சரியாக பதில் சொல்லவேண்டுமே என்ற பதற்றமே என்னை ஒவ்வொரு வாரமும் தொற்றிக்கொள்ளும்.

கல்கி வார இதழில் வெளியான பதில்களில், ஜாதக ரீதியான தனிப்பட்ட பதில்களைத் தவிர்த்து, எல்லா காலங்களுக்கும் பயன்படும்படியான பதில்களை இந் நூலில் தொகுத்திருக்கிறேன். எல்லா கேள்விகளுமே ஏதேனும் ஓர் பிரச்னையை மையப்படுத்தியே வரும். அது மற்றவர்களுக்கு ஒரு பொருட்டாக இல்லாமல் போகலாம்; ஆனால், அதைச் சந்திப்பவருக்குத்தான் அதன் கஷ்டம் தெரியும். அதேபோல் எண்ணற்றவர்கள், இதே பிரச்னையைச் சந்திக்கவும் வாய்ப்புண்டு. அப்படியானால், நான் எழுதும் பதில், என்றென்றைக்கும் பயனுடையதாக அமைய வேண்டும். இது ஓர் கூடுதல் சுகமான சுமை.

எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வு உண்டு. அதில் மிக எளிமையான தீர்வு, பரிகாரங்களைச் செய்தல். பிரச்னைகளைக் கொடுக்கும் கடவுள், கூடவே தீர்வுகளையும் தருகிறான். ஆனால், இன்றைக்குத் தீர்வுகளுக்குத்தான் பெரிய கிராக்கி இருக்கிறது.

தீர்வுகளைத் தருகிறேன் என்று விளம்பரம் கொடுப்பவர்கள், மேலும் சோதனைகளையே தருகின்றனர். பொருள் நஷ்டம், மன வருத்தம், ஆகியவை இதுபோன்ற தனி மனிதர்களின் தப்பான தீர்வு முறைகளால் ஏற்படுகின்றன. விளைவு, ஜோதிடமே பொய், அதில் சொல்லப்பட்டுள்ள பரிகாரங்கள் எல்லாம் ஹம்பக் என்ற தோற்றம் ஏற்பட்டுவிட்டது.

ஆனால், பளிச் பரிகாரம் பகுதி முழுவதும் எளிமையான பரிகாரங்களையே பரிந்துரைத்துள்ளேன். பெரிய பெரிய துன்பங்களையெல்லாம் எளிய பரிகாரங்கள் விலக்கிவிடும். நல்ல வழி பிறக்கும். முன்னேற்றம் கண்ணெதிரே தெரியும். அதைத் தானே எல்லாரும் விரும்புகிறோம்.

இறைவன், எளிமையானவன், அன்பே உருவானவன். கருணைப் பெருங்கடல். அவன் முன்னே சென்று செய்த தவறுகளை எல்லாம் சொல்லி, மனமுருக நெக்குருக வேண்டினால் போதும். வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல என்பது வள்ளுவனின் வேதவாக்கு.

அந்தப் பெருங்கருணை எல்லா துன்பங்களில் இருந்தும் நம்மைக் காப்பாற்றும்!

ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்



பளிச் பரிகாரங்கள்...

**1. பஞ்சதீபம் ஏற்றுதல் என்றால் என்ன?**

இலுப்ப எண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய், பசு நெய்... ஆகிய ஐந்தையும் சமஅளவில் கலந்து தீபம் ஏற்றுவது பஞ்சதீபம். சிவன் கோயிலில் திங்கட்கிழமைகளில் மாலை நேரத்தில் பஞ்சதீபம் ஏற்றி பிரார்த்தனை செய்துகொண்டால் நினைத்தது நடக்கும்.

**2. குருப்பெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி, ராகு-கேது பெயர்ச்சி ஆகியவற்றுக்கு மட்டும் வெகு விமரிசையாகக் கோயில்களில் வழிபாடு செய்கிறோம். மற்ற கிரகங்களுக்கு ஏன் அதுபோல் ஒன்றும் செய்வதில்லை?**

குரு ஒரு வருடத்துக்கு ஒருமுறை பெயர்ச்சியாகும், சனி இரண்டரை வருடங்களுக்கு ஒருமுறை பெயர்ச்சியாகும். ராகு-கேது 18 மாதங்களுக்கு ஒருமுறை பின்னோக்கி நகரும். மற்ற கிரகங்கள் மாதாமாதம் பெயர்ச்சியாகும். ஜோதிடத்தில் அனைத்து கிரகங்களுமே முக்கியம்தான். எனினும் குரு, சனி, ஆகிய இரு கிரகங்களின்

நிலை நமது வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதால் அவை பெயர்ச்சி ஆகும்போது அதிகமாக இறைவழிபாடுகள் செய்கிறோம்.

**3. வீட்டில் கணபதி ஹோமம், நவகிரக ஹோமம் செய்ய விரும்புகிறோம். அதற்கு உகந்த நாள் எது?**

வளர்பிறை சதுர்த்தி, தேய்பிறை அஷ்டமி, பௌர்ணமி, உங்கள் ஜென்ம நட்சத்திரம் வருகின்ற நாள்... ஆகியவை விசேஷமானவை.

**4. பூஜை அறையில் சாமி படங்களுடன் இறந்துவிட்ட குடும்பத்தாரின் படங்களையும் வைத்து வழிபடலாமா?**

வழிபடலாம். தூபம், தீபம், சூடம் காட்டலாம், மலர்கள் அணிவிக்கலாம். அதில் தவறே இல்லை.

**5. கால பைரவர் வழிபாடு செய்யும் முறை என்ன? எத்தகைய தீபம் ஏற்ற வேண்டும்? என்ன மந்திரம் சொல்ல வேண்டும்?**

தேய்பிறை அஷ்டமியன்று பைரவர் வழிபாடு செய்வது சிறப்பு. காசியில் உள்ள காலபைரவர் கோயில் மிகவும் புகழ்பெற்றது. இத்தலத்தில் கால பைரவ அஷ்டகம் என்னும் சுலோகத்தை ஆதிசங்கரர் பாடியுள்ளார். பைரவர் என்பது 64 சிவ வடிவங்களுள் ஒன்று. பைரவர்களில் 64 வகை உள்ளது. திருவாவடுதுறை ஆதின நூலகத்தில் பைரவர் வழிபாடு தொடர்பான நூல்கள் உள்ளன. பைரவர் சன்னிதியில் நல்லெண்ணெய் தீபம் ஏற்ற வேண்டும். பைரவருக்கு வடை மாலை சாற்றும் வழக்கம் உண்டு. பைரவர் வழிபாடு செய்தால் துர்தேவதைகள் அண்டாது. கண் திருஷ்டி விலகும். நவகிரக தோஷங்கள் அனைத்தும் நீங்கும். 'சூலம் திகம்பராய வித்மகே தீர்க சிஷ்ணாய தீமஹி தன்னோ பைரவ ப்ரசோதயாத்' என்பது பைரவர் காயத்ரி மந்திரம். ஆகமசார ருத்ர த்ரிசதி சொல்லி வில்வ அர்ச்சனை செய்வது சிறப்பு.

**6. போட்டி, பொறாமை, ஆத்திரம், வயிற்றெரிச்சல், முன்கோபம், போன்ற துர்குணங்கள் உடையவர்கள் மனம் திருந்த என்ன வழிபாடு செய்ய வேண்டும்?**

ஆதிசங்கரர் துங்கபத்ரா நதிக்கரையில் ஓர் அபூர்வ காட்சியைக் கண்டார். பிரசவ வேதனையில் கொளுத்தும் வெயிலில் துடித்துக்கொண்டிருந்த ஒரு தவளைக்கு, நாகப்பாம்பு குடை பிடித்து நிழல் அளித்தது. பிறவியி

லேயே எதிரிகளான தவளையும் நாகமும் தங்கள் பகைமை உணர்வை மறந்து நட்பு பாராட்டின. இந்த அதிசயத்தைப் பார்த்ததும், அவ்விடத்தின் மகத்துவத்தை உணர்ந்து அங்கேயே அமர்ந்து தவம் புரிந்தார். ஆதி சங்கரர் சாரதா தேவியை தியானம் செய்த இடம்தான் சிருங்கேரி. நீங்ளும் சிருங்கேரி சாரதாம்பாளை வேண்டிக்கொள்ளுங்கள். நீங்கள் குறிப்பிடும் நபருக்குத் துர்குணங்கள் மாறும்.

**7. ஆண் மூலம் அரசாளும் என்று சொல்லப்படுவதேன்? மூலம் நட்சத்திரத்துக்கு ஏதேனும் சிறப்பு உண்டா?**

மூலம் என்றால் வேர், ஆதி, தொடக்கம், வித்து எனப் பல பொருள் கூறலாம். அனுமனுக்கும் மூலம் ராவணனுக்கும் மூலம். நாடாளும் யோகம் இந்த நட்சத்திரத்துக்கு உண்டு.

அகமுடை செல்வனாகும் ஆயுதம் பிடிக்கவல்லன்
சுகமுகவசியனாகும் சுற்றத்தார்தமக்கு நல்லான்
மிகஉயர் கல்வி கற்றும் வேந்தர்க்கும் இனியனாகும்
முகமதும் அழகனாகும் மூல நாள் தோன்றினானே

இந்த மூல நட்சத்திரப் பாடல் தஞ்சை சரசுவதி மகால் நூலகச் சுவடியில் உள்ளது. ஆண் மூலம் உயர்வானது என்பதை நிருபிக்க இதுபோல் பழைய நூல்களில் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

**8. நவரத்தினக் கல் அணிவதால் தலைஎழுத்து மாறுமா?**

அணிபவருக்கு மாறுமோ மாறாதோ விற்பவரின் தலைஎழுத்து நிச்சயம் மாறும். பண மழை கொட்டுகிறதே.

**9. ஒரே நட்சத்திரத்தில் பிறந்த ஆண், பெண் திருமணம் செய்துகொள்ளலாமா? சில நட்சத்திரங்களுக்கு விதிவிலக்கு உள்ளதாகச் சொல்கின்றனர். தங்கள் கருத்து என்ன?**

ஒரே நட்சத்திர ஆண் - பெண் திருமணம் செய்துகொள்வது தவிர்க்கப்பட வேண்டும். 27 நட்சத்திரங்களில் 7 நட்சத்திரங்களுக்கு மட்டும் விதிவிலக்கு உண்டு என்று பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் நடைமுறையில் ஒரே நட்சத்திரத் தம்பதிகளின் வாழ்க்கை சிறப்பாக இல்லை.

**10. கழுத்தில் ருத்ராட்சம் அணிந்துகொள்ள விரும்புகிறேன். அதற்கு**

நம்பிக்கை, அவ்வளவுதான்.

13. தலையில் இரண்டு சுழி இருந்தால், இரண்டு தாரம் என்கிறார்களே... உண்மையா?

இல்லை. இது வெறும் கற்பனை.

14. மச்சங்களுக்கும் அதிர்ஷ்டத்துக்கும் தொடர்பு உண்டா?

சாமுத்திரிகா லட்சணம் நூலில் உடலின் எந்தப் பாகத்தில் மச்சம் இருந்தால் என்ன பலன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாத்ஸாயனா தமது காமசூத்ராவில் மச்சங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார். பொதுவாக அதிர்ஷ்டசாலிகளை நாம் மச்சக்காரன் என்று பேச்சு வழக்கில் சொல்கிறோம். ஒரு சிலருக்கு யோக தசைகள் ஆரம்பிக்கும்போது உள்ளங்கையில் மச்சம் தோன்றும். அந்தத் தசை முடிந்ததும் அது மறைந்துவிடும். மச்சம் என்பது ஒருவரின் அந்தரங்க விஷயம் என்பதால் அதைக் கொண்டு எதிர்கால பலன் சொல்வது நடைமுறையி சாத்தியமில்லை. மச்சத்துக்கும் அதிர்ஷ்டத்துக்கும் தொடர்பு உண்டு.

15. சிவனை வழிபடாமல் நவகிரகங்களை வழிபடக்கூடாது என்கிறார்களே உண்மையா?

ஆமாம். சிவ வழிபாட்டின் ஓர் அங்கம்தான் நவகிரக வழிபாடு. சிவன் கோயிலில் ஒரு சன்னிதிதான் நவகிரக சன்னிதி. நவகிரகத்துக்கென தனிக் கோயிலும் கிடையாது. தனி வழிபாடும் செய்யக்கூடாது. எமதர்ம ராஜா வழிபட்ட சிவன் கோயில்களில் மட்டும் நவகிரக சன்னிதி இருக்காது. பிற சிவன் கோயில்கள் அனைத்திலும் நவகிரக சன்னிதி உண்டு.

https://t.me/Digital_eLibrary

16. பல குடும்பங்களில் மாமியார் மருமகள் சண்டை உள்ளது. இதனால் அமைதி இன்றித் தவிக்கின்றனர். திருமணத்துக்கு ஆண்-பெண் ஜாதகங்களை ஒப்பிட்டுப் பொருத்தம் பார்க்கும்போது, மாமியார் - மருமகள் ஜாதகத்தையும் அதேபோல பொருத்தம் பார்க்க ஜோதிடத்தில் வழி உள்ளதா?

இது ஒரு நல்ல கேள்வி. அவ்வாறு செய்வது ஜோதிட ரீதியாக சாத்தியமே. சில நட்சத்திரங்களுக்கு ஒரு சில நட்சத்திரங்கள் பகை நட்சத்திரங்களாக உள்ளன. உதாரணத்துக்கு ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் ஆகிய நட்சத்திரங்களுக்கு திருவாதிரை, சுவாதி, சதயம் ஆகியவை பகை நட்சத்திரங்கள். மாமியார் ரோகிணியாகவும் மருமகள் சுவா

தியாகவும் அமைந்தால் வீட்டில் அமைதி என்பதே இருக்காது. இனி திரு மணத்துக்குப் பொருத்தம் பார்க்கும்போது மாமியார் மருமகள் நட்சத் திரங்களையும் கவனத்தில் கொள்ளலாமே.

***17. ஓர் அடி உயரம் உள்ள அம்மன் சிலையை அன்பளிப்பாக ஒருவர் கொடுத்துள்ளார். பஞ்சலோகத்தினால் செய்யப்பட்ட அந்த விக்ரகத்தை வீட்டில் வைத்து பூஜை செய்யலாமா?***

உலோகத்தால் செய்யப்பட்ட பெரிய சிலைகளை வீட்டில் பிரதிஷ்டை செய்து வழிபடக்கூடாது. அவை கோயில்களில் மட்டுமே வழிபடத் தக்கவை. வீட்டில் பூஜை செய்யும் விக்ரகம் நான்கு அல்லது ஐந்து இன்ச் உயரத்துக்கு மேல் இருக்கக்கூடாது. தங்கள் நண்பர் அளித்த அம்மன் சிலையை ஏதேனும் கோயிலுக்குக் கொடுத்து விடுங்கள்.

***18. நாங்கள் வசிக்கும் பகுதியில் பசும்பால் கிடைப்பதில்லை. கோயிலில் அபிஷேகத்துக்கு பாக்கெட் பால் உபயோகிக்கிறோம். இது சரியா, தவறா?***

பொதுவாகக் கோயில்களில் அபிஷேகத்துக்குப் பசும்பால் மட்டுமே பயன்படுத்துவது வழக்கம். ஆனால், தற்காலத்தில் பெரிய நகரங்களில் பசும்பால் கிடைப்பது சற்று அரிதாகி விட்டது. பசும்பால் கிடைக்க வில்லை என்பதால் அபிஷேகம் தடைப்படக் கூடாது. ஆகவே பாக்கெட் பாலில் அபிஷேகம் செய்யலாம். குழந்தைக்குத் தாய்ப்பால் இல்லாவிட் டால் வேறு ஏதேனும் ஒன்றைக் கொடுக்கிறோம் அல்லவா, அதைப் போலத்தான் இதுவும்.

***19. எங்களுக்குத் திருமணம் நடந்து 12 ஆண்டுகள் ஆகின்றன. பொருளாதார நெருக்கடியால் அவதிப்படுகிறோம். திருமணம் நடந்த நேரம் சரியில்லை. தாலியைக் கழற்றிவிட்டு நல்ல நேரத்தில் மீண்டும் தாலி கட்டினால் பிரச்னை தீர்ந்து விடும் என்று ஒரு ஜோதிடர் கூறுகிறார். தங்கள் கருத்து என்ன?***

இது மிகவும் தவறான கருத்து. கட்டிய தாலியைக் கழற்றுவது அமங் கலச் செயல். அது ஏற்புடையதல்ல. பிறந்த நேரத்தை எப்படி மாற்ற முடியாதோ, அதேபோலத் திருமணம் நடந்த நேரத்தையும் மாற்ற முடியாது. கணவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டால் உடனே தாலியைக் கழற்றி உண்டியலில் போடுவதாகச் சில பெண்கள் பிரார்த் தனைச் செய்துகொள்கின்றனர். அதுவே தவறு என நான் சொல்லி வருகி றேன். பணக் கஷ்டம் நீங்க லஷ்மி சகஸ்ரநாமம் படித்து வாருங்கள். மறுதாலி கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

**20.** கோயிலில் கடவுளுக்கு அர்ச்சனை அல்லது அபிஷேகம் செய்யும் போது நமது பெயர், நட்சத்திரம், ராசி, கோத்திரம் ஆகியவற்றைச் சொல்லித்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமா? சாமி பெயருக்குப் பண்ண லாமா?

நமது பெயர், ராசி, நட்சத்திரம், கோத்திரம் சொல்லி எனது இன்ன இன்ன குறைகள் தீரவும், எல்லாவிதமான நன்மைகளும் நடைபெறவும் நான் உன்னை வழிபடுகிறேன் என்று ஒரு மந்திரத்தைச் சொல்லி நமது சார்பாக அர்ச்சகர் பூஜை செய்வார். இதைச் சங்கல்பம் செய்து அர்ச்சனை செய்தல் என்று சொல்வார்கள். இதைக் காம்யார்த்த பக்தி என்று கூறுவதுண்டு. எந்த வேண்டுகோளும் இன்றி உலக நன்மைக் காக ஆலய வழிபாடு செய்வதை நிஷ்காம்ய பக்தி என்பார்கள். இந்த இரண்டாவது வகையைத்தான் சாமி பெயருக்கே அர்ச்சனை செய்துவிடுங்கள் என்று சொல்கிறோம். எப்படிச் செய்தாலும் சாமி பெய ருக்குத்தான் அர்ச்சனை செய்வார்கள். ரமேஷ் முனுசாமியே நம என்று யாரும் உங்கள் பெயருக்குப் பூஜை செய்யப் போவதில்லை. தங்களின் ராசி நட்சத்திரம் போன்ற விவரங்கள் தெரியாதவர்களும் எந்த வேண்டு கோளும் இன்றி வழிபாடு செய்பவர்களும் சாமி பெயருக்கு என்று சொல் லிவிடுவது வழக்கம். உங்களின் பெயர், நட்சத்திரம், ராசி, கோத்திரம் ஆகியவற்றைச் சொல்லி சங்கல்பம் செய்து உங்களுடைய தேவைகளை மனத்தில் பிரார்த்தனை செய்துகொண்டு கோயிலில் அர்ச்சனை செய்ய லாம். அதில் தவறே இல்லை.

**21.** அரச மரத்தைச் சுற்றினால் குழந்தை பிறக்குமா?

நாம் சுவாசிக்கும்போது பிராண வாயு என்னும் ஆக்சிஜனை உள்ளி ழுக்கிறோம். காலை நேரத்தில் வாக்கிங் செய்தால் அதிக ஆக்சிஜன் நமக்குக் கிடைக்கிறது. தாவரங்கள் ஆக்சிஜனை வெளியேற்றுகின்றன. அதிக அளவில் ஆக்சிஜனைத் தருகின்ற மரம் அரச மரம். ஆகவேதான் அது மரங்களின் அரசன் என்று அழைக்கப்படுகிறது. அதிகாலை நேரத் தில் அரசமரத்தைச் சுற்றி வந்தால் அதிக அளவில் ஃபிரஷ் ஆக்சிஜன் கிடைக்கும். அதன் மூலம் ரத்தம் சுத்தமாகும். அதனால் குழந்தை பிறப் புக்குச் சாத்தியக் கூறுகள் அதிகமாகிறது. பல அறிவியல் உண்மைகளை மக்களிடம் எடுத்துச் செல்வதற்காக ஆன்மிக சாயம் பூசிவிட்டனர். அவற் றுள் இதுவும் ஒன்று.

**22.** நவகிரக படங்களை வீட்டில் வைத்து பூஜை செய்யலாமா?

அவசியமில்லை.

**23. மார்கழி மாதத்தில் திருமணப் பேச்சுவார்த்தை நடத்தலாமா? பெண் பார்க்கச் செல்வது தவறா?**

மார்கழி மாதத்தில் திருமண முகூர்த்தம் நடத்தக்கூடாது. மற்றபடி ஜாதகம் கொடுப்பது, வாங்குவது, பொருத்தம் பார்ப்பது, பெண் பார்க்கச் செல்வது, கல்யாணப் பேச்சுவார்த்தை நடத்துவது, பிற ஏற்பாடுகள் செய்வது போன்ற எல்லாமே செய்யலாம்.

**24. பில்லி, சூனியம், ஏவல் போன்றவை விலக என்ன செய்ய வேண்டும்?**

பொள்ளாச்சி அருகில் ஆனைமலையில் உள்ள மாசானி அம்மனை வழிபட்டால் துர்தேவதைகள் அண்டாது. அம்மன் சயனக் கோலத்தில் காட்சியளிக்கும் அபூர்வமான கோயில் அது. அருணகிரிநாதரின் 'அதல சேடனார் ஆட' எனத் தொடங்கும் திருப்புகழ் பாடலைத் தினசரி பாரா யணம் செய்வதாலும் எதிரித் தொல்லைகள் விலகும்.

**25. என் கனவில் அடிக்கடி பாம்பு வருகிறது. பயங்கரமான கனவுகளால் தூக்கம் தடைபடுகிறது. நிம்மதியாக உறங்குவதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?**

ஜாதகத்தில் லக்னத்துக்கு 12ஆம் இடம் நித்திரையைக் குறிக்கும். ராகு - கேதுவுடன் பாபகிரகச் சேர்க்கை 12ல் ஏற்பட்டால் கனவுத் தொல்லை அதிகமாக இருக்கும். இரவு தூங்குவதற்கு முன்பு பஞ்சாமிர்த வர்ணம் படித்துவிட்டுப் படுக்கச் செல்லுங்கள். பஞ்சாமிர்த வர்ணத்தை இயற்றியவர் பாம்பன் சுவாமிகள்.

**26. ஜாதகம் கணிப்பதற்கு எந்தப் பஞ்சாங்கத்தைப் பின்பற்றுவது சரி? வாக்கியமா? திருக்கணிதமா?**

இந்தக் கேள்விக்கு முன்பே ஒருமுறை பதில் அளித்திருக்கிறேன். எனினும் நிறைய பேருக்கு இந்தக் குழப்பம் உள்ளது. மகான்களின் வாக்கில் தோன்றியது வாக்கியப் பஞ்சாங்கம். அது பொய்க்காது. மிகப் பழைமையானதும் வாக்கியப் பஞ்சாங்கம்தான். 20ஆம் நூற்றாண்டில் வாக்கியப் பஞ்சாங்கத்தை, சில ஜோதிடர்கள் திருத்திக் கணித்தனர். அவ் வாறு திருத்திக் கணித்ததுதான் திருக்கணிதம். விஞ்ஞான ரீதியாகக் கணிக்கப்பட்டதாக அதை நியாயப்படுத்துகின்றனர்.

2004-2005களில் சனிப்பெயர்ச்சி ஆகும் தேதியில் இந்த இரண்டு வகை பஞ்சாங்கத்துக்கும் ஒரு வருடம் வித்தியாசம் வந்தது விந்தையிலும்

விந்தை. எப்படிச் சூரியன் ஒருமுறைதான் உதிக்குமோ அதேபோல சனி-குரு போன்ற கிரகங்களும் ஒருமுறைதான் பெயர்ச்சி ஆகும். ஆளுக்கு ஆள் ஒரு தேதி சொல்வது கேலிக்கூத்து. திருநள்ளாறு, ஆலங்குடி, திருநாகேஸ்வரம் போன்ற நவகிரகத் தலங்களில் வாக்கியப் பஞ்சாங்கமே பின்பற்றப்படுகிறது. வீட்டில் நாம் அனுஷ்டிப்பதற்கும் ஜாதகம் கணிப்பதற்கும் வாக்கியப் பஞ்சாங்கமே சிறந்தது. அதன்படி ஜாதகம் கணித்து பலன் கூறினால் நூறு சதவிகிதம் சரியாக இருக்கும் என்பது அனுபவத்தில் நான் கண்டறிந்த உண்மை. வாக்கியம் சரியா... திருக்கணிதம் சரியா என்னும் பட்டிமன்றத்துக்கு நடுவராக வர நான் தயாரில்லை.

**27. வீட்டில் வில்வ மரம் வளர்க்கலாமா?**

வளர்க்கலாம். லக்ஷ்மி தேவி வாசம் செய்யும் மரம் வில்வம். வேத மந்திரத்தில் லக்ஷ்மி தேவியைப் போற்றும் பகுதியான ஸ்ரீசூக்தத்தில் 'வனஸ்பதி ஸ்தவ வ்ருட் ஷோத பில்வ' என்று வில்வ மரம் சிறப்பித்துப் பேசப்படுகிறது. வீட்டில் வில்வ மரம் வளர்ந்தால் செல்வச் செழிப்பு உண்டாகும்.

**28. சாமிக்குப் படைக்கும் உணவுப் பொருட்களில் வெங்காயம், பூண்டு சேர்க்கலாமா?**

கூடாது.

**29. மிருகசீரிஷம், ஸ்வாதி, திருவோணம், அனுஷம் ஆகிய நான்கு நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குத் திருமணம் செய்ய வரன் பார்க்கும்போது ஜாதகப் பொருத்தமே பார்க்க வேண்டாம். அப்படியே திருமணம் செய்யலாம் என்று சிலர் கூறுகின்றனர். இது சரியா?**

தவறு; முற்றிலும் தவறு.

**30. பரிகாரம் செய்ய நாள் பார்க்க வேண்டுமா?**

அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமி, அவரவர் பிறந்த நட்சத்திரம் வரும் நாள் ஆகிய தினங்களில் பரிகாரம் செய்வது உத்தமம்.

**31. பிரசவத்துக்கு நல்ல நாள், நேரம் முன்கூட்டியே நிர்ணயம் செய்து சிசேரியன் ஆபரேஷன் செய்வது சரியா?**

அப்படிச் செய்வதில் தவறில்லை. பிறக்கப் போகும் குழந்தை நல்ல யோகமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதும் நியாயம்தான்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் செங்கண் நாயனார் என்னும் அரசர் நேரம் நிர்ணயம் செய்து பிறந்தவர் என்பதால், இதற்கு நல்ல முன்னு தாரணம் உள்ளது. நேரம் நிர்ணயம் செய்வது சுலபம். ஆனால், அந்த நேரத்தில் பிரசவம் நிகழ இறை அருள் வேண்டும்.

**32. சாந்தி முகூர்த்தம் செய்வதற்கு உகந்த நட்சத்திரங்கள் எவை?**

அஸ்வினி, உத்திரம், சித்திரை, சுவாதி, உத்திராடம், சதயம் ஆகிய நட் சத்திரங்களில் சாந்தி முகூர்த்தம் நடைபெற்றால் நல்ல குழந்தை பிறக்கும் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. இவற்றை கர்ப்பதான நட்சத்திரங் கள் என்று சொல்வார்கள்.

**33. குழந்தை பிறந்தால் எத்தனை நாள் கழித்துக் கோயிலுக்குப் போக லாம்?**

பத்து நாட்கள் முடிந்து பதினோராம் நாள் முதல் எல்லாக் கோயிலுக்கும் போகலாம்.

**34. வீட்டில் பூஜை அறையில் எந்த வடிவத்தில் உள்ள ஆஞ்சநேயர் படத்தை வைத்து வழிபடலாம்?**

சஞ்சீவி இலையைக் கொண்டு வா என்றதும் மலையையே கொண்டு வந்த மாவீரன் ஆஞ்சநேயன். துளசி இலை சமர்ப்பித்து வணங்கினால், மலை போன்ற துன்பங்கள் நீங்கும். வீட்டில் எந்த ரூபத்தில் வேண்டுமா னாலும் அனுமன் படம் வைத்து வணங்கலாம்.

**35. சஷ்டியப்தபூர்த்தி கொண்டாடவிருக்கிறேன். ஹோமங்கள் வீட்டில் செய்யலாமா அல்லது கோயிலில் செய்ய வேண்டுமா?**

இடவசதி இருந்தால் வீட்டிலேயே செய்யலாம். இல்லாவிடில் திருக்க டையூர் சென்று அபிராமி அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் செய்யலாம்.

**36. அமாவாசை, நிறைந்த நாள் என்கிறார்கள். அன்றைய தினத்தில் எதைச் செய்யலாம்; எதைச் செய்யக்கூடாது?**

அமாவாசை நாளில், திருமணம் போன்ற சுப விசேஷங்கள் செய்யக் கூடாது. அது பிதுர்களுக்கு உரிய தினம். பிதுர்கள் என்றால், நம் குடும்பத் தில் வாழ்ந்து மறைந்த முன்னோர்கள். அமரர்களை வேண்டித் துதித்து, அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறும் நாள் அமாவாசை. அந்த நாளில், அசையாச் சொத்து வாங்குவது, பத்திரப் பதிவு செய்வது, வீடு மனை,

நிலம் வாங்க முன்பணம் கொடுப்பது, சொத்து தொடர்பான விஷயங்களில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பது, வழக்கு தொடுப்பது, புகார் பதிவு செய்வது, நீதி கேட்டுப் போராட்டம் செய்வது போன்றவை செய்யலாம். கல்வி கற்க ஆரம்பிப்பதும் கூடாது. அரசு அதிகாரிகளிடம் மனு கொடுக்க அது உகந்த நாள். அமாவாசையைவிட பௌர்ணமிதான் நிறைந்த நாள். அதுவே மதி நிறைந்த நல்ல நாள். அமாவாசையன்று தான தர்மங்கள் செய்வதும் பரிகாரங்கள் செய்வதும் நல்லது.

**37. கண் திருஷ்டி என்பது உண்மையா? அதிலிருந்து நம்மைப் பாது காத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்?**

இது முற்றிலும் உண்மை. நல்ல எண்ணம் உடையவர்கள் நம்மையோ, நமது வீட்டையோ, நாம் உண்ணும் உணவையோ பார்க்கும் போது கண் திருஷ்டி படாது. வயிற்றெரிச்சல், பொறாமை போன்ற தீய எண்ணம் உள்ளவர்களின் பார்வை படும்போது கண்ணேறு படும். திருஷ்டி சுற்றிப் போடுவது ஒன்றுதான் இதற்குத் தீர்வு. ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில், சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் சுற்றிப் போடுவது வழக்கம். மூன்று மிளகாய் வற்றலையும் சிறிது கல் உப்பும் ஓர் ஆழாக்கில் போட்டு, அதைச் சுற்றி, எரியும் அடுப்பில் போடுவார்கள். பொதுவாக எரியும் நெருப்பில் மிளகாய் விழுந்தால் அந்தப் புகை நமக்குக் கமரும். ஆனால் கண் திருஷ்டி உள்ளவர்களுக்குச் சுற்றிப் போட்டால் அது கமராது. குமுட்டி அடுப்பு இல்லாதவர்கள் கேஸ் அடுப்பில் போடலாம். அடிக்கடி சுற்றிப் போடக்கூடாது.

**38. கல்யாணம் நடைபெறும் மண்டபம் அல்லது வீட்டு வாயிலில் வாழை மரம் கட்டுவது ஏன்?**

திருமணம் மட்டுமின்றி அனைத்து சுப விசேஷங்களுக்கும் வாழை மரம் வாசலில் கட்டுவது தொன்று தொட்டு நிலவி வரும் வழக்கம். வாழையடி வாழையாக வம்சம் வளர வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது போலும். வாழை மரம் ஒரு மங்கலச் சின்னம்.

**39. வட இந்தியாவில் இந்துக்கள் செவ்வாய்க்கிழமையில் திருமணம் செய்கின்றனர். புதிய தொழில் தொடங்குகின்றனர். இது சரியா?**

முஜே நை மாலும்.

**40. எனக்கு கேது தசை ஆரம்பம் ஆகி 3 வருடங்களாகிறது. இந்தக்**

திசையில் உடல் பருமன் மிகவும் அதிகமாகிவிட்டது. எடையைக் குறைத்து ஒல்லியாக, ஜோதிட ரீதியாக ஏதேனும் வழி உண்டா?

கொள்ளு வடை தயாரித்து சனிக்கிழமைதோறும் அதை கேதுவுக்குப் படைத்துவிட்டுச் சாப்பிடுங்கள். பழையபடி 'ஸ்லிம்' ஆகிவிடுவீர்கள். கேதுவின் தானியம் கொள்ளு. இளைச்சவனுக்கு எள்ளு; கொழுத்தவனுக்குக் கொள்ளு என்பது ஜோதிடப் பழமொழி. சனி தசையில் உடல் இளைக்கும். அப்போது எள்ளு சாதம் அல்லது எள்ளுருண்டை உட்கொள்ள வேண்டும். சனியின் தானியம் எள்ளு. இது மருத்துவ ரீதியாகவும் நல்ல வைத்தியம். லக்னத்துக்கு இரண்டாமிடத்தில் சனியும் கேதுவும் இருந்தால் அவர்களுக்கு நகைச்சுவை உணர்வு மிகவும் குறைவாக இருக்கும். அவர்களுக்கு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்.

**41. ஒவ்வொரு முறை கோயிலுக்குச் செல்லும்போதும் அவசியம் தீபம் ஏற்றி வழிபட வேண்டுமா?**

அப்படி எந்தக் கட்டாயமும் இல்லை.

**42. வியாபாரம் மேன்மேலும் வளர என்ன செய்ய வேண்டும்? செல்வச் செழிப்பு ஏற்பட என்ன பரிகாரம் செய்வது?**

குபேரன் வழிபாடு செய்யுங்கள். சென்னைக்கு அருகில் உள்ள ரத்னமங்கலம் குபேரன் கோயிலுக்குச் சென்று வடதிசைக் கடவுளை வணங்குங்கள்!

**43. தர்மம் செய்ய விரும்புகின்றவர்களுக்குத் தங்கள் அறிவுரை என்ன?**

பசு பாதுகாப்பு மிகச் சிறந்த அறம். கறவை நின்றுவிட்ட பசு மாடுகள் கசாப்புக் கடைக்குச் செல்வதை முற்றிலுமாகத் தடுத்து நிறுத்த வேண்டும். பசுத்தாயின் பாலைக் குடித்து வளர்ந்த நாம், அவற்றைக் கடைசி வரை காப்பாற்ற வேண்டும். கோ சம்ரட்ஷணம் என்னும் பசு பாதுகாப்பு செய்ய, நமது வருமானத்தில் ஒரு பகுதியை நன்கொடையாக அளிக்க அனைவரும் முன்வர வேண்டும். கோமாதா வழிபாடு ஒவ்வோர் ஊரிலும் நடைபெற வழிவகை செய்ய வேண்டும். பசுவைப் பூஜிக்க வேண்டும்; புசிக்கக் கூடாது. இதுவே உயர்ந்த தர்மம்.

**44. பங்குனி மாதத்தில் புதிய வீட்டுக்கான பத்திரப்பதிவு செய்யலாமா? கிரஹப்பிரவேசம் செய்யலாமா?**

பத்திரப்பதிவு செய்யலாம். ஆனால், கிரஹப்பிரவேசம் பங்குனியில்

செய்ய வேண்டாம். சித்திரை பிறக்கட்டும். பங்குனியில் கிரஹப்பிரவேசம் தவிர மற்ற எல்லா சுபவிசேஷங்களும் செய்யலாம்.

**45. ஒவ்வொரு கிழமைக்கும் ஒவ்வொரு நிற உடை அணிந்துகொள்ளும் வழக்கம் சமீப காலமாக அதிகரித்துள்ளதே? அது பற்றித் தங்கள் கருத்து என்ன?**

நவகிரகம் ஒவ்வொன்றுக்கும் ஒரு நிறம் உண்டு. செவ்வாய்க்கு சிவப்பு, புதனுக்கு பச்சை, குருவுக்கு மஞ்சள், சுக்கிரனுக்கு வெள்ளை, சனிக்கு நீலம் என்பது போல அந்தக் கிரகத்தின் ஒளியிலிருந்து தோன்றும் வண்ணங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிழமைக்கும் ஏற்ப வண்ண வண்ண ஆடைகள் அணிந்துகொண்டால் பார்ப்பதற்கு வேண்டுமானால் அழகாக இருக்கும். ஆனால் ஜோதிட ரீதியாகப் பெரிய மாற்றங்கள் எதுவும் நிகழாது.

**46. ஏழரைச் சனி என்பது ஒரு மனிதனுக்கு எத்தனை முறை வரும்?**

ஒவ்வொருவருக்கும் மூன்று அல்லது நான்கு முறை ஏழரை சனி வரும். ஒரு ராசியைக் கடக்க சனி எடுத்துக்கொள்ளும் காலம் இரண்டரை வருடங்கள். பன்னிரண்டு ராசியையும் ஒருமுறை வலம் வர சனிக்கு 30 வருடங்களாகும். அவரவர் ராசிக்கு முன் வீடான 12ஆம் இடத்தில் இரண்டரை வருடங்களும், ராசியில் சனி உள்ள இரண்டரை வருடங்களும், ராசிக்கு அடுத்த வீடான 2ஆம் இடத்தில் சனி உள்ள இரண்டரை வருடங்களும் சேர்த்து மொத்தம் ஏழரை வருடக் காலத்தை ஏழரை நாட்டுச் சனி என்கிறோம். முதல் சுற்று ஏழரைச் சனியை மங்கு சனி என்றும் இரண்டாவது சுற்று ஏழரைச் சனியைப் பொங்கு சனி என்றும் மூன்றாவது சுற்று ஏழரைச் சனியை மாரக சனி என்றும் கூறுவர். முதல் சுற்று சிறிய வயதில் வரும்போது உடல்நலக் குறைவு, கல்வித் தடை, தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள், தாய்-தந்தையரிடையே பிரிவு, குடும்பத்தில் குழப்பம் போன்ற தீய விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

மத்திம வயதில் இரண்டாவது சுற்றான பொங்கு சனி நடைபெறும்போது திருமணம் நடக்கும், நல்ல வேலை கிடைக்கும், வாழ்க்கை செட்டில் ஆகிவிடும். மூன்றாவது சுற்றில் சிலருக்குக் கடுமையான உடல் உபாதைகள் ஏற்படவும், தொழிலில் நஷ்டம் ஏற்படவும் வாய்ப்புண்டு. குழந்தைப் பருவத்தில் முதல் சுற்று வந்தால் 90 வயது வரை வாழ்ந்து நான்காவது சுற்று ஏழரைச் சனியில் மரணம் சம்பவிக்கும்.

**47. சாம்பிராணிப் புகை பேய், பிசாசுகளை விரட்டும், லட்சுமி கடாட்சம் உண்டாக்கும் என்றெல்லாம் இன்றும் சிலரால் நம்பப்படுகிறது. அதுபற்றி தங்கள் கருத்து?**

சாம்பிராணிப் புகை கிருமிநாசினி. காற்றில் பரவும் வைரஸ் கிருமிகளை அந்தப் புகை அழித்துவிடும். அந்தக் கிருமிகளைத்தான் பேய், பிசாசு என வர்ணித்திருக்கிறார்கள் எனக் கருதுகிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதால் லட்சுமி கடாட்சம் உண்டாகும்.

**48. செவ்வாய் தோஷம் என்பதன் விளக்கம் என்ன?**

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவரவர் ஜாதகத்தில் லக்னம், இரண்டாமிடம், நான்கு, ஏழு, எட்டு, பன்னிரண்டு ஆகிய ஆறு வீடுகளில் ஏதேனும் ஒன்றில் செவ்வாய் இருந்தால், அதைச் செவ்வாய் தோஷ ஜாதகம் என்பார்கள். இதை லக்னத்திலிருந்து எண்ண வேண்டும். ராசியிலிருந்தும் சுக்கிரனில் இருந்தும் எண்ணிக் கணக்கிட வேண்டாம்.

செவ்வாய் தோஷம் உள்ளவர்களை மணந்துகொண்டால் உயிருக்கே ஆபத்து உண்டாகும் என்று கூறப்படுவது முற்றிலும் தவறான கருத்து. அது எந்த விதத்திலும் கணவன் அல்லது மனைவியின் ஆயுளை பாதிக்காது. தம்பதியர் இருவருக்கும் 'ப்ளட் க்ரூப்' பொருந்தியிருக்க வேண்டும் என்பதற்காக ஏற்பட்டுள்ள விஞ்ஞான ரீதியான விஷயம்தான் செவ்வாய் பொருத்தம்.

செவ்வாய்க்கு மங்களன் என்னும் பெயரும் உண்டு. அது யாரையும் கொல்லாது. தம்பதியரின் ஆரோக்கியம் சிறந்து விளங்கவும் குழந்தை பாக்கியம் ஏற்படவும் இது மிகவும் முக்கியமானது. ஆண்-பெண் இருவர் ஜாதகத்திலும் சம அளவு செவ்வாய் தோஷம் இருந்தால் அவர்கள் நீண்ட காலம் நோய் நொடி இன்றி மகிழ்ச்சியாக வாழ்வார்கள். ஒருவருக்கு இருந்து மற்றவருக்கு அந்தச் செவ்வாய் தோஷம் இல்லாவிடில் உடல் உபாதைகள் காரணமாகத் தாம்பத்ய உறவு சிறக்காது. அனைத்து லக்னங்களில் பிறந்தவர்களுக்கும் 1,2,4,7,8,12 ஆகிய வீடுகளில் செவ்வாய் இருந்தால் அது தோஷம்தான். இதற்கு எந்த விதிவிலக்கும் கிடையாது. செவ்வாய் சுக்கிரனுடன் சேர்ந்தாலும் சனியுடன் சேர்ந்தாலும் தோஷம் குறைவதில்லை. சூரியனுடன் செவ்வாய் எங்கு இணைந்தாலும் அது பிரிவை உண்டாக்கும்.

திருவிடைக்கழி சென்று குராவடி முருகனை வழிபட்டால் செவ்வாய் தோஷத்தால் ஏற்படும் தீய பலன் வெகுவாகக் குறையும்.

**49. தினமும் மாலை எனது அலுவலகப் பணிகள் முடிவடைந்ததும்**

**கோயிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு, எனது வீட்டுக்கு வருகிறேன். வீடு திரும்பியதும் குளிப்பது தவறா?**

நல்ல விஷயங்களுக்குச் சென்று விட்டு வீடு திரும்பியதும் குளிக்கக் கூடாது. கோயிலுக்குச் சென்று சாமி கும்பிடுவது ஒரு மங்களகரமான நல்ல விஷயம். அதன் பிறகு நீராடுவது தவறுதான். இரண்டுமுறை ஸ்நானம் செய்ய வேண்டும் என நீங்கள் விரும்பினால் வீட்டுக்கு வந்து குளித்துவிட்டு அதன் பிறகு கோயிலுக்குச் செல்லுங்கள்.

**50. வங்கக் கடல் கடைந்த மாதவனை என்று திருப்பாவையில் ஆண்டாள் பாடுகின்றாரே, நமது வங்காள விரிகுடாவைக் கடைந்தா தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் எடுத்தார்கள்?**

வங்கம் என்றால் கப்பல் என்று ஒரு பொருள் உண்டு. திருப்பாற்கடலில் மகாவிஷ்ணுவின் திருவடிகள் வங்கமாக உள்ளன. ஆன்மாக்கள் பிறவிப் பெருங்கடலைக் கடக்க உதவுவது நாராயணனின் திருவடி என்னும் கப்பல். இந்த அர்த்தத்தில்தான் ஆண்டாள் இப்பாசுரத்தைப் பாடியிருப்பார் என்பது அடியேனின் கருத்து.

**51. ஆயில்யம், மூலம் நட்சத்திரங்களில் பிறந்த பெண் வீட்டுக்கு மருமகளாக வந்தால் மாமனார் இறந்து விடுவார் என்று பலராலும் நம்பப்படுகிறதே?**

இது ஒரு மிகப் பெரிய மூட நம்பிக்கை. வாழ்க்கைப் பயணம் தொடங்கும்போதே முடிவும் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. இறப்பும் பிறப்பும் இறைவனால் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட விஷயம். வீட்டுக்கு வரும் மருமகளால் மாமனார் உயிரிழப்பார் என்று சொல்வது பேதைமை. நன்றும் தீதும் பிறர் தர வாரா.

**52. சுனாமி, பூகம்பம் போன்ற பேரழிவுகளை ஜோதிடத்தின் மூலம் முன்னதாகவே அறிந்துகொள்ள முடியுமா? இத்தகைய இயற்கைச் சீற்றங்கள் நிகழாமல் தடுக்க பரிகாரம் என்ன?**

ரோகிணி, திருவாதிரை, ஹஸ்தம், சுவாதி, திருவோணம், சதயம்... ஆகிய ஆறு நட்சத்திரங்களில் சனி வக்ர கதியில் சஞ்சரிக்கும்போது இயற்கைச் சீற்றத்தால் பேரழிவுகள் ஏற்படும். இந்த ஆறு நட்சத்திரங்களையும் சனி வக்ர கதியில் கடக்கும்போது ஒவ்வொரு முறையும் உலகின் ஏதேனும் ஒரு பகுதியில் மிகப் பெரிய அழிவு ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. ஒரு நட்சத்திரத்தைக் கடக்க சனி எடுத்துக் கொள்ளும் காலம் சுமார் 406 நாட்கள். அதில் ஆறு மாதம் வக்ர கதியில் செல்லும். அதில் ஏதேனும் ஒரு காலகட்டத்தில் இதுபோன்ற அழிவு

ஏற்படும். இதுபோன்ற அழிவுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க அடிக்கடி அதிருத்ர யாகம் நடத்தப்பட வேண்டும்.

**53. அக்னி நட்சத்திரம் என்னும் கத்தரி நடைபெறும்போது திருமணம் செய்யலாமா?**

திருமணம், கிரகப்ரவேசம், வளைகாப்பு, உபநயனம் போன்ற அனைத்து விதமான சுப விசேஷங்களும் நடத்தலாம். மரம், செடி கொடி களை வெட்டுவது, தோட்டத்தைச் சீரமைப்பது போன்ற விவசாயப் பணிகளை மட்டும் இந்தக் காலத்தில் தவிர்க்க வேண்டும்.

**54. தேய்பிறையில் திருமணம் செய்யலாமா?**

செய்யலாம். அதில் தவறில்லை.

**55. பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அனைவரும் தரணி ஆள்வார் களா?**

அவரவர் தொழிலில் முன்னிலை வகிப்பார்கள்.

**56. கோளறு பதிகத்தில் 'ஒன்பதொடொன்றோடே பதினெட்டோ டாறும் உடனாய நாட்கள் அவைதாம்' என்று வருகிறதே, இந்த எண்ணிக் கையின் கணக்கு எதைக் குறிக்கிறது?**

தீதுறு நட்சத்திரங்கள் என்று 12 நட்சத்திரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நாட்களில் பணம் கடனாகக் கொடுத்தால் திரும்பவும் வராது. பயணம் மேற்கொள்ளக் கூடாது. மருத்துவ சிகிச்சை தொடங்கக் கூடாது. இது தொடர்பான வெண்பா ஒன்றை பஞ்சாங்கத்தில் காணலாம். ஆதிரை பரணி கார்த்திகை ஆயில்ய முப்பூர கேட்டை தீதுறு விசாகம் சோதி சித்திரை மகம் ஈராறில் மாதனங் கொண்டார் தாரார் வழி நடைபோனார் மீளார் பாயினில் படுத்தார் தேறார் பாம்பின்வாய் தேரை தானே என்பது அந்தச் செய்யுள்.

திருவாதிரை, பரணி, கார்த்திகை, ஆயில்யம், பூரம், பூராடம், பூரட் டாதி, கேட்டை, விசாகம், சுவாதி, சித்திரை ஆகிய பன்னிரண்டும் பணம் கொடுத்தல், பயணித்தல், மருந்து உட்கொள்ளத் தொடங்குதல் ஆகிய வற்றைத் தவிர்க்க வேண்டிய நட்சத்திரங்கள்.

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு அப்பரும் திருஞான சம்பந்தரும் பயணம் செல்ல வேண்டியிருந்தது. 'இன்று நாளும் கோளும் நன்றல்ல' என்று அப்பர் பெருமான் கூறுகிறார். சிவனடியார்களுக்கு எல்லா நாட்க

ளும் எல்லாக் கோள்களும் நன்மையே செய்யட்டும் என்று இறைவனை பிரார்த்தனை செய்துகொண்டு, சம்பந்தர் பாடிய பாடல் கோள் அறு பதிகம். அப்பாடலில் இந்தத் தீதுறு நட்சத்திரங்கள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

ஒன்பது என்றால் ஒன்பதாவது நட்சத்திரமான ஆயில்யம். ஒன்பதொடொன்று என்பது 9+1= 10. அதாவது மகம். ஒன்பதொடேழு 9+7=16. அதாவது பதினாறாவது நட்சத்திரமான விசாகம். பதினெட்டு என்பது கேட்டை நட்சத்திரத்தைக் குறிக்கும். ஆறு என்பது திருவாதிரையைக் குறிக்கும். அன் பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே என்பது ஞானசம்பந்தப் பெருமான் வாக்கு.

இந்த 12 நாட்களில் நாம் முக்கியமான பணிகள் ஏதேனும் செய்ய வேண்டி இருந்தால் கோளறு பதிகம் படித்துவிட்டு வெளியே செல்ல வேண்டும். தினமுமே கோளறு பதிகம் படித்தால் நவகிரக தோஷங்கள் விலகும்.

### 57. ஒற்றைப்படை வயதில் மட்டும்தான் திருமணம் செய்ய வேண்டுமா?

அப்படி எந்தக் கட்டாயமும் இல்லை. 22, 24, 26, 28 ஆகிய வயதுகளில் கூட திருமணம் செய்யலாம்.

### 58. மூத்த மகளுக்குப் பரிகாரம் செய்வதற்காக அடுத்த மாதம் திருமணஞ்சேரி செல்லவிருக்கிறோம். இளைய மகளையும் உடன் அழைத்துச் செல்லலாமா?

கோயில்களுக்குப் போகும்போது உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த யாரை வேண்டுமானாலும் உடன் அழைத்துச் செல்லலாம். கோயிலில் அர்ச்சனை செய்யும்போது குடும்பத்தில் உள்ள அனைவரின் பெயர், நட்சத்திரம் சொல்லி சங்கல்பம் செய்ய வேண்டும்.

### 59. அட்சயத் திருதியை நாளில் என்ன செய்ய வேண்டும்?

கும்பகோணம் பெரிய தெருவில் 12 கருட சேவை அன்றைய தினம் நடைபெறும். 12 வெவ்வேறு கோயில்களிலிருந்து பெருமாளை கருட வாகனத்தில் எழுந்தருளப்பண்ணி கும்பகோணத்துக்கு மேளதாளத்துடன் வீதி உலா எடுத்து வருவார்கள். 6.5.2011 அன்று காலை இந்த வைபவம் நடைபெறும். அன்று 12 பெருமாளை ஒரே நேரத்தில் சேவித்துவிட்டு, இயன்ற அளவு தானதர்மங்கள் செய்யுங்கள். இதுதான்

உண்மையான அட்சயத் திருதியைக் கொண்டாட்டம்.

**60. எங்கள் வீட்டுக் குழந்தைக்கு முதல் முறையாக முடி இறக்கப் போகி றோம். அதை எந்த நாளில் செய்ய வேண்டும்?**

திங்கள், புதன், வியாழன் அல்லது வெள்ளிக்கிழமையும் ரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ஹஸ்தம், அனுஷம், மூலம், திரு வோணம், சதயம், ரேவதி ஆகிய நட்சத்திரமும் சேர்ந்து வரும் சுபநாளில் குழந்தைக்கு முதன் முதலில் முடி காணிக்கை கொடுக்கலாம்.

**61. என் மகளுக்குத் திருமணமாகி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்களுக்கு இன்னும் குழந்தை பிறக்கவில்லை. உடல் ரீதியாக எந்தக் குறையும் இல்லை என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். புத்திர பாக்கியம் ஏற்பட என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?**

ஸ்ரீமத் பாம்பன் குருதாச சுவாமிகள் (1850-1929) அருளிச் செய்த வேற்குழவி வேட்கை என்னும் பாடலைத் தினமும் நம்பிக்கையுடன் பாராயணம் செய்து வரச் சொல்லுங்கள். திருவான்மியூரில் உள்ள அந்த மகானின் சமாதிக் கோயிலுக்குச் சென்று வழிபடச் செய்யுங்கள். டாக்டர் களால் கைவிடப்பட்ட பல தம்பதிகளுக்கு வேற் குழவி வேட்கை படித்து புத்திர பாக்கியம் உண்டாகியுள்ளது. ஸ்ரீமத் பாம்பன் குருதாச சுவாமிகள் அருளிய ஸ்ரீமத் குமாரசாமியம் என்ற நூலில் ஐந்து காண் டங்கள் உள்ளன. அவற்றுள் நாலாவதாகிய வேட்கைக் காண்டத்துள் முதற் பதிகமாக அமைந்தது வேற்குழவி வேட்கை.

**62. ஒரு குறிப்பிட்ட விஷயத்துக்காக ஏதேனும் பிரார்த்தனை செய்து கொண்டால் அந்த நேர்த்திக் கடனை எத்தனை நாட்களுக்குள் நிறை வேற்ற வேண்டும்?**

இறைவனுக்கு நாம் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்பது முக்கியம். வேண்டுதல்களை நிறைவேற்ற கால அளவு எதுவும் கிடையாது. விரைவில் செய்வது நல்லது.

**63. கோயிலுக்குச் சென்று தீபம் ஏற்றும்போது ஒவ்வொரு முறையும் புதிய அகல் உபயோகிக்க வேண்டுமா? பிறர் உபயோகித்த அகலில் நாம் விளக்கேற்றலாமா?**

பிறர் உபயோகித்த அகல் விளக்கை ஒரு காகிதத்தால் துடைத்துவிட்டு புதிய திரி போட்டு விளக்கேற்றலாம். ஒவ்வொரு முறையும் புதிய அகல்

விளக்கு பயன்படுத்த வேண்டும் என்பது அவசியமில்லை.

**64. இல்லறத்தில் உள்ளவர்கள் நிரந்தரமாக ருத்ராட்சம் அணிந்து கொள்ளலாமா?**

அணிந்துகொள்ளலாம். கழுத்தில் ருத்ராட்சம் அணிந்துகொள்பவர்கள் அசைவ உணவு உட்கொள்ளக்கூடாது. மற்ற எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. குழந்தை முதல் பெரியவர்கள் வரை ருத்ராட்சம் அணியலாம்.

**65. செவ்வாய் தோஷம் பற்றி விளக்கம் அளித்துள்ளீர்கள். அதில் விதி விலக்குகள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லையே?**

எல்லா விதிகளுக்கும் விதிவிலக்குகள் உண்டு. ஆனால், சிலர் விதி விலக்குகளையே விதிகளாக நினைத்து விடுகின்றனர். விதிகள் வேறு விதிவிலக்குகள் வேறு. செவ்வாய் தோஷம் என்பது என்னைப் பொறுத்த வரை அஞ்சி நடுங்க வேண்டிய ஒரு கடுமையான தோஷமே அல்ல. 12 கட்டங்களில் 6 இடங்களில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் என்கிறார்கள். அப்படியானால், மொத்த ஜனத்தொகையில் பாதிப் பேர் செவ்வாய் தோஷம் உள்ளவர்களா? மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி 'பரிகாரம் செய்து வைக்கிறேன்" என்று சொல்லிப் பணம் பறிக்கும் ஒருசில நயவஞ்சகர்களுக்கு இந்தச் செவ்வாய் தோஷம் பணம் காய்க்கும் மரமாக உள்ளது. ஜாதகத்தில் 12 ராசிகளில் எந்த இடத்தில் செவ்வாயும் சூரியனும் சேர்ந்தாலும் அது கடுமையான பிரிவு தோஷம். திருமணம் நடக்காது. அல்லது மிகவும் தாமதமாகும் அல்லது பிரிந்து விடுவார்கள்.

**66. ஒரு பெண் திருமணமாகிப் புகுந்த வீட்டுக்குச் சென்ற பிறகும் அவளது பிறந்த வீட்டில் உள்ள தோஷங்கள் பாதிப்பை ஏற்படுத்துமா?**

நிச்சயமாகப் பிறந்த வீட்டு தோஷங்கள் திருமணத்துக்குப் பிறகும் தொடரும். வேறு கோத்திரத்துக்குச் சென்றுவிட்டால் தொப்புள் கொடி உறவு அற்றுப் போகாது. சன்னியாசிகளுக்கே தாய் என்னும் உறவு கடைசிவரை உண்டு என்பதை ஆதிசங்கரர், பட்டினத்தார் போன்ற துறவிகளின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தால் புரியும். முன்னோர் கள் செய்த பாவங்களும் புண்ணியங்களும் ஆண்-பெண் என்னும் பாகு பாடின்றி அனைவருக்கும் தொடர்ந்து வரும். தாய் வீட்டுச் சீதனமும் சொத்தில் பங்கும் மட்டும்தான் வரும் என்று நினைத்து விடாதீர்கள். திருமணம் ஆன பெண்களுக்கு, கணவன் வீட்டாரின் முன்னோர்கள்

செய்த பாவ - புண்ணியங்களும் சேர்ந்து பலன் அளிக்கும்.

**67. தந்தை காலமாகிவிட்டார். அவருக்கு ஆண் வாரிசு கிடையாது. ஆகவே, அவரது இறுதிச் சடங்குகளை எனது 16 வயது மகன் செய்தான். பெற்றோர்கள் உயிரோடு இருக்கும்போது எனது மகன் தாத்தாவுக்கு ஈமக் கடன்களைச் செய்தது தவறு எனச் சிலர் கூறுகின்றனர். மூத்த மாப்பிள்ளை யான எனது கணவர்தான் செய்திருக்க வேண்டும் என்றும் உறவினர்கள் கூறுகின்றனர். எனது கணவருக்கும் பெற்றோர்கள் உள்ளனர். அந்த நேரத் தில் ஆளுக்கு ஆள் ஓர் அபிப்ராயம் சொல்லிக் குழப்பி விட்டனர். என் தந்தையின் முதல் வருட திவசத்தில் என் மகன் திவசம் செய்யலாமா என்னும் குழப்பத்தில் உள்ளோம். தயவுசெய்து தெளிவுபடுத்தவும்.**

தாய்வழிப் பாட்டனாருக்கு கர்மா செய்ய பேரனுக்கு அதிகாரம் உண்டு. பெற்றோர்கள் உயிரோடு இருக்கும் போதே தாய்வழிப் பாட்ட னாருக்குப் பேரன் கொள்ளி வைக்கலாம் என்று நமது சாஸ்திரங்களில் உறுதிபட கூறப்பட்டுள்ளது. நீங்கள் செய்தது முற்றிலும் சரியே. வருடா வருடம் வரும் திவசங்களையும் உங்கள் மகனே செய்யலாம். மாதா மஹான் என்னும் தாய்வழிப் பாட்டனாருக்குக் கர்மாக்களைச் செய்ததில் எந்தத் தவறும் கிடையாது.

**68. எனக்குத் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டுள்ளது. திருமணம் நிச்சயமான பிறகு திருப்பதிக்குச் சென்று முடி காணிக்கை கொடுக்க வேண் டும் என்னும் பிரார்த்தனை நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாமல் உள் ளது. திருமணம் நிச்சயமான பிறகு முடி காணிக்கை செலுத்தக் கூடாது எனச் சிலர் கூறுகின்றனர். தங்கள் கருத்து என்ன?**

திருமணம் நிச்சயம் ஆனதற்கும் முடி காணிக்கை செலுத்துவதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. திருமணத்துக்கு முன்பாகவே திருப்பதிக் குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுங்கள்.

**69. ஆனி மாதத்தில் திருமணம் செய்யலாமா?**

வீட்டுக்கு மூத்த மகன் கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவராக இருந் தால் அவருக்கு ஆனி மாதத்தில் திருமணம் செய்யக்கூடாது. மற்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு ஆனி மாதத்தில் திருமணம் செய்யலாம்.

**70. மிகப் பெரிய பாவச் செயல்கள் எவை?**

ஒன்று சேர்ந்து வாழ ஆசைப்படும் கணவன் - மனைவியைச் சேர

விடாமல் பிரித்து வைப்பது, கருவில் உள்ள சிசுவை அபார்ஷன் செய்து கொல்வது, பசுவதை செய்வது ஆகிய மூன்றும் மிகப் பெரிய பாவச் செயல்கள்.

**71. ஒருவர் தமது நட்சத்திர பலன், ராசி பலன் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது?**

இரண்டும் ஏறக்குறைய ஒரே மாதிரிதான் இருக்கும். ராசி பலனைக் காட்டிலும் நட்சத்திர பலன் மிகவும் துல்லியமானது. சந்திராஷ்டமம் பார்க்கும்போது ராசிக்குத்தான் பார்க்க வேண்டும்.

**72. என் தந்தை பூஜைகளை வெகு சிறப்பாகச் செய்துகொண்டிருந்தார். அவர் மறைந்து சில ஆண்டுகள் ஆகின்றன. நான் அடிக்கடி வெளிநாடு செல்வதால் குடும்ப பூஜைகளைத் தொடர்ந்து செய்ய இயலவில்லை. ஸ்ரீசக்ரம், மகாமேரு, பாணலிங்கம், சாளக்ராமம் போன்ற அனைத்து பூஜை விக்கிரகங்களையும் ஒரு கோயிலுக்குக் கொடுத்து விட்டேன். நான் செய்தது சரியா, தவறா?**

சரியாகத்தான் செய்திருக்கிறீர்கள். அவற்றை வீட்டில் வைத்துக் கொண்டு எந்தப் பூஜையும் நைவேத்யங்களும் செய்யாமல் இருப்பது தான் தவறு. அலுவல் நிமித்தமாக அடிக்கடி அயல்நாடு செல்பவர்கள் எங்காவது ஓர் இடத்தில் தினசரி பூஜைகள் நடைபெற வழிவகை செய்ய வேண்டும், நீங்கள் செய்ததில் தவறில்லை.

**73. எதிரித் தொல்லை விலக என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?**

அதிகாலையில் கோயிலுக்குச் சென்று விநாயகர் சன்னிதியில் நின்று கொண்டு 'சுமுகாய நம' என்று 21 முறை சொல்லுங்கள். எதிரிகள் நண்பர்களாக மாறி சுமுகமாகப் பழகுவார்கள். எதிரிகளைக் கொல்ல நினைக்கக் கூடாது. அன்பால் வெல்ல வேண்டும். அதற்கு விநாயகர் அருள் புரிவார்.

**74. திருமணம் செய்துகொள்ளும் ஆணுக்கும் பெண்ணுக்கும் வயது வித்தியாசம் எவ்வளவு இருக்க வேண்டும்?**

குறைந்தபட்சம் ஆறு வயதும் அதிக பட்சமாக பன்னிரண்டு வயதும் வித்தியாசம் இருக்க வேண்டும். ஆண் ஜாதகத்தில் கடகத்தில் குரு உச்ச மாக இருந்தால் பெண் ஜாதகத்தில் மகரத்தில் குரு நீச்சமாக இருக்க வேண் டும். வாழ்க்கை வளமாக அமையவும், ஜாதகப் பொருத்தம் மிகச் சிறப்

பாக இருக்கவும் 6 வருடம் முதல் 12 வருடம் ஜாதக ரீதியாக மட்டுமின்றி மருத்துவ ரீதியாகவும்கூட தம்பதியரிடையே வயது வித்தியாசம் கூடுதலாக இருப்பது நல்லது. நீண்ட காலம் மகிழ்ச்சியான தாம்பத்திய உறவு நீடிக்க இந்த வயது வித்தியாசம் தேவை. இதில் புதிரும் இல்லை. புனிதமும் இல்லை.

**75. ஒருவர் தமது ராசியின் அடிப்படையில் கல் மோதிரம் அணிந்து கொள்ள வேண்டுமா அல்லது நட்சத்திரத்தின் அடிப்படையில் அணிந்து கொள்ள வேண்டுமா?**

நன்மை செய்யும் கிரகத்தின் தசை நடை பெற்றால் அந்தக் கிரகத்துக்குரிய கல் அணியலாம். அவ்வாறு அணிந்தால் நன்மைகள் சற்று கூடுதலாக நடக்கும். தீமை செய்யும் கிரகத்தின் தசை நடக்கும்போது அதன் கல்லை அணிந்தால் தீமைகள் அதிகரிக்கும். தசைகள் மாறும்போது கல்லையும் மாற்றி விட வேண்டும். ராசிக் கற்கள் அணிவதால் தலையெழுத்து மாறாது.

**76. நீண்ட காலமாகத் திருமணம் தாமதமானால் என்ன பரிகாரம் செய்யலாம்?**

திருவிடைக்கழி சென்று குரா மரத்தடியில் உலாவிய முருகனை வழிபட்டால் ராகு கேது தோஷம் செவ்வாய் தோஷம் போன்ற அனைத்து தோஷங்களும் நீங்கி விரைவில் திருமணம் நடைபெறும். முருகனை ராகு வழிபட்ட தலம் திருவிடைக்கழி. அங்கு தல விருட்சம் குரா. இதை வேகமாகச் சொன்னால் ராகு ராகு என்று ஒலிக்கும். பஞ்ச மூர்த்திகளும் சுப்ரமண்ய சொரூபமாகத் திகழும் அபூர்வ ஸ்தலம் இது. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இத்தலத்துக்கு, பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். சேந்தனார், அருணகிரிநாதர் ஆகியோர் பாடி வழிபட்ட தலம். திருக்கடையூரிலிருந்து ஆறு கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. குறை உள்ளவர்கள் இத்தலத்துக்குச் சென்று முருகனுக்குப் பால் அபிஷேகம் செய்தால் விரைவில் திருமணம் நடக்கும்.

**77. கால சர்ப்ப தோஷம் என்பதற்கும் கால சர்ப்ப யோகம் என்பதற்கும் என்ன வித்தியாசம்? இவற்றால் நடைபெறும் நன்மை, தீமை என்ன? பரிகாரம் பற்றிய விவரங்கள் தெரிவிக்கவும்?**

ராகு / கேதுவுக்கு வெளியே மற்ற ஏழு கிரகங்களும் இருந்தால் அது கால சர்ப்ப யோகம்; ராகு / கேதுவுக்கு உள்ளே அனைத்து கிரகங்களும்

அடைபட்டிருந்தால் அது கால சர்ப்ப தோஷம். உதாரணத்துக்கு 5.10.1980 காலை 7.17 சென்னையில் பிறந்த கார்த்திக் சுப்ரமண்யம் ஜாதகம். இது கால சர்ப்ப யோகத்துக்கு உதாரணம்.

இவர் பி.ஈ. படித்துவிட்டு அமெரிக்கா சென்றார். அங்கு எம்.எஸ். படித்தார். உடனே வேலை கிடைத்தது. ஒரு தென் இந்தியப் பெண்ணைக் காதலித்து, பெற்றோர் சம்மதத்துடன் கல்யாணம் செய்துகொண்டார். சொந்த வீடு சென்னையிலும் அமெரிக்காவிலும் வாங்கிவிட்டார். இரண்டு குழந்தைகள் உள்ளன. முப்பது வயதுக்குள் வாழ்க்கை செட்டில் ஆகிவிட்டது. மகிழ்ச்சியாக இருக்கிறார். காலசர்ப்ப யோகம் உள்ளவர்கள் பெரும்பாலும் அயல் நாடுகளுக்குச் சென்று நிறைய செல்வம் ஈட்டுபவர்களாக இருப்பார்கள். திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும். நல்ல கல்விமானாகவும் சமூக அந்தஸ்து உடையவர்களாகவும் இருப்பார்கள். காலசர்ப்ப தோஷம் என்பது இதற்கு நேர்மாறான பலன் கொடுக்கும். உதாரணத்துக்கு 22.4.1979 அன்று மதியம் 3.20க்குப் பிறந்த ஒரு பெண்ணின் ஜாதகம்.

மூன்று முறை இவரது திருமணம் நிச்சயமாகி, பின் நின்றுவிட்டது. முதல் முறை திருமணத்துக்கு ஒரு வாரம் முன்பு இவரது தந்தை இறந்து விட்டார். இரண்டாவது முறை மணமகனின் அண்ணன் விபத்தில் இறந்து விட்டார். மூன்றாவது முறை திருமணம் நிச்சயிக்கப்பட்ட பிறகு இவரது உடல்நிலை கடுமையாகப் பாதிப்படைந்து விட்டது. இருதய நோய் பாதிப்பு மட்டுமின்றி மனநோயாளியாகவும் உள்ள இவருக்கு இனி திருமணம் நடக்க வாய்ப்பில்லை. கால சர்ப்ப தோஷம் உள்ளவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவை கூட சரிவர கிடைக்காது. கால சர்ப்ப தோஷம் உள்ளவர்கள் ராமேஸ்வரத்தில் சர்ப்ப சாந்தி ஹோமம் செய்ய வேண்டும். அதைச் செய்து ஒரு வருடம் கழித்து அங்கேயே நாக ப்ரதிஷ்டை செய்ய வேண்டும். இதைத் தவிர ஸ்ரீகாளஹஸ்தி, திருநாகேஸ்வரம், கீழப் பெரும்பள்ளம், திருப்பாம்புரம் ஆகிய தலங்களுக்கும் சென்று பரிகார பூஜைகள் செய்து வழிபட வேண்டும். கர்நாடக மாநிலம் மங்களூர் அருகில் உள்ள குக்கே சுப்ரமண்யா என்னும் தலத்தில் நாகசம்ஸ்காரா என்னும் பரிகாரம் செய்யப்படுகிறது. இதைச் செய்தாலும் நல்ல பயன் கிடைக்கும். கால சர்ப்ப யோகம் உள்ளவர்கள் எந்தப் பகாரமும் செய்ய வேண்டியதில்லை.

**78. வீட்டு வாசலில் தண்ணீர் தெளித்துக் கோலம் போடுவதை எந்த நேரத்தில் செய்ய வேண்டும்? அதிகாலையிலா? இரவிலா?**

அதிகாலையில் செய்வதுதான் சரியானது. முந்தைய நாள் இரவே

கோலம் போடுவது தவறு.

**79. வாமனருக்குத் தனி கோயில் உள்ளதா? எங்கு? எந்த வகையான பிரார்த்தனை அல்லது பரிகாரத்துக்கு அந்தப் பெருமாளை வழிபட வேண்டும்?**

திருக்கோவிலூர், காஞ்சிபுரம், தாளாளன் கோயில் (சீர்காழி அருகில்), ஸ்ரீரங்கம் அரங்கநாதப் பெருமாள் கோயில், திருநீர்மலை அரங்கநாதப் பெருமாள் கோயில் ஆகிய தலங்களில் வாமன அவதாரப் பெருமாளைத் தரிசிக்கலாம். இதம் விஷ்ணுர் விசக்ரமே த்ரேதா நிததே பதம் சபுடமஸ்ய பாகும்ஸுரேசு என்று சொல்லி இவரை வழிபட வேண்டும். அந்தணர் குலத்தில் பெருமாள் எடுத்த ஒரே அவதாரம் வாமன அவதாரம். யுத்தமும் ரத்தமும் இன்றி எதிரியை, புத்திசாலித்தனத்தால் வென்ற பெருமாள் இவர். பூணூல் கல்யாணம் என்னும் உபநயனம் நடைபெறும்போது வாமன அவதாரக் கதையை, சொற்பொழிவு நிகழ்த்த ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தப் பெருமாளை வேண்டிக்கொண்டால் வழக்குகள் விரைவில் தீர்ப்பாகும். குடும்பச் சண்டைகள் தீரும். ஜாதகத்தில் சுக்ரன் நீச்சமாக உள்ளவர்கள் வாமன பெருமாளை வழிபட்டால் நல்லது.

**80. எனது இளைய மகன் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தான். 13-ஆம் தேதி பிறந்ததால் என் உடல்நலனில் பாதிப்பு உண்டாகுமா?**

ஆங்கிலத் தேதிக்கும் நமது ஜோதிடத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. தங்கள் மகன் பிறந்தது பங்குனி 30. அவர் ஜாதகம் நன்றாக உள்ளது. ஆங்கிலத் தேதியில் வரும் எட்டு, பதிமூன்று ஆகியவற்றைக் கண்டு அஞ்சி நடுங்கும் மூடநம்பிக்கை தமிழர்களிடம் இருந்து என்று ஒழியுமோ தெரியவில்லை.

**81. ஒரே நட்சத்திரத்தில் பிறந்த ஆண்- பெண் திருமணம் செய்து கொள்ளலாமா?**

அவ்வாறு செய்துகொண்டவர்களின் வாழ்க்கை சோபிக்கவில்லை. ஒருசில நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் ஏக நட்சத்திரத்தில் திருமணம் செய்துகொள்ளலாம் என்று சில விதிவிலக்குகள் உள்ளன. எனினும் என்னிடம் வந்து பொருத்தம் பார்ப்பவர்களுக்கு ஏக நட்சத்திரத்தை நான் ஆமோதிப்பதில்லை.

**82. இரவில் பிறந்தவர்கள், பெரிய அறிவாளிகளாக இருப்பார்களாமே?**

இரவு பகல் தீர்மானிப்பது இல்லை.

**83. தல யாத்திரை மேற்கொள்வதும் புனித தீர்த்தங்களில் நீராடுவதும் புண்ணியம் என்று நம்பப்படுகிறது. ஆனால், சில ஊர்களில் உள்ள புனித தீர்த்தம் என்னும் குளங்கள் தூய்மையாக இல்லை. பாசி படிந்து அழுக்கு சேர்ந்துள்ளது. அத்தகைய குளங்களில் குளித்தால் 'இன்ஃபெக்ஷன்' ஆகி விடுமோ என அச்சமாக உள்ளது. அந்தச் சூழ்நிலையில் என்ன செய்வது?**

இத்தகைய சூழ்நிலை பல கோயில்களில் நிலவுகிறது. இந்தக் கசப்பான உண்மையை யாராக இருந்தாலும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அது புனித நீர் என்பதால் மாசு படிந்த குளத்தில் குளிக்க நம்மால் முடியாது. சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வரும் இந்தக் காலத்தில் ஆன்மிகத்தின் பெயரால் அழுக்குத் தண்ணீரில் குளிக்கச் சொல்வது ஏற்புடையது அல்ல.

பெருமாள் கோயிலுக்குச் சென்றால் தீர்த்தப்ரசாதம் கொடுத்து சடாரி வைக்கிறார்கள். அதை நாம் பயபக்தியுடன் பருகிவிடுகிறோம். கையில் மீதம் உள்ள ஒரு சொட்டு நீர் கீழே சொட்டக் கூடாது என்பதற்காக, கையைத் தலையில் தேய்த்துக்கொள்கிறோம். அந்தத் தீர்த்தப்ரசாதம் மினரல் வாட்டரா? அல்லது கிணற்றுத் தண்ணீரா? குழாய்த் தண்ணீரா? தூய்மையானதா என்பதைப் பற்றி நாம் சிந்திப்பதே கிடையாது. 'ஹைஜீன்' பற்றிய எண்ணத்தை, பக்தி மறைத்து விடுகிறது. ஆலயத்தில் வழங்கப்படும் பொங்கல், புளியோதரை போன்ற பிரசாதங்களையும், அபிஷேகம் செய்த பால், பஞ்சாமிர்தம் போன்றவற்றையும் உட்கொள்ள நாம் தயங்குவதில்லை. அவை நமக்கு நன்மைதான் செய்யும் என்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

தாங்கள் செல்லும் ஆலயங்களில் உள்ள குளத்து நீர் குளிக்கத் தகுதியற்றதாகவும் அசுத்தமாகவும் இருந்தால் அந்த நீரைச் சிறிதளவு எடுத்து, தலையில் தெளித்துக்கொண்டால் போதும். ஆலயக் குளத்து நீரைத் தூய்மைப்படுத்தி மாசுபடாமல் பாதுகாக்க பக்தர்களும் பொதுமக்களும் ஆலய நிர்வாகமும் முன்வர வேண்டும்.

**84. அமாவாசை தர்ப்பணம் செய்யும்போது தந்தை வர்க்கம், தாய் வர்க்கம் ஆகிய இரண்டு வழி முன்னோர்களுக்கும் அவசியம் செய்ய வேண்டுமா?**

தாய்வழிப்பாட்டனார் உயிரோடு இருந்தால் தாயார் வர்க்கத்து பிதுர்க்களுக்கு தர்ப்பணம் செய்ய வேண்டியதில்லை. அன்றேல் இரண்டு

வர்க்கத்துக்கும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

**85. ஈரத்துணியுடன் சாமி கும்பிடலாமா?**

கூடாது. குளித்துவிட்டு, தூய்மையான உலர்ந்த ஆடை அணிந்து கொண்டு பூஜை செய்வதுதான் சரியான முறை. ஈமக்கடன் மட்டும்தான் ஈரத்துணியுடன் செய்ய வேண்டும். மங்களகரமான விஷயங்கள் செய்யும்போது ஈரத்துணியுடன் செய்யக் கூடாது.

**86. ஜாதகத்தில் லக்னத்துக்கு ஏழாம் இடம் சுத்தமாக இருக்க வேண்டும் என்று சொல்கின்றனர். அப்படி என்றால் என்ன?**

ஜாதகத்தில் ஏழாம் இடம் என்பது அவரவர் வாழ்க்கைத் துணை அமைவதை உணர்த்தும் இடம். இதை, 'களத்திர ஸ்தானம்' என்பார்கள். லக்னத்துக்கு ஏழாம் இடமாக வரும் கட்டம் காலியாக இருந்தால் அது சுத்தமாக இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். இது தவறான கருத்து. ஏழாம் இடம் காலியாக இருப்பது வேறு, சுத்தமாக இருப்பது வேறு. ஏழாம் இடத்துக்கு அதிபதியாக வரும் கிரகம் நவாம்சத்தில் நீச்சம் அடையாமல் இருப்பது, ஏழுக்குடையவன் பாபகிரகங்களின் பார்வையும் சேர்க்கையும் இன்றி வலுவாக விளங்குவது, ஏழாம் இடத்தைப் பாப கிரகங்கள் பார்க்காமல் இருப்பது, போன்ற பல்வேறு கிரக அமைப்புகளைக் கொண்டே ஏழாம் இடம் சுத்தமாக இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். குரு, சுக்கிரன் போன்ற சுப கிரகங்கள் ஏழாம் இடத்தில் இருந்தாலும் சில லக்னங்களுக்கு களத்திர தோஷம் உண்டாகும். ஏழாம் இடம் காலியாக உள்ள சிலருக்குக் கூட விவாகரத்து ஏற்படுகிறது. ஏழாம் இடம் சுத்தம் என்றால் மண வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும் என்று அர்த்தம்.

**87. ஒரு பெண்ணின் ஜாதகத்தைப் பார்த்து எந்தத் திசையிலிருந்து வரன் வரும் என்று துல்லியமாகச் சொல்ல முடியுமா? இது எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

ஒவ்வொரு கிரகத்துக்கும் ஒரு திசை உண்டு. சூரியனுக்குக் கிழக்கு, சந்திரனுக்கு வடமேற்கு, செவ்வாய்க்குத் தெற்கு, புதனின் திசை வடக்கு, குருவுக்கு வடகிழக்கு, சுக்கிரனுக்குத் தென்கிழக்கு, சனியின் திசை மேற்கு. ஒரு ஜாதகத்தில் களத்திர ஸ்தானம் என்னும் 7ம் வீட்டோன் நின்ற நட்சத்திர பாதசாரத்தைக் கொண்டு எந்தத் திசையில் வரன் அமையும் என்பதைப் பழங்காலத்தில் மிகத் துல்லியமாகக் கணக்கிட்டுச்

சொல்லி வந்தனர். எத்தனை காத தூரத்தில் மாப்பிள்ளை இருக்கிறார் என்பதைக் கூட சொல்ல முடிந்தது. பழங்காலத்தில் தத்தம் சொந்த ஊரி லேயே பெரும்பாலோர் வசித்து வந்தனர். எனவே இந்தக் கணக்கு பலித் தது. இன்று எல்லா ஊர் மக்களும் உலகெங்கும் வசித்து வருவதால் இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பது சிரமம்.

**88. ஜாதகத்தில் குருவை ஆக்டிவேட் பண்ண என்ன செய்ய வேண்டும்? சூரியனை ஆக்டிவேட் பண்ண என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?**

நவக்கிரகங்களை செல்போன் சிம்கார்ட் என நினைத்தீர்களா? சிவ சிவா, இது என்ன புதுக் கூத்து.

**89.பெண்கள் காயத்ரி மந்திரம் சொல்லலாமா?**

சொல்லலாம்.

**90. அடிக்கடி ஜோதிடம் பார்ப்பது தவறா?**

ஆம் தவறுதான். முக்கியமான முடிவுகள் எடுக்கும் முன்பு ஜோதி டரைக் கலந்து ஆலோசிக்கலாம். அடிக்கடி கிரகங்களைச் சோதித்துப் பார்க்கக்கூடாது.

**91. மகாகவி பாரதிக்கு ஜோதிடத்தில் நம்பிக்கை உண்டா? அவர் பாடல் களில் ஜோதிடம் பற்றிய குறிப்பு ஏதேனும் உள்ளதா?**

பாரதியாருக்கு, ஜோதிடத்தில் நம்பிக்கை கிடையாது. 'ஜோதிடம் இகழ்' என்பது மகாகவியின் அறிவுரை. அவர் காலத்தில் திருநெல்வேலி குறுக்குத் துறையில் மிகவும் பிரபலமாக இருந்த பாலத்து ஜோஸியர் என்பவரைக் கிண்டல் செய்துள்ளார்.

**92. பரிகாரம் என்றால் என்ன?**

இறைவனிடம் பாவ மன்னிப்புக் கேட்பதுதான் பரிகாரத்தின் அடிப் படைத் தத்துவம். இந்தப் பிறவியிலும் முந்தைய பல பிறவிகளிலும் தெரிந்தும் தெரியாமலும் கனவிலும் நனவிலும், உடலாலும் மனத்தாலும், பேச்சினாலும், செய்கைகளினாலும் பல பாவச் செயல்களை நாம் செய் திருப்போம். அதன் பயனாக நமக்குத் துன்பங்களும் இன்பங்களும் வரு கின்றன. தவறு செய்வது மனித இயல்பு. அவற்றை உணர்ந்து, மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் அவன் நிச்சயம் மன்னித்து

விடுவான். இறைவனிடம் மன்னிப்புக் கேட்கும் வழிபாட்டை அல்லது பூஜையை, பரிகாரம் என்கிறோம். ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு மருந்து உள்ளதுபோல், ஒவ்வொரு பாவத்துக்கும் வெவ்வேறு பரிகாரங் கள் உள்ளன.

**93.** ***எனக்கு வயது 70. ரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி ஆகியவை உள்ளன. பல வருடங்களாக தினசரி வீட்டில் எங்கள் முன்னோர்கள் செய்து வந்த பூஜையை ஆசார நியமத்துடன் தவறாமல் செய்து வருகிறேன். காலையில் 9 மணிக்குள் சிறிது உணவு உட்கொண்டு மாத்திரை சாப்பிட வேண்டியுள்ளது. ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிட்டு விட்டு பூஜைகள் செய்ய லாமா? அல்லது முழுப் பட்டினியுடன்தான் பூஜை செய்ய வேண்டுமா?***

காலை உணவு சாப்பிட்டு விட்டு பூஜை செய்யலாம். சாப்பிட்டு விட்டு பூஜை செய்தால் சாமி கோபிக்கமாட்டார்.

**94.** ***அக்னிமூலை என்னும் தென்கிழக்கில் சமையல் அறை இருக்க வேண்டும் என்கிறார்கள். ஆனால், எங்கள் வீட்டில் அதற்கு நேர்மாறாக கிச்சன் உள்ளது. அடுக்கு மாடிக் குடியிருப்பில் வசிக்கும் எங்களால் அதை மாற்றி அமைக்க இயலாத நிலை. இதற்கு ஏதேனும் பரிகாரம் உள்ளதா?***

பஞ்சபூதங்களில் அக்னி சொரூபமாக விளங்கும் அண்ணாமலையாரின் படத்தை அக்னி மூலையில் வைத்துவிடுங்கள். வாஸ்து தோஷம் நீங்கி விடும்.

**95.** ***ஜாதகக் கட்டங்களில் நவகிரகங்களைத் தவிர யுரேனஸ், நெப்ட் யூன், ப்ளூடோ, குளிகன் என்றெல்லாம் சில ஜாதகங்களில் குறிப்பிடப்பட் டுள்ளன. இது அவசியம்தானா? இவற்றுக்கு என்ன பலன்?***

யுரேனஸ், நெப்ட்யூன், ப்ளூடோ ஆகியவற்றைக் குறிப்பிடுவதை முற்றிலுமாகத் தவிர்த்துவிடலாம். நம் இந்திய ஜோதிட முறையில் இவற்றுக்கு எந்த முக்கியத்துவமும் அளிக்கப்படவில்லை. மாந்தி என் னும் குளிகனை அவசியம் ஜாதகத்தில் குறிப்பிட வேண்டும். அது ஓர் உபகிரகம். பிற கிரகங்கள் கொடுக்கும் பலனைத் தடைசெய்யும் சக்தி மாந்திக்கு உண்டு. நன்மை செய்யும் கிரகத்துடன் மாந்தி சேர்ந்தால் நடைபெற வேண்டிய நன்மை, கடைசி நேரத்தில் கைநழுவிப் போகும். தீமை விளைவிக்கும் கிரகத்துடன் மாந்தி சேர்ந்தால் தீமை நடவாமல் தப்பித்து விடுவோம். சக்தி வாய்ந்ததாகக் கருதப்படும் மாந்தி பற்றிய விழிப்புணர்வு கேரளாவில் சற்று அதிகம். சனியின் புதல்வன் மாந்தி என்று கூறப்படுகிறது. முழுமையற்றதும் சிதைந்து போனதும் இதன்

உருவ அமைப்பு.

பிற கிரகங்களைப் போல் இதற்கு எனத் தனி வழிபாட்டு முறைகளும் மந்திரங்களும் கோயில்களும் கிடையாது. கேரளாவில் மாந்திக்கெனச் செய்யப்படும் பரிகாரம் ஒன்று உண்டு. அதை மிகவும் ரகசியமாகச் செய்வார்கள். குளிகை நேரம் என்கிறோமே அது மாந்தியுடன் தொடர்புடையது.

**96. நானும், எனது வயதான தாயாரும், மகளும் சென்னையில் வசித்து வருகிறோம். எங்கள் குடும்பத்தில் ஆண்கள் யாரும் இல்லை. என் மகள் ஜாதகத்தில் பித்ரு தோஷம் இருப்பதாக ஜோதிடர்கள் கூறுகின்றனர். ராமேஸ்வரம், காசி, கயா, அலகாபாத் சென்று திலஹோமம், சிரார்த்தம், பித்ரு பூஜை ஆகியவற்றைச் செய்ய விரும்புகிறேன். என் கணவர் இல்லாத தால் அவற்றைச் செய்யும் உரிமை எனக்கு இல்லை எனச் சிலர் கூறுகின்ற னர். பெண்கள் இவற்றை எப்படிச் செய்வது?**

சொத்து விற்பனை செய்ய மற்றவருக்கு பவர் ஆஃப் அட்டர்னி கொடுப்பது போல, உங்கள் சார்பாக இவற்றைச் செய்ய தர்ப்பைப் புல் ஒன்றைக் கொடுத்து செய்யச் சொல்லலாம். உங்கள் சார்பாகச் செய்யும் ஆண், வேறு குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். காசி, கயா, ராமேஸ்வரம் போன்ற ஊர்களில் உள்ள வேத பண்டிதர்கள், யாத்திரை வரும் பெண்களுக்காக இவ்வாறு செய்கிறார்கள். பெண்களிடம் தர்ப்பைப் புல் வாங்கி சிரார்த்தம் செய்வது நமது சாஸ்திரத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்று.

**97. விதியை மதியால் வெல்ல முடியுமா?**

முடியும். மதி என்பது சந்திரன். சந்திரனின் துணைகொண்டு விதியைக் கூட வென்று விடலாம் என்பதுதான் இப் பழமொழியின் கருத்து. நாம் நம் செயலைத் தொடங்கும் நேரத்தில் நமது ராசிக்கு மிகவும் நன்மை செய்யும் நிலையில் சந்திரன் இருந்தால் நமது செயல் வெற்றி பெறும். ஒரு பணியைத் தொடங்கும் நேரத்தில் சந்திரன் அனுகூலமான நிலையில் உள்ளதா என்பதை அறிந்துகொண்டு ஆரம்பிக்க வேண்டும். தொடக்க நேரத்தில் சந்திரன் நல்ல இடத்தில் இருந்தால் விதிப்படி நடக்க முடியாதது கூட நடந்துவிடும். இதைத்தான் தாரா பலன், சந்திர பலன் என்று சொல்வார்கள்.

**98. ஆடி மாதத்தில் திருமணப் பேச்சு வார்த்தை நடத்தலாமா?**

ஜாதகம் கொடுக்கலாம், வாங்கலாம், பொருத்தம் பார்க்கலாம், பெண்

பார்க்கலாம், திருமணப் பேச்சுவார்த்தை நடத்தலாம், மண்டபத்துக்கு முன்பணம் கொடுக்கலாம், அனைத்துவிதமான ஏற்பாடுகளும் செய்ய லாம். அழைப்பிதழ் கூட விநியோகிக்கலாம். ஆடியில் திருமண முகூர்த் தம் மட்டும்தான் செய்யக் கூடாது. ஆடியைக் கண்டு அஞ்சுவது அர்த்த மற்றது.

**99. பித்ருதோஷம் என்றால் என்ன? அதை ஜாதகத்தில் எப்படிக் கண்டறிவது? அதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும்? அந்த தோஷத் தினால் ஏற்படும் தீய விளைவுகள் என்ன? எத்தகைய பாவங்கள் செய் திருந்தால் இந்த தோஷம் வரும்? ஒரே குடும்பத்தில் சிலருக்கு மட்டும் இது வருவது ஏன்?**

நம் குடும்பத்தில் வாழ்ந்து மறைந்த முன்னோர்களை பித்ருக்கள் என் கிறோம். அவர்களின் ஆத்மா சாந்தி அடையாததால் வருகிற தோஷம் பித்ரு தோஷம். ஜாதகத்தில் சூரியன் அல்லது சந்திரன் ராகுவுடனோ அல்லது கேதுவுடனோ எந்த இடத்தில் சேர்ந்திருந்தாலும் பித்ரு தோஷம் உண்டு. ராமேஸ்வரம் சென்று தில ஹோமம் செய்வதும், கயா சிரார்த்தம் செய்வதும், காசி, அலகாபாத், பத்ரி சென்று திவசம் செய்வதும், திருவெண்காடு சென்று திதி கொடுப்பதும் இந்த தோஷத்துக்குப் பரிகாரம். குடும்பத்தில் யாரேனும் விபத்துகளில் இறந்திருந்தாலோ, தற்கொலை செய்துகொண்டிருந்தாலோ மட்டுமே தில ஹோமம் செய்ய வேண்டும். அனைவரும் இயற்கை மரணம் அடைந்திருந்தால் தில ஹோமம் செய்ய வேண்டியதில்லை.

இந்த தோஷம் உள்ளவர்களுக்குத் திருமணம் நடக்காது. அல்லது மிகவும் தாமதமாகி நடக்கும். விவாகரத்து ஏற்படலாம் அல்லது தம்பதியரிடையே அன்னியோன்யம் இருக்காது, அல்லது குழந்தைப் பாக்கியம் இருக்காது. ஒருசிலருக்குக் கடுமையான உடல் உபாதைகள், மனநோய் காரணமாக தாம்பத்திய வாழ்க்கை பாதிக்கும். பலமுறை திருமணங்கள் நடக்கவும் வாய்ப்புண்டு. கலப்புத் திருமணம் நடக்கவும், பெற்றோர்களுக்குத் தெரியாமல் ரகசியத் திருமணம் நடக்கவும் வாய்ப்புண்டு.

இந்த தோஷம் உள்ள சில தம்பதிகள் ஒருவருக்கொருவர் உண்மை யானவர்களாக நடந்துகொள்வதில்லை. இந்த தோஷம் வருவதற்கான காரணங்கள் : கருச்சிதைவு செய்துகொண்டால் இந்த தோஷம் வரும், பெற்றோர்களின் இறுதி நாட்களில் அவர்களைச் சரி வரக் கவனிக்காமல் இருந்து அதனால் அவர்கள் மன வேதனை அடைந்தால் பித்ரு தோஷம் வரும். ஒருவரின் இளையதாரத்துப் பிள்ளைகள் மூத்த அன்னைக்கு திதி

கொடுக்காவிட்டாலும் வரும். தந்தைக்கு எத்தனை தாரங்கள் இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் தவறாமல் திவசம் செய்ய வேண்டும். ஆண் வாரிசு இல்லாத சித்தப்பா, பெரியப்பா, அத்தை, சகோதரர் ஆகியோருக்கு திதி கொடுக்காவிட்டால் வரும். துர்மரணம் அடைந்தவர்களுக்கு திதி கொடுப்பதோடு மட்டுமின்றி கயா சென்று கூப சிரார்த்தம் செய்யாவிடில் பித்ரு தோஷம் வரும்.

ஒரே குடும்பத்தில் சிலருக்கு மட்டும் இந்த தோஷம் வரலாம். திருமணம் ஆன பிறகும் பிறந்த வீட்டு வழியில் சில பெண்களுக்குப் பித்ரு தோஷம் தொடரும். இந்தத் தோஷம் கடுமையாக உள்ள சில குடும்பங்களில் மூளை வளர்ச்சி இல்லாத மாற்றுத் திறனாளி குழந்தை பிறக்கலாம். தெய்வத்தை வணங்காவிட்டால் சாமி கோபித்துக்கொள்ள மாட்டார். ஆனால் தென்புலத்தாருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டும். அவற்றைச் செய்யத் தவறினால் வருவதுதான் பித்ரு தோஷம்.

**100. வெளிநாடு செல்ல விசா கிடைப்பதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?**

ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோயிலில் உள்ள ஆஞ்சநேயர் சன்னிதியில் பிரார்த்தனை செய்துகொண்டு அர்ச்சனை செய்துவிட்டு வாருங்கள். விசா பிரச்னை தீர்ந்து விடும். ராமபிரான் கடல் தாண்டிச் செல்ல உதவி செய்தவர் இந்த ஆஞ்சநேயர்தான்.

**101. எங்கள் வீட்டில் இருந்த விலை உயர்ந்த பொருள் ஒன்று மர்மமான விதத்தில் காணாமல் போய்விட்டது. அது கிடைப்பதற்குப் பரிகாரம் ஏதேனும் உள்ளதா?**

கும்பகோணம் அருகில் சேங்காலிபுரம் என்னும் புனிதஸ்தலம் உள்ளது. குடவாசலில் இருந்து 4 கி.மீ தூரம். அந்தச் சிற்றூரில் நான்கு சிவன் கோயில்களும் இரண்டு பெருமாள் கோயில்களும் ஒரு முருகன் கோயிலும் உள்ளன. ஆயிரம் கரங்கள் உடைய கார்த்த வீர்யார்ஜுனன் என்னும் அபூர்வமான சுவாமியின் சன்னிதி அங்கு மட்டுமே உள்ளது. இந்த சுவாமியிடம் வேண்டிக்கொண்டால் காணாமல்போன பொருள் மீண்டும் கிடைத்துவிடும். சேங்காலிபுரத்தில் அருள்பாலிக்கும் மிஸ்த்து லாம்பாள் என்னும் அம்பிகையைத் தரிசனம் செய்துவிட்டு வாருங்கள். மனசாந்தி கிடைக்கும்.

**102. எங்கள் வீட்டில் நிறைய ரோஜாச் செடி வளர்க்கிறோம். முள் உள்ள**

***செடிகளை வீட்டில் வளர்க்கக் கூடாது எனச் சிலர் கூறுகின்றனர். நாங்கள் என்ன செய்ய வேண்டும்?***

கள்ளி, முள்ளி, சப்பாத்தி போன்ற முட்செடிகளைத்தான் வீட்டில் வளர்க்கக்கூடாது. ரோஜா போன்ற முள் உள்ள செடிகளை வளர்க்கலாம்.

***103. சுவாதி, திருவோணம், ரோகிணி, புனர்பூசம் போன்ற சில நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு திருமணம் செய்ய ஜாதகப் பொருத்தம் பார்க்கவே வேண்டாம் என்கிறார்களே. இந்தக் கருத்து சரியா?***

இது தவறான கருத்து. திருமணப் பொருத்தம் பார்க்கும்போது, 27 நட்சத்திரங்களில் எந்த ஒரு நட்சத்திரத்துக்கும் இப்படிப்பட்ட விதிவிலக்குகள் கிடையாது. அனைவருக்கும் பொருத்தம் பார்ப்பது அவசியம். இந்த நான்கு நட்சத்திரத்தில் பிறந்த சிலருக்கும் விவாகரத்து ஆகிறது.

***104. அமெரிக்காவில் பிறந்த என் பேரனுக்கு இன்னும் பேச்சு சரியாக வரவில்லை. பிற குழந்தைகளைப் போல் அவனும் நன்றாகப் பேசுவானா?***

அமெரிக்காவில் பிறந்த இந்திய வம்சாவளி குழந்தைகள் பலருக்கும் இந்தக் குறைபாடு உள்ளது. கர்ப்பவதியாக உள்ள பெண்கள் பலதரப்பட்ட மக்களுடன் தாய்மொழியில் மகிழ்ச்சியாகப் பேச வேண்டும். வீணை இசை நிறைய கேட்க வேண்டும். சோக உணர்வு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தனிமையைத் தவிர்க்க வேண்டும். சரஸ்வதி வழிபாடு ஒன்றுதான் இதற்குத் தீர்வு.

***105. குழந்தை பிறந்தவுடனேயே ஜாதகம் கணித்து பலன் பார்க்கலாமா?***

கணிக்கலாம். பொதுவாக ஐந்து வயது ஆன பிறகுதான் பலன் பார்க்க வேண்டும். குழந்தையின் உடல் நலன் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தாலோ, அல்லது குடும்பத்தில் மிகப் பெரிய பிரச்னைகள் ஏற்பட்டாலோ மட்டுமே ஐந்து வயதுக்குள் ஜாதகப் பலன் பார்க்க வேண்டும்.

***106. மிகப் பெரிய அளவில் செல்வம் கிடைக்க என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?***

அவரவர் முற்பிறவியின் பாவ புண்ணியங்களுக்கு ஏற்பத்தான் செல்வம் சேருகிறது. 'தவத்தளவேயான் செல்வம்' என்பது ஔவையார் வாக்கு. உடல் முழுவதும் எண்ணெய் தடவிக்கொண்டு உருண்டு புரண்

டாலும் ஒட்டுகிற மண்தான் ஒட்டும். மற்றவர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. தேவையான அளவு செல்வம் கிடைக்க, கனகதாரா சுலோகம் படித்து வாருங்கள். லக்ஷ்மி சகஸ்ரநாமம் தினசரி பாராயணம் செய்யலாம் அல்லது ஆடியோவில் கேட்கலாம். மரகதலிங்கத்துக்குச் சந்தன அபிஷேகம் செய்தால் செல்வம் கிடைக்கும். அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் லக்ஷ்மி குபேர பூஜை செய்து வாருங்கள். ஸ்ரீசூக்த பாராயணம் - ஹோமம் செய்தால் வரவேண்டிய பணம் வந்து சேரும்.

***107. குழந்தைகளுக்குக் கடவுள் பெயரை வைக்கக்கூடாது என்று ஒரு ஜோதிடர் டிவி நிகழ்ச்சியில் சொன்னாரே?***

ஐயோ பாவம். அவரை மன்னித்துவிடுங்கள். குழந்தைகளுக்குக் கடவுள் பெயர்தான் வைக்க வேண்டும்.

***108. கலைத்துறையில் புகழ்பெற என்ன வழிபாடு செய்ய வேண்டும்?***

கும்பகோணம்- திருவையாறு பாதையில் திருப்புறம்பயம் என்னும் சிவத்தலம் உள்ளது. இங்குள்ள விநாயகருக்குக் குடம் குடமாகத் தேன் அபிஷேகம் செய்வார்கள். இவருக்குப் பிரளயம் காத்த விநாயகர், தேன் உறிஞ்சும் விநாயகர், ஸ்வேத விநாயகர் என்னும் பல சிறப்புத் திருப் பெயர்களும் உண்டு. இத்தலத்துக்குச் சென்று வழிபட்டால், கலைத் துறையில் பெயரும் புகழும் கிடைக்கும். இட்ஷூவாணி அம்பாள் சமேத ஸ்ரீசாட்ஷிநாதர் கோயில் என்று அதற்குப் பெயர்.

***109. கடன் தொல்லை அதிகமாக உள்ளது. இதிலிருந்து விடுபட என்ன வழி?***

விநாயகர் சதுர்த்தி நாளில் 21 இலைகள் 21 மலர்கள் கொண்டு பிள்ளையாருக்குப் பூஜை செய்வது வழக்கம். அந்த ஒவ்வோர் இலைக்கும் ஒரு பலன் உண்டு. அகத்திக் கீரை இலையால் கணபதிக்கு அர்ச்சனை செய்தால் தீராக் கடனும் தீர்ந்துவிடும். ருணஹர கணபதி ஸ்லோகம் தினமும் படித்து வாருங்கள்.

***110. கிரகமாலிகா யோகம் என்றால் என்ன?***

மலர்களை மாலை தொடுத்தாற்போல வரிசையாக ஒரு ராசியில் ஒரு கிரகம் வீதம் ஒன்பது ராசிகளில் ஒன்பது கிரகங்கள் சிலர் ஜாதகத்தில் அமைந்திருக்கும். இதைக் கிரகமாலிகா யோகம் என்பார்கள். மிகவும்

அபூர்வமான யோகமாக இது கருதப்படுகிறது. இந்த யோகம் உள்ள வர்கள், ஒரு நாட்டின் தலைவராக விளங்குவார்கள். பண்டித ஜவாஹர் லால் நேரு ஜாதகத்தில் இந்த யோகம் உண்டு.

***111.*** ***தடைகள் நீங்குவதற்கு என்ன பரிகாரம்? எனது தொழில் மீண்டும் சிறப்பாக நடைபெற என்ன செய்ய வேண்டும்?***

கேது தசை உங்கள் தொழிலை முடக்கி விட்டது. விநாயகரை வழி பட்டால் தடைகள் விலகும். முருகனுக்கு அறுபடை வீடுகள் உள்ளது போல், விநாயகருக்கும் அறுபடை வீடு என்னும் முக்கியமான ஆறு தலங்கள் உண்டு.

திருவண்ணாமலை, விருத்தாசலம், திருக்கடவூர், திருச்சி, பிள்ளையார் பட்டி, திருநாரையூர் ஆகிய ஆறும் கணபதியின் அறுபடை வீடுகள். திருவண்ணாமலையில் வெளிபிரகாரத்தில் கம்பீரமாக அமர்ந்திருக்கும் சம்பந்த விநாயகர், செந்தூரம் அணிந்திருப்பார். தலவிருட்சமான மகிழ மரத்துக்கு அருகில் இந்த விநாயகர் சன்னிதி உள்ளது. அறுபடை வீடு களில் இவரே முதல் விநாயகர். இரண்டாவதாக விருத்தாசலத்தில் உள்ள பள்ளத்து விநாயகர். மூன்றாவதாக திருக்கடவூர் கள்ளவாரணப் பிள்ளை யார், நான்காவதாக திருச்சி உச்சிப் பிள்ளையார், ஐந்தாவது பிள்ளை யார்பட்டி கற்பக விநாயகர், ஆறாவதாக திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார். அறுபடை வீடுகளிலும் எழுந்தருளியுள்ள பிள்ளையாரை வணங்கி விட்டு வாருங்கள். தடைகள் நீங்கிவிடும். கேது தசையையும் மீறி நன்மைகள் நடக்க விநாயகரின் அறுபடை வீடு தரிசனம் சிறந்த பரி காரம்.

***112.*** ***ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன் எட்டாமிடத்தில் இருந்தால் திருமண வாழ்க்கை பாதிக்குமா?***

பாதிக்காது. மகிழ்ச்சிகரமாக அமையும். பொதுவாக 3,6,8,12 ஆகிய வீடுகள் மறைவு ஸ்தானம் எனப்படும். ஆனால், சுக்கிரனுக்கு மட்டும் ஒரு சிறப்பு விதிவிலக்கு உண்டு. 8,12 ஆகிய வீடுகளில் சுக்கிரன் இருந் தால் இல்லறம் இனிக்கும்.

***113.*** ***திருமணப் பொருத்தம் பார்க்கும்போது முக்கியமான பொருத்தங் கள் எவை?***

ரஜ்ஜுப் பொருத்தமும் யோனிப் பொருத்தமும் அவசியம் அனை வருக்கும் இருக்க வேண்டும். பெண்ணின் ராசியிலிருந்து 6வது 8வது

ராசியாக ஆணின் ராசி இருக்கக்கூடாது. ரஜ்ஜு-யோனி உட்பட ஆறு பொருத்தங்களாவது இருக்க வேண்டும். பெண் ராசியும் ஆண் ராசியும் 7க்கு 7 ஆக இருத்தல் நல்லது. பத்து பொருத்தம் அமைவது மிகவும் அரிது. ரேவதி நட்சத்திரப் பெண்ணுக்கு உத்திராடம் மகர ராசி ஆண் ஜாதகம் 10 பொருத்தம் உண்டு.

ஹஸ்த நட்சத்திரப் பெண்ணுக்கு புனர் பூசம் மிதுன ராசி ஆணின் ஜாதகம் பத்து பொருத்தம் உண்டு. இதைத் தவிர வேறு எந்த நட் சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் 10 பொருத்தம் வராது. இதைத் தவிர தோஷங்கள் சம அளவில் உள்ளனவா என பார்க்க வேண்டும். திருமண வாழ்க்கையில் பிரச்னை ஏற்படும் பலருக்கும் செவ்வாயும் சூரியனும் 12 கட்டங்களில் ஏதேனும் ஓர் இடத்தில் சேர்ந்திருக்கும். சந்திரனும் கேதுவும் ஒன்றாக இணைந்திருந்தாலும் மண வாழ்க்கை சோபிக்காது. ஏழாம் இடத்தில் சந்திரன் அல்லது சுக்கிரன் இருந்தாலும் களத்திர தோஷம் ஏற் படும். செவ்வாயும் சூரியனும் ஜாதகத்தில் ஒன்றாக இருந்தால் தம்பதியரி டையே பிரிவு ஏற்பட வாய்ப்புண்டு. குரு பார்த்தால் சண்டை போட்டுக் கொண்டு பிரிய மாட்டார்கள். ஆனால் தொழில் நிமித்தமாக சில வருடங் கள் வெளியூரில் தனித்து வாழ நேரிடும்.

***114.* என் மகன் கடந்த பத்து வருடங்களாக அமெரிக்காவில் வசிக் கிறான். எங்களுக்கு வயதாகிவிட்டதால் இந்தியாவுக்குத் திரும்பி வந்துவிடும்படி வற்புறுத்துகிறோம். அதற்கு அவன் விரும்பவில்லை. பிள்ளை கையால் கொள்ளி வைக்கும் பாக்கியம் என் ஜாதகத்தில் உள்ளதா அல்லது காசிக்குப் போய் கடைசிக் காலத்தை அங்கு கழித்து விடலாமா?**

பத்து பதினைந்து வருடங்களுக்கு முன்பு என்னிடம் ஜோதிடம் பார்க்க வருபவர்கள் கேட்கும் முக்கியமான கேள்வி 'என் மகன் வெளிநாடு செல்வானா' என்பதுதான். ஆனால் சமீப காலத்தில் அதற்கு நேர்மாறாக என் மகன் எப்பொழுது இந்தியாவுக்குத் திரும்புவான் என்று அனைவரும் கேட்கத் தொடங்கிவிட்டனர். 'காசியாச்ச மரணம் அதவா புத்ர சந்நிதௌ' என்று சாஸ்திரம் சொல்கிறது. இறந்தால் காசியில் இறக்க வேண்டும். இல்லாவிட்டால் மகன் மடியில் தலை வைத்தபடி உயிரை விட வேண்டும் என்பார்கள். உங்கள் ஜாதகத்தில் புத்திர ஸ்தானம் வலுவாக இல்லை. மகன் வரமாட்டார். அமெரிக்க வாசம் என்னும் மாயையில் இருந்து அவர் மீள மாட்டார். நீங்கள் காசிக்குச் சென்று அங் கேயே செட்டில் ஆகிவிடுங்கள்.

***115.* நவகிரகங்களின் அருள் கிடைக்க எளிமையான, செலவில்லாத**

பரிகாரம் ஏதேனும் கூறுங்கள்.

தினசரி கோளறு பதிகம் படிக்கலாம். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான நாத ஜோதி ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் (1776- 1835) மிகப்பெரிய மகான். அவர் இயற்றியுள்ள நவகிரக கீர்த்தனைகள் என்னும் பாடல்கள் மந்திர சக்தி கொண்டவை. உங்களுக்கு இசை ஞானம் இருந்தால் தினசரி அவை அனைத்தையும் பாடலாம். அல்லது அவற்றை ஒலிக்கச் செய்து கேட்கலாம். நவகிரக தோஷங்கள் விலக இதுவே மிகச் சிறந்த பரிகாரம்.

**116. விதிப்படிதான் எல்லாமே நடக்கும் என்கிறார்கள். பிறகு எதற்கு இறைவழிபாடும் பரிகாரங்களும்?**

மழை பெய்வதையும் வெயில் சுடுவதையும் யாரும் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் கையில் குடை இருந்தால் அவற்றிலிருந்து நம்மைப் பெருமளவு காப்பாற்றிக்கொள்ள முடியும். விதி என்னும் இயற்கையில் இருந்து நமக்குப் பாதுகாப்பு அளிப்பவைதான் பரிகாரங்கள் என்னும் குடை.

**117. வீட்டின் வாசல் எந்தத் திசை பார்த்து இருக்க வேண்டும்?**

ரிஷபம், மிதுனம், கடகம் ராசிகளில் பிறந்தவர்களுக்கு வடக்கு வாசல் நல்லது. சிம்மம், கன்னி, துலாம் ராசிகளுக்குக் கிழக்கும் தெற்கும் நல்லது. விருச்சிகம் ராசிகளில் பிறந்தவர்களுக்கு தெற்கு வாசல் நல்லது. எனினும், தெற்கு வாசல் அனைவருக்கும் நல்லது. குடும்பத் தலைவரின் ராசிக் கேற்ப வீட்டின் வாசல் இருப்பது நலம்.

**118. 27 நட்சத்திரங்களில் மிக உயர்வானது எது? மோசமானது எது?**

உயர்வானது, மோசமானது என்றெல்லாம் எந்த நட்சத்திரத்துக்கும் முத்திரை குத்த முடியாது. வெறும் நட்சத்திரம் மட்டும் ஒருவரின் வாழ்க்கையைத் தீர்மானித்து விடுவதில்லை. எல்லா நட்சத்திரத்திலும் சாதனையாளர்கள் உள்ளனர். சுகமாக வாழ்பவர்களும் மிகவும் கஷ்டப் படுபவர்களும் 27 நட்சத்திரங்களிலும் உள்ளனர்.

குடும்பப் பெரியவர்களின் நட்சத்திரங்களுக்கு ஏற்ப குழந்தைகளின் நட்சத்திரம் அமையும். ஒருசில குடும்பங்களில் குறிப்பிட்ட சில நட் சத்திரங்களில் மட்டுமே குழந்தை பிறக்கும். உருவத் தோற்றத்தில் குடும்பச் சாயல் இருப்பது போல் ஜாதகத்திலும் ஏதேனும் ஒற்றுமை இருக்கும். இதில் உயர்வு தாழ்வு என்னும் பேதம் பார்க்க வேண்டாம்.

***119.*** ***புது வீட்டுக்குச் செல்ல பால் காய்ச்சும் போது மின் அடுப்பில் பால் காய்ச்சலாமா? அக்னி ஜ்வாலை உள்ள அடுப்பில்தான் காய்ச்ச வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.***

இன்டக்ஷன் ஸ்டவ் என்னும் மின் அடுப்பில் பால் காய்ச்சி புதுமனை புகுவிழா நடத்தலாம். அதில் தவறில்லை.

***120.*** ***விவாகரத்து ஆனவர்கள் மறுமணம் செய்துகொள்வதற்கு முன்பு ஏதேனும் பரிகாரம் செய்ய வேண்டுமா?***

ராமேஸ்வரம் சென்று 23 தீர்த்தங்களில் நீராடிவிட்டு அதன் பிறகு மறுமணம் செய்துகொள்ள வேண்டும். பொதுவாக ராமேஸ்வரத்தில் உள்ள அக்னி தீர்த்தம் முதல் கோடி தீர்த்தம் வரை 23 புனிதத் தீர்த்தங்களில் நீராடினால் சேர வேண்டியவர்களைச் சேர்த்து வைக்கும். பிரிய வேண்டியவர்களைப் பிரித்து வைக்கும் என்பார்கள். ராமரும் சீதையும் ஒன்று சேர்ந்த இடம் ராமேஸ்வரம். அங்கு சென்று புனிதத் தீர்த்தங்களில் குளித்தால் 23 விதமான தோஷங்கள் விலகுகின்றன. திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும். மணமான தம்பதியரிடையே நல்ல அன்னியோன்யம் உருவாகும். பிரிவு தடுக்கப்படும். சிலருக்குப் பிரிவு கிடைக்கும். எது நடந்தால் நல்லதோ அது விரைவில் நடக்கும். விவாகரத்து சீக்கிரம் கிடைப்பதற்கும் அதுவே சிறந்த பரிகாரம்.

***121.*** ***நாங்கள் பல வருடங்களாக சிவன் கோயில் ஒன்றுக்குச் சொந்தமான வீட்டில் வாடகைக்கு வசிக்கிறோம். எங்கள் குடும்பத்தில் தொடர்ந்து பல பிரச்னைகள் வந்த வண்ணம் உள்ளன. வீட்டை மாற்ற வேண்டுமா?***

நியாயமான வாடகை கொடுத்து கோயிலுக்குச் சொந்தமான வீட்டில் வசிக்கலாம். அதில் தவறில்லை. ஆலயப் பணியாளர்கள் தவிர, மற்றவர்கள் மிகக் குறைவான வாடகையில் சிவன் கோயில் வீட்டில் வசித்தால் மட்டுமே குடும்பம் விருத்தி ஆகாது. சிவன் சொத்து குலநாசம் என்பார்கள். உங்கள் பிரச்னைகளுக்கு ஜாதகரீதியாக வேறு காரணம் இருக்கும்.

***122.*** ***தெய்வ வழிபாடு - பரிகாரம். இவை இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?***

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இறைவனை வணங்குவது தெய்வ வழிபாடு. இதற்கு நிஷ்காம்ய பக்தி என்று பெயர். குறிப்பிட்ட எண்ணம் ஈடேறுவதற்காகப் பிரார்த்தனை செய்துகொண்டு வழிபடுவது பரிகாரம். இதை பாவமன்னிப்பு கோருதல் என்றும் சொல்லலாம். பரிகாரம்

செய்வதற்குக் காம்யார்த்த பக்தி என்று பெயர். இவ்விரண்டுமே ஹிந்து மதத்தில் அனுமதிக்கப்பட்டவைதான்.

***123. வீட்டு வாசல் எந்தத் திசை பார்த்து இருக்க வேண்டும் என்ற கேள்விக்கு ரிஷபம் முதல் விருச்சிகம் வரையிலான ஏழு ராசிகளுக்கு மட்டும் பதில் அளித்திருக்கிறீர்கள். மற்ற ஐந்து ராசிகளை விட்டுவிட்டீர்களே?***

தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம் ஆகிய ஐந்து ராசிகளில் பிறந்தவர்களுக்கு வீடு தெற்கு நோக்கிய வாசல் உள்ளதாக அமைவது நல்லது.

***124. நாங்கள் வாடகை வீட்டில் வசிக்கிறோம். கணபதி ஹோமம் செய்ய எங்கள் வீட்டு உரிமையாளர் அனுமதிக்கவில்லை. அதற்குப் பதில் ஏதேனும் பூஜை செய்யலாமா?***

பல கோயில்களில் தினசரி அதிகாலையில் கணபதி ஹோமம் செய்கின்றனர். அதில் பக்தர்கள் யார் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம். ஆலய நிர்வாகம் இதற்குக் கட்டணமாக ரூ.50 முதல் ரூ.100 வரை வசூலிக்கின்றனர். நாம் வீட்டில் கணபதி ஹோமம் செய்தால் பல ஆயிரங்கள் செலவாகும். நம் ஜென்ம நட்சத்திரம் வரும் நாட்கள் மற்றும் முக்கியமான நாட்களில் கோயிலில் கணபதி ஹோமம் செய்ய ஏற்பாடு செய்துவிடுங்கள். நமது நட்சத்திரம், ராசி, கோத்திரம், பெயர் ஆகியவற்றைச் சொல்லி நம் சார்பாக சங்கல்பம் செய்து முறைப்படி அவர்கள் செய்கின்றனர். நீங்கள் மாதா மாதம் கணபதி ஹோமம் செய்தாலும் நல்லது. மிகப் பெரிய பிரச்னையில் உள்ளவர்கள் தொடர்ந்து 21 நாட்கள் கணபதி ஹோமம் செய்தால் எப்பேர்ப்பட்ட பிரச்னையும் தீர்ந்துவிடும்.

***125. ஒவ்வொரு வியாழக்கிழமை அன்றும் கோயிலுக்குச் சென்று நவகிரகத்தில் உள்ள குருபகவானுக்கு அர்ச்சனை செய்து வருகிறேன். ஒருசிலர் தட்ஷிணாமூர்த்திக்குத்தான் அர்ச்சனை செய்ய வேண்டும் என்கிறார்கள். குரு பகவான் அருள் கிடைக்க வழிபட வேண்டியது தட்ஷிணா மூர்த்தியா அல்லது நவகிரகத்தில் உள்ள வியாழ பகவானா?***

இரண்டுமேதான்.

***126. பெரியவர்களையும் கடவுளையும் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குவதை எந்தத் திசை நோக்கிச் செய்ய வேண்டும்?***

தெற்கு தவிர மற்ற எல்லா திசை நோக்கியும் வணங்கலாம்.

***127.*** **இறைவனின் அருளைப் பெற மிகச் சுலபமான வழி எது?**

பாட்டுப் பாடுவதுதான் இறைவன் அருளைப் பெற மிகவும் சுலபமான வழி. கடவுள் இசைக்கு எளிதில் வசப்படுவார். கோயிலுக்குச் செல்வது, மந்திரங்களை உச்சாடனம் செய்வது, தீபம் ஏற்றுவது, ஹோமம் செய்வது, இதர திருப்பணிகள் செய்வது போன்ற அனைத்துச் செயல்களாலும் இறையருளைப் பெற முடியும். எனினும், இசைக்குத்தான் இறைவன் எளிதில் இறங்கி வருவான். உங்களால் பாட முடியாவிட்டால் பக்திப் பாடல்களை ஒலிக்கச் செய்தும் கேட்கலாம். உலகின் அனைத்து மதங்களிலும், அனைத்து நாடுகளிலும், மொழிகளிலும் இறைவழிபாடும் இசையும் இரண்டறக் கலந்தவை. ஆனாலும் நிந்தன் அதிசயம் யாவினுமே கானாமுதம் படைத்த காட்சி மகா விந்தையடா. காட்டு நெடுவானமெலாம் விந்தையெனில் பாட்டினைப் போல் ஆச்சர்யம் பாரின் மிசை இல்லையடாசு (பாரதியார்). அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறேசு (அப்பர்).

***128.*** **நவராத்திரிக்கு வீட்டில் கொலு வைக்கும் வழக்கம் எங்கள் குடும்பத்தில் இல்லை. இந்த ஆண்டு முதல் அதைத் தொடங்கலாமா?**

பரம்பரையாகக் கொலு வைக்கும் வழக்கம் இல்லாதவர்கள் அதைப் புதிதாகத் தொடங்க வேண்டாம். அதற்குப் பதில் நவராத்திரி பத்து நாட்களும் கோயிலுக்குச் சென்று அம்மனை வழிபடுங்கள். லலிதா சஹஸ்ரநாமம், லலிதா திரிசதி போன்றவை படிக்கலாம், அல்லது ஒலிக்கச் செய்து கேட்கலாம். நவராத்திரி நாட்களில் பல கோயில்களிலும் மடங்களிலும் சண்டி ஹோமம் நடைபெறும். அதில் கலந்துகொள்வது அதிக நன்மை அளிக்கும்.

***129.*** **ஒருவரின் ஜாதகத்தில் குரு உச்சம் பெற்றாலோ, சனி உச்சம் பெற்றாலோ அந்த ஜாதகருக்கு ஏற்படும் நன்மை, தீமைகள் என்ன?**

ரிஷபம், துலாம், மகரம், கும்பம் ஆகிய நான்கு லக்னங்களில் பிறந்தவர்களுக்கு நன்மை செய்யாத கிரகம் குரு. இவர்களுக்கு குரு உச்சமாக இருந்தால் வாழ்க்கையில் கடுமையான பிரச்னைகளைச் சந்திக்க நேரிடும். அதிலும் குரு தசை நடைபெற்றால் பாதிப்புகள் உச்சக்கட்டத்தில் இருக்கும். இவர்களுக்கு குரு நீச்சம் பெற்றால் சுகமான வாழ்வு அமையும். மற்ற லக்னங்களில் பிறந்தவர்களுக்கு குரு உச்சம் பெற்றால் அவர்கள் சுலபமாக வாழ்க்கையில் முன்னுக்கு வந்துவிடுவார்கள். செல்வச்

செழிப்பு, சமூக அந்தஸ்து, புகழ், அழகு, அறிவாற்றல் ஆகியவற்றில் சிறந்து விளங்குவர். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும்.

ரிஷபம், மிதுனம், துலாம், மகரம், கும்பம் ஆகிய லக்னங்களில் பிறந்தவர்களுக்குச் சனி முழுமையாக நன்மை செய்யும். இவர்களுக்கு ஜாதகத்தில் சனி உச்சம் பெற்றால் மிகப் பெரிய யோகத்தைக் கொடுக் கும். பொதுவாக சனி உச்சமாக இருந்தால் ஆயுள் தீர்க்கமாக இருக்கும். இது அனைத்து லக்னக்காரர்களுக்கும் பொருந்தும். சனி வலுவாக இருந் தால்தான் நீதித்துறையில் வல்லுனராக முடியும். சட்டத்தைக் கட்டிக் காக்கும் நீதிபதிகளுக்கு, சனி உச்சமாக இருக்கும் என்பது ஒரு பொதுவான பலன்.

சனியும் செவ்வாயும் உச்சமாக இருந்தால் நாடாளும் யோகம் ஏற் படும். சனியும் சுக்ரனும் உச்சமாக இருந்தால் மருத்துவம், கலைத் துறை ஆகியவற்றில் சாதனை புரிவர். சனியும் புதனும் உச்சமாக இருந்தால் சட் டக் கல்லூரிப் பேராசிரியர் அல்லது சட்ட நூல்கள் எழுதுபவர். சனியும் சந்திரனும் குருவும் உச்சமாக இருந்தால் மத போதகர், தத்துவஞானி. சனி யும் சூரியனும் உச்சமாக இருந்தால் வாழ்க்கையில் பெரும் பகுதி போராட்டமாகவே இருக்கும். ஜாதகத்தில் சனி உச்சம் பெறுவது என்பது பரம்பரை பரம்பரையாக வருகிற விஷயம். 1935, 1955, 1985 என 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை சனி உச்சமாகும் போதும் சில குடும்பங்களில் வாரிசு உருவாகும். அடுத்த வருடம் சனி மீண்டும் உச்சமாகப் போகிறது.

### 130. கோயில்களில் விற்பனை செய்யப்படும் தின்பண்டங்கள் அனைத் தும் இறைவனுக்கு நைவேத்தியம் செய்யப்படுகின்றனவா?

அவை இறைவனுக்குப் படைக்கப்பட்டால்தான் பிரசாதம். இல்லா விட்டால் வெறும் சாதம். கோயிலுக்குச் செல்லும் அடியவர்கள் அவற்றைக் கடவுளின் அருட்பிரசாதமாக நம்பி பய பக்தியுடன் வாங்கி உண்கின்றனர். தினமும் லட்சக்கணக்கான அடியவர்கள் வருகை புரியும் திருப்பதி திருமலையில் விற்கப்படும் அல்லது வழங்கப்படும் அனைத்து பிரசாதங்களும் மூலவரான வெங்கடாஜலபதி சன்னிதிக்கு எடுத்துச் செல் லப்பட்டு நைவேத்தியம் (அமுது செய்வித்தல்) நடந்த பிறகே விநியோ கிக்கப்படுகின்றன. தமிழக ஆலயங்களிலும் அவ்வாறு செய்கிறார்கள் என்னும் நம்பிக்கையில்தான் நாம் அவற்றை வாங்கி உண்கிறோம். பிரசா தக் கடை என்றாலே நைவேத்தியம் செய்த உணவுப் பொருட்களின் விற்பனைக்கூடம் என்றுதான் பொருள். இல்லாவிட்டால் அவை கேன்டீன்களாகிவிடும். தமிழகக் கோயில்களில் இயங்கும் பிரசாதக் கடை களில் விற்கப்படும் பொருட்கள் அனைத்தும் முறைப்படி இறைவனுக்கு

நைவேத்தியம் செய்யப்படுகின்றனவா என்பதை இந்து சமய அற நிலையத்துறைதான் கண்காணிக்க வேண்டும்.

**131.** **திருமணப் பொருத்தம் பார்க்கும்போது மிகவும் முக்கியமான பொருத்தங்கள் என்னவெல்லாம் இருக்க வேண்டும்? குறைந்தபட்சம் எத்தனை பொருத்தம் இருக்க வேண்டும்? தோஷங்கள் உள்ள ஜாதகத் துக்கு அதேபோல தோஷங்கள் உள்ள ஜாதகத்தைச் சேர்க்க வேண்டும் என்கிறார்களே, அது சரியா? திருமணம் கைகூட என்ன பரிகாரம்?**

தினம், கணம், மாகேந்திரம், ஸ்த்ரீதீர்க்கம், யோனி, ராசி, ராசி அதிபதி, வசியம், ரஜ்ஜு, வேதை என்பன பத்து பொருத்தங்கள். இவற்றில் ரஜ்ஜுப் பொருத்தமும் யோனிப் பொருத்தமும் அனைவருக்கும் அவசியம் இருக்க வேண்டும். இவை இரண்டும் சேர்த்து ஆறு அல்லது ஏழு பொருத்தங்கள் இருந்தாலே வாழ்க்கை நன்றாக அமையும். பெண்ணின் ராசியிலிருந்து ஆறாவது அல்லது எட்டாவது ராசியாக ஆணின் ராசி வரக் கூடாது. இதை சஷ்டாஷ்டகம் என்பார்கள். சூரியன் செவ்வாய் சேர்க்கை ஜாதகத்தில் எந்த இடத்தில் இருந்தாலும் தம்பதியரிடையே பிரிவு ஏற்படும். அது தொழில் நிமித்தமான பிரிவாகவும் இருக்கலாம். செவ்வாய் தோஷத்தை விட மிகக் கடுமையானது இந்தச் செவ்வாய் சூரியன் சேர்க்கை. அதேபோல மற்றொரு கடுமையான தோஷம் சந்திரனும், கேதுவும் ஒரே இடத்தில் இணைந்திருப்பது.

இத்தகைய தோஷம் உள்ளவர்களுக்கு அதற்குச் சமமான தோஷம் உள்ள ஜாதகத்தைப் பொருத்த வேண்டும். சுயம்வரா பார்வதி மந்திரத்தை ஜபம் செய்வதும் ஹோமம் செய்வதும் விரைவில் திருமணம் நடக்கவும், திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமையவும் சிறந்த பரிகாரங்கள். சிதம்பரம் நடராஜர் கோயில் தீட்சிதர்கள் இந்த ஹோமம் செய்வதில் வல்லவர்கள். ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் அந்தக் கோயிலில் இந்த ஜபத்தைச் செய்கின்றனர்.

**132.** **ஒரே தெய்வத்தை மட்டும் வழிபடுவது சரியானதா அல்லது எல்லா தெய்வங்களையும் வழிபட வேண்டுமா?**

ஹிந்து மதம் என்பது ஆறு பிரிவுகளைக்கொண்டது. சூரிய வழிபாட்டு முறைக்கு சௌரம் என்று பெயர். விநாயகர் வழிபாட்டுக்கு காணாபத்யம் என்று பெயர். விஷ்ணு வழிபாட்டுக்கு வைஷ்ணவம் என்று பெயர். சிவ வழிபாட்டுக்கு சைவம் என்று பெயர். முருகப் பெருமான் வழிபாட்டுக்கு கௌமாரம் என்று பெயர். அம்மன் வழிபாட்டுக்கு சாக்தம் என்று பெயர். இவை ஆறும் நமக்குத் தேவை என்று உணர்த்தியவர் ஆதிசங்கரர். மற்ற

மதங்களைக் காட்டிலும் நமது மதத்தில் வழிபாட்டு சுதந்தரம் சற்று அதிகம். நீங்கள் ஆறையும் வழிபடலாம் அல்லது ஒன்று போதும் என வும் இருந்துவிடலாம். உங்கள் மனத்துக்குப் பிடித்த கடவுளை நீங்கள் வழிபடலாம்.

***133. பாவம் - புண்ணியம் என்பதற்குச் சரியான விளக்கம் தேவை?***

பிறர் மனம் புண்படும்படி செய்யப்படும் அனைத்துச் செயல்களும் பாவம். பிறரின் துன்பங்களைப் போக்கி அவர்கள் மனதார உங்களை வாழ்த்தினால் அதுவே புண்ணியம். மக்கள் சேவையே மகேசன் சேவை. அன்புதான் அனைத்து சமயக் கோட்பாடுகளுக்கும் அடித்தளம். 'என்பிலதனை வெயில் போலக் காயுமே - அன்பிலதனை அறம்.' மரு மகளைக் கொடுமை செய்யும் பெண்கள் கோயிலுக்குச் சென்று குடம் குடமாகப் பாலாபிஷேகம் செய்தாலும் கடவுளின் அருள் கிடைக்காது.

***134. ஜோதிடர்கள் கைப்பட எழுதிய ஜாதகங்களுக்கும் கம்ப்யூட்டரில் கணிக்கப்பட்ட ஜாதகங்களுக்கும் நிறைய வித்தியாசம் வருகிறதே. நாம் எதைப் பின்பற்ற வேண்டும்?***

நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. பலருக்கும் இந்தக் குழப்பம் ஏற்படுகிறது. கம்ப்யூட்டர் என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட இயந்திரம். அதில் நாம் பதிவு செய்துள்ள தகவல்களின் அடிப்படையில் அது சற்றுத் துரிதமாகக் கணக்குப் போட்டு நமக்குத் தருகிறது. ஜோதிட மென்பொருட்களை உருவாக்கிய மனிதர்கள் அனைவரும் ஜோதிடக் கலையில் வல்லுனர்களாக இருக்க வாய்ப்பில்லை. ஒருவரின் பிறந்த தேதி - நேரம் - இடம் ஆகியவற்றைக்கொண்டு நான்கு இடங்களில் கம்ப் யூட்டர் ஜாதகம் கணித்தால் நான்கும் வெவ்வேறு விதமான ஜாதகங்களை நமக்கு அளிக்கின்றன. ஒருவரின் ஜாதகத்தைக் கணிப்பதற்கு வாக்கியப் பஞ்சாங்க முறையைப் பின்பற்றுவதே சரியானது.

திருக்கணிதப் பஞ்சாங்க அடிப்படையில் ஜாதகம் கணிப்பதில் எனக்கு உடன்பாடு கிடையாது. ஒரு ஜாதகத்தை ஜோதிடர் கணித்தாலும் கணினியின் துணைகொண்டு கணித்தாலும் அது வாக்கியப் பஞ்சாங்க முறைப்படி கணித்தால்தான் சரியானதாக இருக்கும். ஜாதகத்தை கம்ப் யூட்டரில் கணிப்பதில் தவறில்லை. ஆனால், அந்த கம்ப்யூட்டரில் வாக்கியப் பஞ்சாங்கம் சாஃப்ட்வேர் இருக்க வேண்டும்.

***135. வீட்டுக்கு வரும் மருமகளை வலது காலை எடுத்து வைத்து உள்ளே வா என்கிறார்களே... அது ஏன்?***

மங்களகரமான விஷயங்களுக்கெல்லாம் வலது கை வலது கால் பயன் படுத்துவது நமது மரபு. வலம் வருதல் என்றுதான் பிரதட்ஷணத்தைச் சொல்கிறோம். ராணுவ வீரர்கள் எதிரி நாட்டின் மீது போர் தொடுத்து அவர்களை அழிக்கச் செல்லும்போது லெஃப்ட் - ரைட் என்று முதலில் இடது காலை எடுத்து வைப்பார்கள். சண்டைக்குச் செல்லும்போது இடது காலும்; அமைதியாக குடும்பம் நடத்த வரும்போது வலது காலும் எடுத்து வைத்து வர வேண்டும். இடது காலை எடுத்து வைத்து பெண் உள்ளே வந்தால் வீடு யுத்தக் களமாகிவிடும்.

***136.** சனி பகவான் சன்னிதியில் எள்ளு முட்டை போன்ற ஒரு துணியில் நல்லெண்ணெய் தீபம் ஏற்றுகிறோம். இது சமீபகாலத்தில் ஏற்பட்ட வழக்கமா?*

மிகப் பழங்காலம் தொட்டே இது இருந்து வருகிறது. ஸ்ரீ முத்து ஸ்வாமி தீட்ஷிதரின் திவாகரதனுஜம் என்னும் யதுகுல காம்போதி ராகப் பாடலில் எள்ளுக் கிழி விளக்கேற்றும் வழிபாடு குறிப்பிடப்பட் டுள்ளது. செவ்வாய்க் கிழமைகளில் துர்க்கை சன்னிதியில் எலுமிச் சம் பழத்தில் விளக்கேற்றுகிறார்களே, அதுதான் சமீப காலத்தில் ஏற் பட்ட வழக்கம்.

***137.** அமெரிக்காவில் பிறந்த என் பேரனுக்கு ஜாதகம் கணிப்பதில் சில குழப்பங்கள் வருகின்றன. ஜென்ம நட்சத்திரம் திருவாதிரையா புனர்பூசமா என்று தெரியவில்லை. அயல்நாடுகளில் பிறந்த குழந்தை களுக்குத் துல்லியமான ஜாதகம் கணிக்க பின்பற்ற வேண்டிய முறை என்ன?*

குழந்தை எந்த ஊரில் பிறக்கின்றதோ அந்த ஊரின் தேதி, அங்கு உள்ள நேரம், லேட்டிட்யூட், லாங்டிட்யூட், சூரிய உதயம் ஆகிய வற்றைக் கொண்டு ஜாதகம் கணிக்க வேண்டும். அமெரிக்க நேரத்துக்கு இணையான இந்திய நேரத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது. அந்தக் குழந்தை ஜனனம் ஆன நேரத்தில் இந்தியாவில் என்ன நட் சத்திரம் என்பதைப் பார்க்க வேண்டாம். இந்திய நேரத்தில் 11 மணி நேரத்தைக் கூட்டியோ அல்லது கழித்தோ ஜாதகம் கணித்தாலும் தவ றான ஜாதகமே வரும்.

***138.** வீட்டில் ஜபம் அல்லது பூஜை செய்யும்போது எந்தத் திசை நோக்கி உட்கார வேண்டும்? தரையில் அமரலாமா? ஏதேனும் ஆசனம் அவசியம் தேவையா?*

கிழக்கு அல்லது மேற்கு நோக்கி உட்கார்தல் நலம். ஒரு மரப்பலகை அல்லது தர்பைப் புல்லால் செய்த தர்பாசனத்தில் அமர்ந்து கொண்டு ஜபம் அல்லது பூஜைகள் செய்ய வேண்டும். தர்பாசனத்தை அனைவரும் பயன்படுத்தலாம்.

***139.** நவகிரகங்களைத் தினமும் ஒன்பது முறை வலம் வருகிறேன். ஒரு சிலர் சனிக்கிழமை மட்டும்தான் நவக்கிரகத்தைச் சுற்ற வேண்டும் என்கிறார்கள். எது சரி?*

நவகிரக வழிபாட்டுக்கு, கிழமை கட்டுப்பாடு எதுவும் கிடையாது. தினமும் ஒன்பது முறை வலம் வருவது சரியே. எப்போது கோயிலுக்குச் சென்றாலும் பிற சன்னிதிகளைத் தரிசனம் செய்து விட்டுப் பிறகு கடைசியாக நவகிரகத்தை வழிபட வேண்டும். மூலவரை வழிபடாமல் வெறும் நவகிரகத்தை வழிபடக் கூடாது.

***140.** பிறந்த தேதி, நேரம் போன்ற விவரங்கள் சரியாகத் தெரியாதவர்கள் எப்படி ஜோதிடம் பார்ப்பது?*

ஜாதகம் இல்லாதவர்கள் கைரேகை மூலமாக ஜோதிடம் பார்க்கலாம். எத்தனை கோடி மக்கள் இருந்தாலும் ஒருவரின் கைரேகை போல் மற்றொருவருக்கு இருக்காது. இறைவனின் படைப்பில் இதுவும் ஒரு அதிசயம்.

***141.** என் மனைவி கர்ப்பவதியாக இருக்கிறாள். நான் புதிதாக வாங்கியுள்ள வீட்டுக்கு இப்போது கிரகப்பிரவேசம் செய்யலாமா? பிரசவம் ஆன பிறகுதான் வீடு மாற வேண்டுமா?*

பிரசவம் ஆன பிறகுதான் கிரகப்பிரவேசம் செய்ய வேண்டும். அதன் பிறகுதான் வீடு மாற்றம் செய்ய வேண்டும்.

***142.** சமாதி - அதிஷ்டானம் - ப்ருந்தாவனம் இவை மூன்றுக்கும் என்ன வேறுபாடு?*

மூன்றுமே ஒன்றுதான். பெயரில்தான் வித்தியாசம். சிவனடியாரின் சமாதியை அதிஷ்டானம் என்பார்கள். அதன் மீது சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும். வைணவ அடியவர்களின் சமாதியை ப்ருந்தாவனம் என்பார்கள். அங்கு துளசிச் செடி இருக்கும்.

***143.** ஏதேனும் கோயிலில் சந்தன மரம் தல விருட்சமாக உள்ளதா?*

ஸ்ரீவாஞ்சியம், திருநறையூர், சிவபுரம் ஆகிய மூன்று தலங்களில் சந்தன மரம், தல விருட்சம் என்று பழைய நூல்களில் கூறப்பட்டுள்ளது.

**144. வீட்டில் கிளி வளர்க்கலாமா?**

கூடாது. சுதந்தரமாகப் பறந்து செல்லும் அதன் உரிமையைப் பறிக்கக் கூடாது. கிளி மட்டுமின்றி எந்தப் பறவையையும் கூண்டில் அடைக்கும் உரிமை மனிதனுக்குக் கிடையாது. அவ்வாறு செய்தால் சிறை வாசம் கிடைக்கலாம். அல்லது எழுந்து நடமாட முடியாதபடி உடல் நிலை மோசமாகிவிடும் என்று தர்ம சாஸ்திரம் சொல்கிறது.

**145. என் பேரன் பிறந்த உடன் ஏதேனும் கோயிலுக்கு தத்து கொடுத்து விடுங்கள் என்று ஒரு ஜோதிடர் கூறினார். ஆனால் குடும்பச் சூழ்நிலைக் காரணமாக அவ்வாறு செய்ய இயலவில்லை. அவன் ஜாதகத்தில் சுவீகார தோஷம் இருப்பதாகச் சொல்கின்றனர். அந்தத் தோஷத்தைப் பற்றி விளக்கம் அளிக்கவும்.**

குழந்தை இல்லாதவர்கள் ஆதரவு அற்றவர் இல்லத்திலோ அல்லது தெரிந்தவர்கள் மூலமாகவோ குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்வதில் எந்தத் தவறும் கிடையாது. சட்ட ரீதியாகவும் சாஸ்திரப்படியும் 'சுவீ காரம்' என்பது அனுமதிக்கப்பட்ட ஒன்று. பழங்காலத்தில் தவிட்டுக்குக் குழந்தை வாங்கும் வழக்கம் இருந்தது என்று கர்ண பரம்பரைக் கதைகள் சொல்கின்றன.

ஜோதிட ரீதியாக சுவீகார தோஷம் என்பது செவ்வாய் - கேது சேர்க்கை ஏற்பட்டால் உண்டாகும். ஜாதகத்தில் உள்ள 12 கட்டங்களில் எந்த இடத்தில் செவ்வாயும் கேதுவும் ஒன்றாகச் சேர்ந்திருந்தாலும் சுவீகார தோஷம் உண்டு. இத்தகைய ஜாதக அமைப்பு உள்ளவர்களின் பரம்பரையில் முந்தைய மூன்று தலைமுறை அல்லது பிந்தைய மூன்று தலைமுறையில் தத்து எடுத்தல் அல்லது தத்து கொடுத்தல் நிகழ்ந்திருக்கும் அல்லது இனி நிகழும்.

இந்த தோஷம் இருந்தால் தமது பெற்றோரைத் தவிர மற்ற உறவினர்களுக்கு இறுதிச் சடங்கு செய்ய வேண்டிய சூழ்நிலை வரலாம். மனைவிக்குச் சகோதரர்கள் இல்லாததால் மாமியார் மாமனாருக்கு, கொள்ளி வைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். பெற்றோர்களுடன் சேர்ந்து வாழாமல் சிறு வயது முதலே ஹாஸ்டலில் தங்கிப் படித்து, பிறகு வெளியூரில் வேலை பார்த்து அங்கேயே செட்டிலாகி, தமது குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கும் இத்தகைய கிரக அமைப்பு ஜாதகத்தில் நிச்சயம் இருக்கும்.

வீட்டு மாப்பிள்ளையாக மனைவி வீட்டில் குடியேறியவர்களுக்கும், பெற்றோர்களை நட்டாற்றில் தவிக்க விட்டுச் சென்றவர்களுக்கும் செவ்வாய் - கேது சேர்க்கை இருக்கும்.

மற்ற எந்த உறவுகளை வேண்டுமானாலும் ஒருவர் வெட்டிவிட முடியும். ஆனால், தாய் என்னும் உறவு தொப்புள் கொடி உறவு. அதை வெட்ட முடியாது. துறவிகளுக்குக் கூட தாய் என்னும் உறவு உண்டு. பெற்ற தாய்க்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களைச் செய்யாமல் விட்டுவிட்டாலும் இந்த தோஷம் வரும். பெற்றோர்களால் பிறருக்குத் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகூட, தமது ஒரிஜினல் தாயாரின் உயிர் பிரியும் போது அவ்விடத்துக்கு வந்துவிட வேண்டுமாம்.

தாயார் உயிரோடு இருக்கும்போதும், இறந்த பிறகும் அவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை செய்யாததால் வருகின்ற பாவம்தான் இந்த சுவீகார தோஷம். இத்தகைய தோஷம் உள்ள குழந்தைகளை, அக் குழந்தை பிறந்தவுடன் ஒரு வருடத்துக்குள் ஏதேனும் ஒரு கோயிலுக்கு தத்து கொடுத்து விடுவார்கள். கேரளாவில் இந்த வழக்கம் சற்று அதிகம். அங்கு உள்ள சில கோயில்களின் பிரகாரத்தில் (நடையில்) குழந்தையை, பெற்றோர்கள் விட்டுச் செல்வர். ஆலய நிர்வாகத்தினர் அக்குழந்தையை எடுத்துச் சென்று மூலவரிடம் காண்பித்துவிட்டு மீண்டும் ஒரு நாழிகை கழித்து அதே இடத்தில் கொண்டு வந்து விட்டுவிடுவார்கள். இதை நடை கிடத்தான் என்பார்கள். தமிழ் நாட்டில் திருச்செந்தூர் கோயிலில் உள்ள திரிசுதந்திரர்கள் குழந்தையைத் தத்து எடுப்பதுபோல பாவனையாக எடுத்துக்கொண்டு, தவிட்டுக்குத் திரும்பவும் கொடுக்கும் வழக்கத்தை இன்றைக்கும் கடைப்பிடிக்கின்றனர்.

சில நூல்களில் செவ்வாயுடன் ராகு சேர்ந்தாலும் இந்த தோஷம் உண்டு என்று கூறப்பட்டுள்ளது. ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் வேறொருத்தி மகனாய் வளர்ந்த ஸ்ரீ கிருஷ்ணர் ஜாதகத்தில் சுவீகார தோஷம் உள்ளதை ஜோதிட ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

***146. எனது கணவரின் மூத்த சகோதரர் பத்து வருடங்களுக்கு முன்பு காணாமல் போய் விட்டார். அப்பொழுது அவருக்கு வயது 50. அவர் மனநிலை சரியில்லாதவர். எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?***

**12** வருடங்கள் அவரைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்காவிட்டால் அவர் இறந்து விட்டதாகக் கருதி மஹாளய அமாவாசைக்கு முந்தைய நாள் ஹதசஸ்த்ர மஹாளயத்தில் சிரார்த்தம் செய்யலாம். அவருக்குத் திதி கொடுக்கும் உரிமை உங்கள் கணவருக்கு உண்டு. இன்னும் இரண்டு

ஆண்டுகள் வரை எதுவும் செய்ய வேண்டாம்.

***147.*** **கோயில்களில் பூஜை நேரத்தில் மணி அடிப்பது பழங்காலம் முதலே இருந்து வருகிற வழக்கம். சமீப காலத்தில் மின்சாரத்தில் இயங்கும் மணி முரசு போன்றவை சில கோயில்களில் ஒலிக்கின்றன. இவ்வாறு செய்யலாமா?**

பழங்காலத்தில் கோயிலில் செய்யப்படும் அபிஷேகத்துக்குக் கிணற்றி லிருந்து நீர் இறைத்து எடுத்துக்கொண்டு வருவார்கள். ஆனால், தற்போது பெரும்பாலான கோயில்களில் பூமிக்கு அடியில் உள்ள நீரை மோட்டர் போட்டு இறைக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதில் ஒன்றும் தவறு இல்லை. வருங்காலத்தில் பூஜை செய்ய அர்ச்சகர் கிடைக்காமல் அதற்குப் பதில் ரோபோவைப் பயன்படுத்தும் நிலை வராமல் இருக்க வேண்டும்.

***148.*** **ராகுகாலத்தில் குழந்தை பிறந்தால் ஏதேனும் பரிகாரம் செய்ய வேண்டுமா?**

அது ஒரு தோஷம் அல்ல. ராகு காலத்தில் ஒரு குழந்தை பிறந்தால் குடும்பத்தில் யாருக்கும் எந்தக் கெடுதலும் நடக்காது. அதற்கென்று தனியாக எந்தப் பரிகாரமும் செய்ய வேண்டாம்.

***149.*** **மார்கழி மாதத்திலும் பிற விசேஷங்கள், பண்டிகை நாட்களிலும் அதிகாலையில் எழுந்து, வீட்டு வாசலில் தண்ணீர் தெளித்துக் கோலம் போடுவது வழக்கம். சிலர் முந்தைய நாள் இரவே கோலம் போடுகின்றனர். இது சரியா?**

அதிகாலையில் கோலம் போடுவதுதான் சரி.

***150.*** **படுக்கை அறையின் சுவரில் தெய்வத் திருவுருவப் படங்களை வைக்கலாமா? எந்த சுவாமி படம் இருந்தால் மிகவும் நல்லது?**

படுக்கை அறையில் சுவாமி படங்கள் இருக்கலாம். அதில் எந்தத் தவறும் கிடையாது. சிவனும் அம்பிகையும் இணைந்து காட்சியளிக்கும் அர்த்தநாரீஸ்வரர் படம் பெட்ரூமில் இருப்பது நல்லது. கணவன் - மனைவி இடையே நல்ல அன்னியோன்னியம் ஏற்பட அர்த்தநாரீஸ்வரர் வழிபாடு அவசியம்.

***151.*** **அங்கப் பிரதட்ஷணம் ஏன் செய்கிறார்கள்?**

மகான்களின் பாதங்களில் உள்ள தூசி நம் மீது பட்டாலே நமக்கு மிகவும் நல்லது. கோயிலுக்கு ஆயிரக்கணக்கான அடியவர்கள் வருகின்ற

னர். அவர்களில் சிலர் மகான்களாக இருக்கலாம். அந்த மகான்களில் திருப்பாதங்களிலிருந்து உதிர்ந்த பாத தூளி என்னும் சரணரேணு நம் மீது பட்டால் நாம் பிறவிப் பயனை அடைந்து விடுவோம் என்பது நம்பிக்கை. இதன் அடிப்படையில் உருவானதுதான் அங்கப்பிரதட்ஷணம். திருமால் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தை நிறைவு செய்துகொண்டு மீண்டும் வைகுண்டத் துக்குச் செல்லும்போது உத்தவன் என்பவரிடம், கலியுகத்தில் நாமசங் கீர்த்தனம் நடைபெறும் இடத்திலும் பாகவத உத்தமர்களின் சரேணுவிலும் என்னைக் காணலாம் என்று திருவாய் மலர்ந்தருளியதாக ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

இன்றைய சூழலில் யார் மகான் என்பதை ஆராய்ந்து அறிவது கடின மாக உள்ளதால், அனைத்து பக்தர்களும் நடந்து செல்லும் ஆலய பிரா காரத்தில் நாம் உருண்டு உருண்டு அங்கப்பிரதட்ஷணம் செய்கிறோம்.

***152.* தீபாவளித் திருநாளன்று வீட்டில் என்ன வழிபாடு செய்ய வேண்டும்?**

அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளித்து, புத்தாடை அணிந்து வீட்டில் சாமி கும்பிட வேண்டும். விடிந்த பிறகு கோயிலுக்குச் சென்று வழிபடலாம். மாலை நேரத்தில் லக்ஷ்மி குபேர பூஜை செய்தால் செல்வச் செழிப்பு உண்டாகும்.

***153.* திருமணம் ஆன பெண்கள் பிறந்த வீட்டுக் குலதெய்வத்தை வழி படலாமா?**

கணவர் வீட்டுக் குலதெய்வத்தை அவசியம் வழிபட வேண்டும். பிறந்த வீட்டுக் குலதெய்வத்தையும் வழிபடலாம். அதேபோல் ஆண் கள் தங்களின் குலதெய்வத்தையும் தாய் வழிப் பாட்டனாரின் குலதெய் வத்தையும் வழிபடுவது நல்லது. வைத்தீஸ்வரன் கோயில், திருப்பதி, உப்பிலியப்பன் கோயில், சுவாமிமலை, பழனி, சிறுவாச்சூர் மதுரகாளி கோயில், திருத்தணி போன்ற பல பிரபலமான கோயில்கள் லட்சக்கணக் கான குடும்பங்களுக்கு குலதெய்வமாக விளங்குகின்றன. யாருக்கு அவை குலதெய்வமோ அவர்கள் மட்டும்தான் அந்தக் கோயிலுக்குச் செல்வார்களா? அனைவரும் சென்று வழிபடக்கூடிய கோயில்கள் இவை. ஆகவே பிறந்த வீட்டுக் குலதெய்வத்தை, திருமணமான பெண் கள் வழிபடலாமே.

***154.* பெண் மூலம் நிர்மூலம், பூராடம் நூலாடாது என்றெல்லாம் கூறப் படும் பழமொழிகள் எந்த அளவுக்கு உண்மை?**

அவை உண்மையல்ல. மூட நம்பிக்கை. நம் நாட்டில் ஆயிரக்கணக்கான பழமொழிகள் உண்டு. அவற்றில் சிலவற்றை, காலப்போக்கில் சில விஷமிகள் மாற்றி விட்டனர். அவ்வாறு 'திரிபு' அடைந்த பழமொழிகளுள் பெண் மூலம் நிர்மூலம் என்பதும் ஒன்று. ஆண் மூலம் அரசாளும். அதிலும் பின் மூலமாயின் எதிரிகள் நிர்மூலம் என்பதுதான் உண்மை. பின் மூலமாக (4ம் பாதம்) ஓர் அரசன் இருந்தால் அவனது எதிரிகள் தோற்றுப் போவார்கள் என்பது இதன் பொருள். மாற்றப்பட்டுள்ள பழமொழிகள் நூறுக்கும் மேல் உள்ளன. அடி உதவுவது மாதிரி அண்ணன் தம்பிகூட உதவ மாட்டான் என்பதற்கு இறைவன் திருவடிகளில் சரண் புக வேண்டும் என்று அர்த்தம். ராமபிரானின் பாதுகைகள் அயோத்தியை ஆண்டபோது ஏற்பட்ட பழமொழி இது. அண்ணன் - தம்பி என்பது ராமன் - லக்ஷ்மணன். ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன் என்பதை 'ஆயிரம் பேரைக் கொன்றவன்' என்று மாற்றிச் சொல்கின்றனர். இதைப் போலத்தான் மூல நட்சத்திரத்தைப் பற்றிய தவறான கருத்து மக்களிடையே நிலவுகிறது. மற்ற நட்சத்திரத்தில் பிறந்த பெண்களின் மாமனார்களெல்லாம் நூறு வயதா வாழ்கிறார்கள்?

**155. இறந்தவர்களுக்காக மோட்ச தீபம் எப்படி ஏற்ற வேண்டும்? எங்கு அதைச் செய்வது?**

சிதம்பரம் நடராஜர் கோயிலில் தெற்கு கோபுரம் - கிழக்கு கோபுரம் ஆகியவற்றின் மீது மோட்ச தீபம் ஏற்றப்படுகிறது. ஆலய தீக்ஷிதர்கள் இதைச் செய்கின்றனர்.

**156. அமாவாசையன்று பிறந்தவர்கள் திருடர்களாக இருப்பார்கள் என்னும் கருத்து சரியா?**

இது தவறான கருத்து. பல மகான்கள் அமாவாசையன்று பிறந்துள்ளனர்.

**157. கோயிலில் பிரசாதமாக வழங்கப்படும் எலுமிச்சைப் பழத்தை எப்படிப் பயன்படுத்துவது?**

ஜூஸ் பிழிந்து பருகலாம்.

**158. கோயிலுக்குச் செல்லும்போது நெய், திரி, தீப்பெட்டி, அகல் ஆகியவற்றைக் கைப்பையில் எடுத்துச் செல்வதில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. என் போன்ற உத்தியோகத்தில் உள்ள பெண்கள் பல**

ருக்கும் இத்தகைய பிரச்னை உண்டு. இறை வழிபாட்டின்போது நெய் தீபம் ஏற்றுவதற்குப் பதில் என்ன செய்யலாம்?

வாசனை மலர்கள் வாங்கி இறைவனுக்குச் சமர்ப்பிக்கலாம். தீபம் ஏற்றுவதால் கிடைக்கும் நற்பலன் புஷ்ப கைங்கரியம் செய்தாலும் கிடைக்கும். உங்கள் சக்திக்கேற்ப மலர்கள் வாங்கி ஆலய அர்ச்சகரிடம் கொடுத்து இறைவனைப் பிரார்த்தனை செய்துகொள்ளுங்கள்.

**159. எனக்கு 60-ம் ஆண்டு நிறைவடைகிறது. சஷ்டி அப்த பூர்த்தி விழாவை வீட்டில் கொண்டாடுவதா அல்லது திருக்கடையூரிலா என்று குழம்பிக்கொண்டிருக்கிறோம், தங்கள் அறிவுரை என்ன?**

சஷ்டி அப்த பூர்த்தி என்பது ஒரு பரிகார பூஜை. அதைச் சமீப காலத்தில் ஒரு பெரிய விழாவாக மாற்றிவிட்டார்கள். தமிழ் வருடங்கள் 60. ஆகவே, ஒவ்வொரு 60 வருடத்துக்கு ஒருமுறை அதே கிரக நிலை உருவாகும். இப்பொழுது கர வருடம் கார்த்திகை மாதம் வரும் பரணி நட்சத்திர நாளில் என்ன கிரக நிலவரம் உள்ளதோ அதே கிரக நிலவரம் 1951-ல் இருந்திருக்கும். 2071-லும் வரும். நாம் பிறந்தபோது இருந்த அதே கிரக நிலவரம் மீண்டும் வருவதை ஒருமுறைதான் நாம் பார்க்க முடியும். அந்த நாளில் நவக்கிரக சாந்தி செய்வது, ம்ருத்யுஞ்ஜய மந்திரம் ஜெபிப்பது, ஆயுள் விருத்திக்காக ஆயுஷ் ஹோமம் செய்வது, ஏகாதச ருத்ர ஜபம் செய்வது போன்ற அனைத்தும் செய்ய வேண்டும். ஆயுள் விருத்தி, நல்ல ஆரோக்கியம் ஆகியவை கிடைக்க நாம் செய்யும் முக்கியமான பரிகாரம் இது. அவரவர் வசிக்கும் வீட்டிலோ அல்லது தத்தம் ஊரிலோ இதைச் செய்யலாம். மார்க்கண்டேயனுக்கு 'என்றும் 16 வயது' என்னும் சிரஞ்ஜீவி பட்டம் வழங்கப்பட்ட தலம் திருக்கடையூர். அபிராமபட்டருக்கு மரண தண்டனை ரத்து செய்யப்பட்ட தலம் அது. ஆகவே, அங்கு சென்று மணிவிழா கொண்டாடுவது அண்மைக் காலத்தில் சற்று அதிகரித்துள்ளது. சஷ்டி அப்த பூர்த்தி அவசியம் செய்துகொள்ள வேண்டும். அதில் ஆடம்பரம், படாடோபம் தவிர்த்து ஜபம், ஹோமம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்தல் நல்லது.

**160. வீட்டில் பல வருடங்களாக பூஜை செய்து வரும் சுவாமி விக்ரகம் பின்னமாகி விட்டது. அதை என்ன செய்ய வேண்டும்?**

பின்னமடைந்த (உடைந்து போன) விக்ரகங்கள், மகாமேரு, சளக்ராமம் போன்ற எதையும் வீட்டில் வைத்து பூஜை செய்யக்கூடாது. அவற்றை குளம், ஏரி, ஆறு, கடல் போன்ற ஏதேனும் நீர்நிலைகளில் சேர்த்துவிட வேண்டும். பின்னமடைந்த திருவாராதனப் பெருமாளுக்கு

பதிலாக வேறு ஒரு புதிய விக்ரகத்தை வாங்கி ப்ராணப்ரதிஷ்டா செய்து பூஜையில் சேர்த்து விடவும்.

**161. அன்னதானம் உயர்வானது என்கிறார்களே, ஏன்?**

மனிதன் போதும் போதும் என்று சொல்ல வைப்பது உணவு ஒன்று தான். ஆகவேதான் அன்னதானம் உயர்வானது.

**162. வீட்டில் பூஜை அறையில் தக்ஷிணாமூர்த்தி படத்தை எந்தத் திசையில் வைக்க வேண்டும்?**

தெற்கு நோக்கி இருப்பதால் அவருக்கு தக்ஷிணாமூர்த்தி என்று பெயர். தென்முகக் கடவுளின் படத்தைத் தெற்கு நோக்கிப் பார்த்தபடிதான் வைக்க வேண்டும்.

**163. எனது தாயாருக்கு வைகுண்ட ஏகாதசியன்று சிரார்த்தம் வருகிறது. அன்று திவசம் செய்தால் உணவளிக்க வேண்டும், நானும் சாப்பிட வேண்டும். ஆகவே மறுநாள் துவாதசியன்று திதி கொடுக்க வேண்டும் என்று ஒரு பெரியவர் சொல்கிறார். நாங்கள் என்ன செய்வது?**

உங்களின் தாய் இறந்தது ஏகாதசி திதியில் என்றால் நீங்கள் ஏகாதசியன்றுதான் திவசம் செய்ய வேண்டும். விரதங்கள், தெய்வ வழிபாடு, பூஜை எல்லாமே பித்ருகளுக்குப் பிறகுதான். முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய கர்மாக்களைச் செய்யாமல் விரதம் இருப்பது ஏற்புடையது அல்ல. மாதா, பிதா, குரு அதன் பிறகுதான் தெய்வம். ஏகாதசியன்று செய்ய வேண்டிய சிரார்த்தத்தை துவாதசியன்று செய்யக்கூடாது. வைகுண்ட ஏகாதசியன்று தாயாருக்கு சிரார்த்தம் செய்தே ஆக வேண்டும். விரத நாட்களில் தாய்- தந்தையர் திவசம் வந்தால் விரதத்தை அனுஷ்டிக்க வேண்டாம். திதி கொடுப்பதுதான் முக்கியம்.

**164. எனக்கு குரு தசை நடைபெறுகிறது. வியாழக்கிழமை தோறும் தக்ஷிணாமூர்த்திக்கு, கொண்டைக்கடலை மாலை போடுகிறேன். அந்த மாலையில் எத்தனை கொண்டைக் கடலை இருக்க வேண்டும்?**

கொண்டைக் கடலை மாலை போடுவதில் எனக்கு உடன்பாடு கிடையாது. அதற்கு பதில் சுண்டல் செய்து நிவேதனம் பண்ணி நீங்களும் உண்டு பிற பக்தர்களுக்கு விநியோகம் செய்யுங்கள். உணவுப் பண்டங்களை இறைவனுக்கு நிவேதனம் செய்வது வழக்கம். இப்பொழுது புதிது புதிதாக ஜிலேபி மாலை, லட்டு மாலை என்றெல்லாம்

சாமிக்குப் போடுகிறார்கள். இந்தப் பழக்கம் இப்படியே வளர்ந்து கொண்டே போனால் இளைய தலைமுறை பிஸ்ஸா மாலை, பர்கர் மாலை என ஆரம்பித்துவிடுவார்கள்!

**165. கோயிலுக்குப் போய் சாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்ததும் பிச்சைக்காரர்களுக்குக் காசு போட்டால் சாமி கும்பிட்ட புண்ணியம் பிச்சைக்காரருக்குப் போய் விடுமா?**

நீங்கள் சந்தேகப்படுவதுபோல் கோயிலில் இருந்து வெளியே வருபவர்களின் புண்ணியம் எல்லாம் அந்தப் பிச்சைக்காரருக்குப் போயிருந்தால் அவர் கோடீஸ்வரர் ஆகியிருப்பார். பிறருக்குத் தானம் கொடுத்தால், இறைவன் மகிழ்கிறான். கோயிலுக்குச் செல்லும் முன்பும் கொடுக்கலாம். கோயிலின் உள்ளேயும் கொடுக்கலாம். வெளியே வந்ததும் கொடுக்கலாம். தானம் செய்தால் புண்ணியம் அதிகமாகும். ஒருபோதும் குறையாது. இதுபோன்ற மூட நம்பிக்கைகளை நம்பாதீர்கள். கொடுக்கக் கொடுக்க செல்வம் வளரும்.

**166. 'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' என்று ஒரு பழமொழி கூறப்படுகிறது. நல்ல காரியம் செய்வதற்கு, புதன்கிழமைதான் மிகச் சிறந்த நாளா?**

சுப காரியங்களை செவ்வாய், சனி தவிர பிற ஐந்து கிழமைகளிலும் செய்யலாம். பொன் என்பது குரு என்னும் வியாழ கிரகத்தைக் குறிக்கும். ஒருவர் ஜாதகத்தில் குரு நல்ல நிலையில் இருப்பது கூட அபூர்வமானதல்ல. ஆனால், புதன் நல்ல நிலையில் இருப்பது மிகவும் அரிதான விஷயம் என்பதுதான் இந்தப் பழமொழியின் அர்த்தம். ஒருவருக்குச் செல்வம் கிடைப்பது கூட அரிதல்ல. ஆனால், கல்வி அறிவு கிடைப்பது மிகவும் சிரமம் என்று புரிந்துகொள்ள வேண்டும். குரு செல்வத்தையும் புதன் கல்வியையும் குறிக்கும். இந்தப் பழமொழியில் வரும் புதன் என்னும் சொல் புதன்கிழமையைக் குறிப்பதல்ல. 'கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை.'

**167. காயத்ரி மந்திரத்தை அந்தணர் அல்லாத பிற இனத்தவரும் ஜபிக்கலாமா?**

நம்பிக்கை உள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் உச்சரிக்கலாம். காயத்ரி மந்திரத்தை உருவாக்கிய விஸ்வாமித்திரர் அந்தணர் இல்லை. அவர் ஒரு ஷத்திரியர். மந்திரங்கள் எந்த ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கும் சொந்தமானது இல்லை. ஆனால், காயத்ரி மந்திரம் ஜபம் செய்பவர்கள்,

சுத்த சைவ உணவு மட்டுமே சாப்பிட வேண்டும்.

***168. திருநள்ளாறு சனி கோயிலுக்குச் சென்று சாமி கும்பிட்டுவிட்டு நேராக வீட்டுக்குத்தான் வர வேண்டுமா? வேறு எந்தக் கோயிலுக்கும் போகக் கூடாதா? அங்கு அர்ச்சனை செய்த பிரசாதப் பொருட்களை வீட்டுக்கு எடுத்து வரலாமா? ஓர் இரவு அங்கே கட்டாயம் தங்க வேண்டுமா? குளத்தில் குளித்தால் பழைய ஆடை ஒன்றை, விட வேண்டுமா? அஷ்டமத்து சனி, ஏழரை சனி போன்ற எதுவும் இல்லாதவர்கள் திருநள்ளாறு போகலாமா?***

திருநள்ளாறு என்பது சனி கோயில் அல்ல. அது ஒரு சிவன் கோயில். அங்கு சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு, அப்படியே பிற கோயில்களுக்கும் செல்லலாம். அங்கு வழங்கப்படும் பிரசாதப் பொருட்களை வீட்டுக்கு எடுத்து வரலாம். இரவு தங்குவது கட்டாயம் இல்லை. குளத்தில் (நள தீர்த்தம்) குளித்தால் உடுத்தியிருக்கும் பழைய உடை ஏதேனும் ஒன்றை நீரில் விடுவது சமீப காலத்தில் மக்கள் கடைப்பிடிக்கும் ஒரு வழக்கம். அது கட்டாயம் இல்லை. அவசியமும் இல்லை. திருநள்ளாறு தலத்தில் எழுந்தருளி உள்ள சுயம்பு சிவ பெருமானுக்கு, தர்பாரண்யேஸ்வரர் என்பது திருநாமம். தியாகராஜன் என்னும் திருநாமத்துடன் சிவபெருமான் எழுந்தருளி உள்ள ஏழு சிவத்தலங்களை, சப்த விடங்கத் தலங்கள் என்று கூறுவதுண்டு. திருவாரூர் போலவே திருநள்ளாறிலும் தியாகராஜர் என்னும் சிவன் சன்னிதி உண்டு. தர்பாரண்யேஸ்வரர், தியாகராஜர் தவிர மரகதலிங்கம் ஒன்றும் அங்கு உள்ளது.

திருநள்ளாறு செல்பவர்கள் இந்த மூன்று சிவத் திருமேனிகளையும் தரிசனம் செய்ய வேண்டும். அம்பிகை, ப்ராணாம்பிகை, ப்ராணேஸ்வரி, போகமார்த்த பூண்முலையாள் என்றெல்லாம் திருநாமம் கொண்டு அருள் பாலிக்கிறாள். சிவனையும் அம்பாளையும் வழிபட்ட பிறகே சனீஸ்வர பகவானை வழிபட வேண்டும்.

நளனுக்கு சனி தோஷம் நீங்க அருள் செய்தவர் தர்பாரண்யேஸ்வரர். ஆகவே, அந்தச் சிவபெருமானை வழிபட்டால், சனி கிரகத்தால் ஏற்படும் தீமைகள் விலகும். தேவாரம் பாடப்பட்ட 276 சிவஸ்தலங்களுள் திருநள்ளாறும் ஒன்று. அத்தலத்துக்கு 12 ராசியில் பிறந்தவர்களும் சென்று வழிபடலாம். என்றைக்கு வேண்டுமானாலும் போகலாம்.

***169. களத்திர தோஷம் என்றால் என்ன?***

களத்திரம் என்றால் வாழ்க்கைத் துணை என்று பொருள். களத்திர தோஷம் உள்ளவர்களுக்குத் திருமணம் தாமதமாகும்; திருமணமே

நடக்காது; திருமண வாழ்க்கையில் பிரச்னைகள் ஏற்பட்டு திருமண முறிவு ஏற்படும்; இறுதி வரை ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளாமல் வாழ்ந்துகொண்டிருப்பார்கள்; இப்படி ஏதோ ஒரு வகையில் இல்வாழ்க்கை இனிப்பாக இருக்காது. பொதுவாக லக்னத்துக்கு ஏழாம் இடத்தில் உள்ள கிரகங்களைக் கொண்டு களத்திர தோஷம் உள்ளதா இல்லையா என்று தீர்மானிக்கப்படும். லக்னத்துக்கு ஏழு எட்டு ஆகிய வீடுகள் காலியாக இருந்தால் சுத்த ஜாதகம் என்று கூறுவது தவறு. ஏழுக்குடையவனின் வலிமை, சுக்ரனின் வலிமை ஆகியவற்றைக் கொண்டே களத்திர ஸ்தானத்தில் தோஷம் உள்ளதா என்பதை உணர வேண்டும். சில லக்னங்களுக்கு ஏழில் சுப கிரகம் இருந்தாலும் களத்திர தோஷம் உண்டு. பொதுவாக ஏழில் சுக்ரன் நல்லதல்ல. இதை காரகோ பாவ நாஸ்த்தி என்று ஜோதிட நூல்கள் கூறுகின்றன. மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய லக்னங்களுக்கு ஏழில் குரு, புதன் போன்ற சுப கிரகங்கள் இருந்தாலும் களத்திர தோஷம் உண்டு.

**170. திருமணத்துக்காகப் பொருத்தம் பார்க்கும்போது சஷ்டாஷ்டகம் இருக்கக் கூடாது என்கிறார்களே...?**

சஷ்ட என்றால் ஆறு; அஷ்ட என்றால் எட்டு, பெண் ராசியிலிருந்து எண்ணும்போது ஆறாவது அல்லது எட்டாவது ராசியாக ஆண் ராசி வரக் கூடாது. பெண்ணின் ராசியும் ஆணின் ராசியும் ஒன்றுக்கொன்று ஆறு எட்டாகவோ அல்லது எட்டு ஆறாகவோ வந்தால் அதை சஷ்டாஷ்டக தோஷம் என்று கூறுவர். திருமணப் பொருத்தம் பார்க்கும் போது இந்த தோஷம் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கணவன் - மனைவியரிடையே சண்டை நடக்கும்.

**171. மார்கழி மாதத்தில் திருமணப் பேச்சு வார்த்தை நடத்தலாமா?**

திருமண முகூர்த்தம் மட்டும்தான் மார்கழி மாதத்தில் வைக்கக்கூடாது. மற்றபடி ஜாதகம் கொடுப்பது, வாங்குவது, பொருத்தம் பார்ப்பது, பெண் பார்ப்பது, திருமணப் பேச்சு வார்த்தை நடத்துவது போன்ற அனைத்தும் மார்கழியில் செய்யலாம்.

**172. பெண்கள் புஷ்பவதியாகும் நேரத்தைக் குறித்து வைத்து, ருது ஜாதகம் என்று கணிக்கிறார்களே, அதற்கு எந்த அளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்?**

ஜனன கால ஜாதகம் மிகவும் முக்கியமானது. அது இல்லாத பெண்

களுக்கு ருது ஜாதகத்தை அடிப்படையாகக் கொண்டு பலன் கூறலாம். ஜனன கால ஜாதகம் துல்லியமாகக் கணிக்கப்பட்டிருந்தால் ருது ஜாதகத்துக்கு, பெரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதில்லை.

***173. ஒவ்வொரு கிழமைக்கும் ஏற்றாற்போல் கலர் கலராக உடை அணிந்துகொண்டால் அதிர்ஷ்டம் வருமா?***

மிகப் பெரிய சாதனைகள் புரிந்த தலைவர்கள் பலரும் வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சட்டையும்தான் அணிந்துகொண்டிருந்தனர். நிறங்களால் அதிர்ஷ்டம் வரும் என்பது ஏற்புடையதல்ல.

***174. நான் தினமும் ஆழ்வார்பேட்டை ஆஞ்சநேயர் கோயிலில் 108 முறை பிரதட்ஷணம் செய்து வருகிறேன். சில நாட்களில் கோயில் திறந்திருக்கும் நேரத்தில் கோயிலுக்குச் செல்ல முடியவில்லை. நடை சாற்றிய பிறகு பிரதட்ஷணம் செய்யலாமா?***

செய்யலாம்.

***175. மான் தோல் மீது உட்கார்ந்து ஜெபம் செய்தால் ஞானம் வருமா?***

போலீஸ்தான் வரும்.

***176. குழந்தைக்குப் பெயர் வைக்கும்போது கவனிக்க வேண்டியவை என்ன?***

ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் இன்ன இன்ன எழுத்துகளில் பெயர் தொடங்க வேண்டும் என்று ஜோதிடம் கூறுகிறது. என்ன நட்சத்திரத்துக்கு என்ன எழுத்து என்பதை பஞ்சாங்கத்தில் பார்த்துக்கொள்ளவும். குழந்தைகளின் பெயர் ஏதேனும் ஒரு தெய்வத்தின் பெயராக இருக்க வேண்டும். எந்தப் பெயர் வைத்தாலும் அதற்கு என்ன அர்த்தம் என்று தெரிந்துகொண்டு வைக்க வேண்டும். அனைவரும் சுலபமாகக் கூப்பிடக் கூடிய வாயில் நுழையும் எளிமையான பெயர்களை வைக்க வேண்டும். நியூமராலஜியில் எனக்குக் கடுகளவும் நம்பிக்கை கிடையாது. ஆங்கில எழுத்துகளுக்கு ஏதோ தெய்விக சக்தி உள்ளதாகச் சொல்வது மகா அபத்தம். விஷ்ணு சஹஸ்ரநாமம், லலிதா சஹஸ்ரநாமம் போன்றவற்றிலிருந்து தேர்ந்தெடுத்து, ஒரு நல்ல பெயராகக் குழந்தைகளுக்குச் சூட்டுங்கள்.

**177.** ஒருவர் பிறக்கும்போது ஜாதகத்தில் சனி உச்சமாக இருப்பதால் என்ன பலன்?

ஜாதகத்தில் சனி உச்சமாக உள்ளவர்கள் பெரும்பாலும் 80 வயதுக்கு மேல் வாழ்வார்கள் என்பது பொதுவான பலன். மிகவும் அபூர்வமாக சில விதி விலக்குகளும் இதற்கு உண்டு.

**178.** குழந்தைகள் நன்றாகப் படிப்பதற்கு என்ன வழிபாடு செய்ய வேண்டும்?

கணபதி, ஹயக்ரீவர், சரஸ்வதி ஆகிய தெய்வங்களின் சுலோகங் களைத் தினமும் சொல்வது நல்லது. நன்னிலம் அருகில் உள்ள கூத்தனூர் சென்று, சரஸ்வதி கோயிலில் வழிபாடு செய்துவிட்டு வாருங்கள்.

**179.** திருமண முகூர்த்தம் குறிக்கும்போது நல்ல நாள், நல்ல நேரம் பார்த்து முகூர்த்த நேரத்தை முடிவு செய்கிறோம். அதற்கு முந்தைய நாள் கரிநாளாக இருந்தால் அன்று கல்யாண மண்டபத்துக்குச் செல்வது; மாப்பிள்ளை அழைப்பு நடத்துவது போன்ற பிற விஷயங்களைச் செய்ய லாமா?

தாலி கட்டும் நேரம் நல்ல நேரமாக இருப்பது மிகவும் அவசியம். மற்றவற்றுக்கும் நல்ல முகூர்த்த நாள் அமைவது நடைமுறையில் சாத்தியமில்லை. மண்டபத்துக்குக் கிளம்புவது, உள்ளே நுழைவது போன்றவற்றை நல்ல சுபஹோரைப் பார்த்துச் செய்யலாம்.

**180.** திருமாங்கல்யத்துக்குத் தங்கம் உருக்க உகந்த நாள் என்று பஞ்சாங் கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளக்கம் என்ன?

பழைய காலத்தில் திருமணம் நிச்சயம் ஆன பிறகு, ஒரு நல்ல நாள், நேரம் பார்த்து - தங்க நகை செய்பவரை வீட்டுக்கு வரவழைத்து தங்கக் காசை உருக்கித் திருமாங்கல்யம் செய்வார்கள். இதில் இரு வீட்டாரும் கலந்துகொள்வார்கள். தடபுடலாக விருந்து வைத்து இதை ஒரு சிறிய விழாவாக நடத்துவார்கள். திருமாங்கல்யம் செய்து கொடுத்த ஆசாரிக்கு வேட்டி வாங்கிக் கொடுத்து, தாம்பூலத்தில் தட்சணை எல்லாம் வைத்து மரியாதை செய்வார்கள். இன்றைக்கும் இலங்கைத் தமிழர்கள் இந்த வழக்கத்தைக் கடைப்பிடிக்கின்றனர். நாம் நகைக் கடைக்குச் சென்று ரெடிமேட் தாலி வாங்குகிறோம். ஆகவே, பொன் உருக்கும் அவசியம் நமக்கு இல்லாமல் போய்விட்டது.

***181.*** *சமீப காலத்தில் சில திருமணங்களில் நாதஸ்வரத்துக்குப் பதில் டேப் அல்லது சி.டி. ஒலிக்கிறது. இது சரியா?*

மங்கல வாத்தியம் என்னும் நாதஸ்வரமும் தவிலும் இல்லாமல் திரு மணம் நடத்துவதில் எனக்கு உடன்பாடு கிடையாது. தவில், நாதஸ்வரம் அவசியம். திருமணத்தில் நேரடியாக ஒலிக்க வேண்டும்.

***182.*** *வீட்டில் துளசி மாடம் வைத்துள்ளோம். அதிலிருந்து தினசரி பூஜைக்கு சில துளசி இலைகளைப் பறித்துக்கொள்ளலாமா?*

துளசி மாடத்தில் உள்ள துளசிச் செடியிலிருந்து தினசரி பூஜைக்கு இலைகளைப் பறிக்கக்கூடாது. அதற்கெனத் தனியாகச் சில துளசிச் செடிகளைத் தோட்டத்தில் வளர்க்கவும்.

***183.*** *என் மனைவிக்கும் மகளுக்கும் ஒரே ராசி. இருவருக்கும் சிம்மம். இதனால் ஏதேனும் நன்மை அல்லது கெடுதல் உண்டா?*

ஒரு குடும்பத்தில் குழந்தை பிறக்கும்போது அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களின் நட்சத்திரம் ஏதேனும் ஒன்றில்தான் பிறக்கும். அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, சித்தப்பா, பெரியப்பா, சித்தி, பெரியம்மா, அத்தை, மாமா, அண்ணன், அக்கா ஆகியோரின் நட்சத்திரத்தில்தான் குழந்தை பிறக்கும். அதுதான் இயற்கை. எட்டு பேர் உள்ள ஒரு குடும்பத்தில் ஆறு பேர் ஒரே நட்சத்திரத்தில் பிறந்துள்ளனர். இறைவனின் படைப்பில் இது ரொம்ப சகஜம். இதனால் எந்தத் தீமையும் கிடையாது. நன்மைதான். தம் முகச் சாயல் மட்டும் வர வேண்டும். ஆனால், தமது நட்சத்திரம் வரக்கூடாது என்று பலர் நினைக்கின்றனர். இது தவறான எண்ணம்.

***184.*** *நில நடுக்கம், பெரு வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களை ஜோதிட சாஸ்திரங்கள் மூலம் முன்கூட்டியே கண்டறிய முடியுமா?*

கடந்த 112 ஆண்டுகளாக வெளிவரும் ஆற்காடு கா.வெ.சீதாராமய்யர், சர்வ முகூர்த்தப் பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு வருடமும் தேதி வாரியாக இந்த ஆண்டு நடைபெறவுள்ள இயற்கைச் சீற்றங்களின் விவரங்கள் கொடுக்கப்படுகின்றன.

குஜராத் பூகம்பம், சுனாமிப் பேரலை, ஜப்பான் நில நடுக்கம் போன்ற பல இயற்கைச் சீற்றங்கள் அந்தப் பஞ்சாங்கத்தில் முன்கூட்டியே தெரி விக்கப்பட்டிருந்தன. கர வருடத்தில் பால், நெய் ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படும். அவற்றின் விலை உயரும் என்று எல்லா பஞ் சாங்கங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. விலைவாசி உயர்வு,

இயற்கைச் சீற்றம் ஆகியவற்றை ஜோதிட ரீதியாக முன்கூட்டியே சொல்ல முடியும். சொல்லிக்கொண்டுதான் இருக்கிறோம்.

***185. பில்லி, சூன்யம், செய்வினை என்பது நிஜமா? சாத்தியமா? இப் பாதிப்பு நமக்கு இருப்பதை எப்படி உணர்வது? பரிகாரம் என்ன?***

பில்லி, சூன்யம், செய்வினை என்பதெல்லாம் நிஜம்தான். ஆனால், இன்று அதில் கை தேர்ந்தவர்கள் யாருமில்லை. அதைச் செய்வது சாத்தியமில்லை. நூறு வருடத்துக்கு முன்புகூட, பல ஞானிகள் கடவுளைக் கண்டுள்ளனர். இன்று ஒரு பாட்டுப் பாடி கடவுளை வர வழைக்கும் சக்தி வாய்ந்த மகான் யாருமில்லை. ஒரு மந்திரம் போட்டு அடுத்தவன் பிழைப்பைக் கெடுக்கும் சூன்யக்காரரும் யாருமில்லை. அருணகிரிநாதரின் அதலசேடனாராட என்னும் திருப்புகழைப் படித்து வந்தால் துர் தேவதைகள் அண்டாது.

***186. என் மகள் திருமணம் வேண்டாம் என்கிறாள். அவளது தோழி ஒருத்தியின் மண வாழ்க்கை ஒரே மாதத்தில் முறிந்து விட்டதால், இவள் பயப்படுகிறாள் என நினைக்கிறோம். இதற்கு என்ன தீர்வு?***

யாரோ ஒருவர் சாலையில் நடந்து செல்லும்போது விபத்து நடந்து விட்டது என்பதால், நான் தெரு பக்கமே போகாமல் வீட்டுக்குள்ளேயே இருந்து விடுகிறேன் என்று சொல்வதுபோல் உள்ளது உங்களின் மகளுடைய பேச்சு. மனவியல் மருத்துவரிடம் அழைத்துச் சென்று கவுன்சிலிங் பண்ணுங்கள். வாழ்க்கையின் யதார்த்தங்களை எடுத்துச் சொல்லுங்கள். அவரின் மனம் மாற இறைவனைப் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்.

***187. கடந்த 42 வருடங்களாக வெள்ளிக் கிழமைதோறும் லலிதா சஹஸ்ரநாமம் சொல்லி புஷ்பங்களாலும் குங்குமத்தாலும் அம்பாளுக்கு அர்ச்சனை செய்து வருகிறேன். சில மாதங்களுக்கு முன்பு என் கணவர் கால மாகிவிட்டார். இனி நான் குங்குமத்தால் அர்ச்சனை செய்யலாமா?***

தங்களின் பூஜையை அப்படியே தொடர்ந்து செய்து வாருங்கள். குங்கும அர்ச்சனை செய்யலாம்.

***188. பரணி நட்சத்திரத்தில் பிறந்த அனைவரும் தரணி ஆள்வார்களா?***

புனர்பூசத்தில் பிறந்தவர்கள் அனைவரும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைப் போல் ஏகபத்தினி விரதனாக இருப்பார்களா?

***189. நவாம்சக் கட்டத்துக்கு பலன் பார்ப்பது எப்படி?***

ராசிக் கட்டம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நவாம்சம். ஒரு சிலர் குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு நவாம்சம் பார்க்க வேண்டாம் என்று சொல்கின்றனர். அது தவறு. அனைவருக்கும் நவாம்சம் அவசியம் பார்க்க வேண்டும். ஒரு கிரகத்தின் பலம் எப்படி உள்ளது என்பதை நவாம்சத்தைக் கொண்டு அறியலாம். ராசிக் கட்டத்தில் நல்ல நிலையில் உள்ள ஒரு கிரகம் நவாம்சத்தில் நீச்சம் பெற்றிருந்தால் அந்த கிரகம் வலுவிழந்துவிட்டதாக அர்த்தம்.

அதேபோல ராசிக் கட்டத்தில் பலவீனமாக உள்ள ஒரு கிரகம் நவாம் சத்தில் உச்சம் பெற்று விட்டால், அது வலுவாக உள்ளதாக எடுத்துக் கொள்ள வேண்டும். ராசிக் கட்டத்தில் லக்னத்துக்கு 7ஆம் வீட்டோன் நவாம்சத்தில் பலவீனமாகி பாப கிரகச் சேர்க்கை பெற்றால் களத்திர தோஷம் உண்டு, வாக்கியப் பஞ்சாங்கப்படி நவாம் சம் வலுவாக இருக்க வேண்டும்.

***190. கடன் பிரச்னை தீர மிகச் சிறந்த பரிகாரம் எது?***

செவ்வாய்க்கிழமைகளில் திருவண்ணாமலையில் கிரிவலம் செய்தால் கடன் பிரச்னையில் இருந்து விடுபடுவீர்கள். 26 வாரம் அல்லது 52 வாரம் தொடர்ச்சியாகவோ அல்லது விட்டு விட்டோ இதைச் செய்யலாம்.

***191. எனக்குத் திருமணம் நடைபெற்று பதினைந்து வருடங்கள் ஆகின்றன. எனக்கும் என் மனைவிக்கும் ஜாதகப் பொருத்தமே இல்லை என சில ஜோதிடர்கள் கூறுகின்றனர். நாங்கள் மகிழ்ச்சியாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், வாழ்க்கையில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. இதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?***

தம்பதியரிடையே நல்ல ஜாதகப் பொருத்தம் இல்லாவிட்டால் வாழ்க்கையில் முன்னேற்றம் தடைபடும் என்பது முற்றிலும் உண்மை. ராமேஸ்வரத்தில் உள்ள அக்னி தீர்த்தம் முதல் கோடி தீர்த்தம் வழிபாடு செய்வது ஒன்றுதான் இதற்குப் பரிகாரம்.

***192. எங்கள் வீட்டில் வில்வ மரம் பெரிதாக வளர்ந்துள்ளது. கார் ஷெட் கட்டுவதற்காக அதை வெட்ட வேண்டும் என்று என் மகன் கூறுகிறான். அவ்வாறு செய்யலாமா?***

வீட்டில் வில்வ மரம் வளர்ந்தால் லக்ஷ்மி கடாட்ஷம் உண்டாகும். அதை வெட்டக்கூடாது.

***193.*** ***குடும்பத்தில் யாரேனும் இறந்துவிட்டால் ஒரு வருடத்துக்குள் திருமணம் நடத்தலாமா?***

நடத்தலாம்.

***194.*** ***அவசரச் செலவுக்காக நண்பர்கள் யாரேனும் வெள்ளிக்கிழமையில் பணம் கேட்டால் கொடுக்கலாமா?***

'உடுக்கை இழந்தவன் கைபோல. ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு'... வெள்ளிக்கிழமையில் பிறருக்குப் பணம் கொடுத்தால், உங்கள் செல்வம் குறையாது.

***195.*** ***எனக்கு கனவுத் தொல்லை அதிகமாக உள்ளது. தூக்கம் தடைபடுகிறது. நிம்மதியான உறக்கம் இன்றி அவதிப்படுகிறேன். இதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?***

இரவு படுக்கை அறைக்குச் செல்வதற்கு முன் ஆஞ்சநேயரை மனதார பிரார்த்தனை செய்து, ராமநாமத்தை ஐந்து நிமிடம் ஜபம் செய்துவிட்டு, படுத்துக்கொள்ளுங்கள். அனுமனை வழிபட்டால் துர்சொப்பனம் வராது.

***196.*** ***விவாகரத்தான ஒரு பெண்ணுக்கு இரண்டாவது திருமணம் செய்ய உள்ளோம். அதை வைதிக முறைப்படி ஹோமம் வளர்த்துச் செய்யலாமா?***

வைதிக முறைப்படி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தாலி கட்டி, மாலை மாற்றிக்கொண்டால் போதும். ஹோமம் சப்தவிதி போன்றவை கன்னிகாதானத்துக்கு மட்டும்தான்.

***197.*** ***சில ஆலயத் திருவிழாக்கள், ஆன்மிக நிகழ்ச்சிகள், அருளாளர்களின் சொற்பொழிவுகள் போன்றவற்றுக்கு மிகப் பெரிய அளவில் விளம்பரம் செய்யும் வழக்கம் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளது. அரசியல் கட்சிகளின் மாநாடு போன்ற விளம்பரம் கடவுளுக்கும் தேவையா?***

ஒரு நல்ல விஷயம் நடைபெறும்போது அதைப் பலருக்கும் தெரியப் படுத்தினால்தான் மக்கள் பயனடைவார்கள். அவ்வாறு விளம்பரப்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை. ஆலயத் திருவிழாக்களின் விளம்பரங்களை 'ஸ்பான்சர்' செய்ய கார்பரேட் நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

***198.*** ***பெண்கள் தங்கக் கொலுசு அணியலாமா?***

தங்கம் லக்ஷ்மிதேவியின் அம்சம். தங்கத்தால் செய்த கொலுசு, மெட்டி போன்றவற்றை காலில் அணிவது தவறு. பெண்களின் உடலில் எப்பொழுதும் தங்கம் இருக்க வேண்டும். தங்கத்தோடு காதில் இருந்தால் முதுகெலும்பு அதாவது ஸ்பைனல் கார்ட் வலுவாக இருக்கும். முதுகு வலி வராது. கழுத்தில் தங்கம் இருப்பது வயிற்றுப் பகுதிக்கு நல்லது. மூக்கில் தங்கம் அணிந்தால் கண் பார்வைக்கு நல்லது. காலில் தங்கம் பட்டால் வாத நோய்கள் வரும். காலில் தங்க நகைகள் அணிந்தால் செல்வம் கரைந்து விடும். ஸ்ரீசூக்தம் என்னும் வேத மந்திரம் தங்கத்துக்கும் லக்ஷ்மி தேவிக்கும் உள்ள தொடர்பை எடுத்துரைக்கிறது. அதைக் கொலுசாகவோ, மெட்டியாகவோ அணியக்கூடாது.

**199. மகான்களை வழிபடுவதால் என்ன பலன்?**

ஜாதகரீதியாக நடைபெற முடியாத சில விஷயங்கள் கூட, மகான்களின் அருள் கிடைத்தால் நடந்துவிடும். ஒரு மனிதனின் விதியை மாற்றும் சக்தி மகான்களுக்கு உண்டு. மகான்களின் ஜீவ சமாதிக்கு வியாழக்கிழமைகளில் சென்று பிரார்த்தனை செய்துகொண்டால் அதிக அளவில் நன்மைகள் நடக்கும்.

**200. திருமணப் பொருத்தம் பார்க்கும்போது தசா சந்தி வரக்கூடாது என்கிறார்களே, அது என்ன?**

ஆண்-பெண் இருவருக்கும் ஒரே தசை நடைபெற்றால் தசா சந்தி என்பார்கள். திருமணப் பொருத்தம் பார்க்கும்போது அடுத்த 40 வருடங்களுக்கு இருவருக்கும் வரப் போகும் தசைகளைக் கணக்கிடுவது வழக்கம். இரண்டு பேருக்கும் ஒரே நேரத்தில் மோசமான தசைகள் வந்தால் தசா சந்தி உள்ளது என்று சொல்லி, திருமணத்தைத் தவிர்த்து விடுவார்கள். நன்மை செய்யும் கிரகத்தின் தசை ஒரே நேரத்தில் இருவருக்கும் வந்தால் தசா சந்தி இருக்கலாம்.

**201. ஒரே குடும்பத்துக்குள் திருமணம் செய்துகொள்ளும்போது ஜாதகப் பொருத்தம் பார்க்க வேண்டுமா?**

சொந்த அத்தை மகள், தாய் மாமாவின் மகள் போன்ற முறைப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதாக இருந்தாலும் ஜாதகப் பொருத்தம் பார்ப்பது அவசியம்.

**202. ஒரு ஜாதகத்தில் லக்னத்துக்கு 5-ல் ராகு இருந்தால் அவருக்குக்**

குழந்தை பிறக்காது என்று சிலர் சொல்கின்றனர். இது சரியா?

நல்ல அறிவாளியான ஆண் குழந்தை பிறக்கும். 5ல் ராகு இருந்தால் புத்திர தோஷம் கிடையாது.

**203.** குழந்தைக்குக் காது குத்த நல்ல நாள் பார்ப்பது எப்படி?

குழந்தை பிறந்த 6,7,8வது நாளில் அல்லது முதல் பிறந்த நாளில் காது குத்தும் விழா செய்யலாம். இரண்டு திதி அல்லது இரண்டு நட்சத்திரம் வராத நாளாக அது இருக்க வேண்டும். திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய 4 கிழமைகளும் வளர்பிறை, த்விதியை, திரிதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, திரயோதசி ஆகிய 6 திதிகளும், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சித்திரை, திருவோணம், அவிட்டம், ரேவதி ஆகிய 8 நட்சத்திரங்களும் சிம்மம், விருச்சிகம், கும்பம் தவிர மற்ற 9 லக்னங்களும், கர்ணவேதை (காதுகுத்தல்) செய்ய உகந்தவை. லக்னத்துக்கு 8-ம் இடத்தில் பாவ கிரகங்கள் இருக்கக் கூடாது. குழந்தைக்கும் பெற்றோர்களுக்கும் சந்திராஷ்டமம் இருக்கக்கூடாது. குழந்தையின் தாய் மாமாவின் மடியில் அமர்த்திக் காது குத்தல் செய்ய வேண்டும்.

**204.** வீட்டுக்கு தெற்கு வாசல் நல்லதா?

அதுதான் மிகவும் நல்லது.

**205.** குழந்தைகளுக்கு எந்த வயதிலிருந்து ஜாதகப் பலன் பார்க்கலாம்?

ஐந்து வயது முதல், அவசியமிருந்தால் பார்க்கலாம்.

**206.** எனக்கு மகர லக்னம் கும்ப ராசி. தற்போது சனி தசை நடைபெறுகிறது. நீலக்கல் மோதிரம் அணியலாமா?

நீலக்கல் மோதிரம் அணிவதை அனைவருமே தவிர்ப்பது நல்லது. நீங்கள் அணிய வேண்டாம்.

**207.** வீட்டிலோ, கோயிலிலோ தீபம் ஏற்றி வணங்க விளக்கின் திரி எந்தத் திசை நோக்கி இருக்க வேண்டும்?

கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகளில் எதை நோக்கி வேண்டுமானாலும் திரி இருக்கலாம். தெற்கு திசை பார்த்து திரி உள்ளபடி விளக்கேற்றக் கூடாது.

**208. எங்களுக்குத் திருமணமாகி பத்து வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. என் கணவரின் குடும்பத்தில் சிலர் கருத்தரித்த பின் தாமாக முன்வந்து கருச்சிதைவு (அபார்ஷன்) செய்து கொண்டுள்ளனர். இது ஒரு பாவச் செயலா? அதனால்தான் எங்களுக்குக் குழந்தை பிறக்கவில்லையா? இதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?**

கருத்தரித்த பிறகு தாமாக முன் வந்து அபார்ஷன் செய்துகொள்வது மிகக் கடுமையான பாவச் செயல். நமது சாஸ்திரங்கள் இதைப் பஞ்ச மாபாதகச் செயல் என்கிறது. ஒவ்வொரு கருவுக்கும் ஆத்மா உண்டு. அந்தக் கருவை அழிக்கும் உரிமை நமக்குக் கிடையாது. நமது குடும்பத்தில் வாழ்ந்து மறைந்த தாத்தா-பாட்டி, கொள்ளுத் தாத்தா, கொள்ளுப் பாட்டி போன்ற யாரோ ஒருவர் மீண்டும் பிறவி எடுப்பதற்காக வயிற்றில் கருவாக உருவாகிறார். அபார்ஷன் செய்துகொள்வதன் மூலமாக அவர்களைக் கொலை செய்த பாவம் உண்டாகிறது. இதனால் ஜாதகத்தில் பித்ரு தோஷம் ஏற்படும். சிசுஹத்தனம் என்னும் பஞ்சமாபாதகச் செயலைச் செய்த குடும்பங்களில் நான்கு விதமான பிரச்னைகள் வரும். திருமணமே நடக்காது, அல்லது 40 வயதுக்கு மேல் திருமணம் ஆகும். அல்லது மணவாழ்க்கை முறிவடையும் அல்லது குழந்தை பிறக்காது அல்லது மூளை வளர்ச்சி இல்லாத குழந்தை பிறக்கும். இதற்குப் பரிகாரமாக கயா சென்று விஷ்ணு பாதத்தில் முன்னோர்களுக்கு பிண்டம் போட்டு, அட்ஷய வட சிராத்தம் செய்ய வேண்டும். ராமேஸ்வரத்தில் தில ஹோமம் செய்தாலும் இந்த தோஷம் விலகும். உங்கள் கடிதத்தில் மாமனார் இருக்கிறார் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். எனவே இப் பரிகாரங்களை அவர்தான் செய்ய வேண்டும். தந்தை உயிரோடு உள்ளவர்கள் தில ஹோமம், கயா சிராத்தம் போன்றவை செய்யக்கூடாது.

**209. சாப்பிடும்போது எந்தத் திசையில் உட்கார்ந்து சாப்பிட வேண்டும்?**

கிழக்கு நோக்கி அமர்ந்து உணவு உட்கொண்டால் ஆயுள்விருத்தி உண்டாகும். மேற்கு பார்த்தபடி உட்கார்ந்து சாப்பிட்டால் செல்வம் பெருகும். தெற்கு பார்த்தபடி சாப்பிட்டால் புகழ் உண்டாகும். வடக்கு நோக்கி அமர்ந்து உணவு அருந்தக்கூடாது. நின்றுகொண்டு சாப்பிடுவதும் தவறு. பஃபே உணவு விருந்துகளைத் தவிர்ப்பது நல்லது.

**210. பங்குனி மாதத்தில் சுப விசேஷங்கள் நடத்தலாமா?**

கிரகப்பிரவேசம் என்னும் புதுமனைப் புகுவிழா தவிர மற்ற அனைத்து சுப விசேஷங்களும் பங்குனியில் நடத்தலாம்.

**211.** **மந்திரங்களை உரத்த குரலில் சொல்ல வேண்டுமா அல்லது மனத்துக்குள் உச்சரிக்க வேண்டுமா?**

குருவிடமிருந்து உபதேசம் பெற்ற மூல மந்திரங்களை உரக்கச் சொல்லக் கூடாது. மற்ற மந்திரங்களை உரக்கச் சொல்லலாம். மந்திரம் என்ற சொல்லுக்கே மெல்லச் சொல்லுதல் என்றும் ஓர் அர்த்தம் உண்டு. சங்கீதத்தில் கீழ்ஸ்தாயி என்பதை மந்திரஸ்தாயி என்பார்கள். நாம சங்கீர்த்தனம் செய்யும்போது உரத்த குரலில் பகவான் திருநாமத்தை வாய்விட்டுச் சொல்ல வேண்டும். மெல்லிய குரலில் மந்திரம் சொல்வது தான் ஜபம் செய்யும் முறை.

**212.** **நான் கடந்த இரண்டு வருடங்களாக வெளிநாட்டில் வேலை பார்த்த தால் எனது தந்தையின் சிரார்த்தம் செய்ய முடியாமல் போய்விட்டது. அவற்றை எந்த நாளில் செய்ய வேண்டும்? விடுபட்டுப் போன திவ சத்தைச் செய்ய ஏதேனும் சிறப்பு விதி உள்ளதா?**

கடல் தாண்டிப் போனதற்கு பிராயச்சித்தமாக கூஷ்மாண்ட ஹோமம் செய்ய வேண்டும். தேய்பிறை, அஷ்டமி, ஏகாதசி, அமாவாசை ஆகிய மூன்று திதிகளில் ஏதேனும் ஒன்றில் விட்டுப் போன சிரார்த்தத்தை நீங்கள் வசிக்கும் ஊரிலேயே செய்யலாம். அல்லது காசி, கயா, பத்ரி, ராமேஸ்வரம், திருவெண்காடு ஆகிய ஊர்களில் என்றைக்கு வேண்டு மானாலும் தாய், தந்தையருக்குச் சிரார்த்தம் செய்யலாம்.

**213.** **பெண்களின் கர்ப்பப்பை தொடர்பான நோய்கள் குணமாக ஏதேனும் சிறப்புப் பரிகாரம் உள்ளதா?**

கர்ப்பப்பை நோய்கள், மாதவிடாய்க் கோளாறுகள், மெனோபாஸ் பிரச்னைகள் தீர கேரள மாநிலம் செங்கனூர் பகவதி அம்மனை வேண்டிக் கொண்டால் போதும். இத்தகைய நோயினால் அவதிப்படும் ஏராளமான பெண்கள் தினமும் அங்கு வந்து பிரார்த்தனை செய்து சிறப்பு வழிபாடுகள் செய்கின்றனர். ஆச்சர்யப்படும் அளவுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படு கிறது. செங்கனூர் சென்று வாருங்கள். யூட்ரஸை எடுக்க வேண்டாம்.

**214.** **கடன் தீரவும் செல்வச் செழிப்பு உண்டாகவும் என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?**

வெள்ளிக்கிழமைகளில் கோ பூஜை செய்யுங்கள். பசுத்தாய் வழிபாடு வாழ்வில் பசுமை உண்டாக்கும்.

**215.** ஒரு பெண்ணின் ஜாதகத்தில் லக்னத்துக்கு 7ல் ராகு இருந்தால் என்ன பலன்? இது ஒரு தோஷமா?

ராகுவுக்கு போக காரகன் என்று பெயர். ஏழில் ராகு இருந்தால் சுகபோகமான திருமண வாழ்க்கை அமையும். இல்லறம் இன்பமயமாக இருக்கும். இது ஒரு தோஷம் அல்ல. ஏழில் கேது இருந்தால் களத்திர தோஷம் உண்டு.

**216.** அக்னி நட்சத்திரம் என்னும் கத்திரி காலத்தில் திருமணம் செய்யலாமா?

செய்யலாம். அக்னி நட்சத்திரக் காலத்தில் அனைத்து விதமான சுப விசேஷங்களும் நடத்தலாம்.

https://t.me/Digital_eLibrary

**217.** விபரீத ராஜயோகம் என்றால் என்ன?

தீமை செய்யும் கிரகங்கள் அனைத்தும் ஒரு ஜாதகத்தில் வலுவிழந்து, நன்மை செய்யும் கிரகங்கள் நல்ல பலமாக இருந்தால் அதை விபரீத ராஜ யோகம் என்பார்கள். லக்னத்துக்கு 3,6,8,12 ஆகிய வீடுகளுக்கு அதிபதிகள் நீச்சம் பெற வேண்டும். அல்லது மறைவு ஸ்தானத்தில் இருக்க வேண்டும். லக்னாதிபதி, 4,7,10, 5,9 ஆகிய வீடுகளுக்கு அதிபதியான கிரகங்கள் கேந்திர, திரிகோணங்களில் இருக்க வேண்டும். இப்படி ஒரு ஜாதகம் அமைந்தால் விபரீத ராஜயோகம் உண்டாகும்.

**218.** வீட்டில் பூஜை அறையில் சங்கு வைத்துக்கொள்ளலாமா?

சங்கு என்பது மங்கலகரமான ஒரு பொருள். பூஜை செய்யும்போது சங்குக்கும் பூஜை செய்வது வழக்கம். திருமாலின் திருக்கரம் பாஞ்சஜன்யம் என்னும் சங்கைத் தாங்கியுள்ளது. நாம் வீட்டை விட்டுக் கிளம்பும்போது சங்கு ஒலிக்கும் நாதம் கேட்டால் நல்ல சகுனம். சங்கில் நீர் நிரப்பி சுவாமிக்கு அபிஷேகம் செய்வது வழக்கம். வலம்புரிச் சங்கு வீட்டில் இருந்தால் லக்ஷ்மி கடாட்ஷம் உண்டாகும்.

**219.** வாஸ்து புருஷன் நித்திரை விடும் நாள் என்று பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் மட்டும்தான் கட்டடம் கட்ட ஆரம்பிக்க வேண்டுமா?

வாஸ்து நாட்களில் வீடு கட்ட ஆரம்பிப்பது மிகவும் நல்லது. மற்ற நல்ல முகூர்த்த நாட்களிலும் கட்டுமானப் பணியைத் தொடங்கலாம்.

**220. வசந்த நவராத்திரி என்றால் என்ன?**

ஒரு வருடத்தில் நான்கு நவராத்திரிகள் கொண்டாடப்படுகின்றன. இவை நான்குமே அம்பிகை வழிபாட்டில் முக்கியமானவை. புரட்டாசி மாதத்து அமாவாசைக்கு மறுநாள் ஆரம்பமாகும் நவராத்திரிக்கு சாரதா நவராத்திரி என்று பெயர். இது அனைவரும் கொண்டாடும் மிகப் பிரபல மான நவராத்திரி. இது ஆஸ்வீண மாத சுத்தப்ரதமையில் ஆரம்பமாகும். அடுத்து மார்கழி மாத அமாவாசைக்கு மறுநாள் புஷ்யப்ரதமையில் ஆரம் பித்து ஒன்பது நாள் கொண்டாடப்படுவது வாராகி நவராத்திரி, பங்குனி மாத அமாவாசைக்கு மறுநாள் சைத்ர சுத்தப்ரதமையில் தொடங்கி ஒன் பது நாட்களுக்கு வசந்த நவராத்திரி கொண்டாடப்படுகிறது. ஆனி மாதம் அமாவாசைக்கு மறுநாள் ஆஷாட சுத்த ப்ரதமை தினத்தில் ஆரம்பமாகி ஒன்பது நாட்களுக்கு ராஜமாதங்கி நவராத்திரி கொண்டாடப்படுகிறது. சக்தி வழிபாடு செய்யும் ஸ்ரீவித்யா உபாசகர்கள் இந்த நான்கு நவராத்திரி களையும் கொண்டாடுவது வழக்கம்.

**221. எந்த ராசியில் பிறந்தவர்கள் எந்த விரதங்களைப் பின்பற்ற வேண்டும்?**

பொதுவாக ஏகாதசி விரதம் இருப்பது அனைவருக்கும் நல்லது. மேஷம், கடகம், விருச்சிகம் ஆகிய ராசிக்காரர்கள் வளர்பிறை சஷ்டி மாதக் கார்த்திகை ஆகிய நாட்களிலோ அல்லது செவ்வாய்க்கிழமை களிலோ விரதம் இருக்கலாம். ரிஷபம், கன்னி, துலாம், மகரம், கும்பம் ஆகிய ராசியினர் திருவோண விரதம் அல்லது சனிக்கிழமைகளில் விரதம் இருக்கலாம். சிம்ம ராசிக்காரர்கள் வியாழக்கிழமை விரதம் இருப்பது நல் லது. தனுசு, மீனம் ஆகிய ராசிகளில் பிறந்தவர்கள் பிரதோஷம் அல்லது திங்கட்கிழமைகளில் விரதம் இருக்கலாம். சதுர்த்தி விரதம் இருந்தால் கேட்பது கிடைக்கும். வளர்பிறை, தேய்பிறை என இரண்டு சதுர்த்தி யிலும் விரதம் இருப்பது வழக்கம். இதை அனைவரும் அனுஷ்டிக்கலாம்.

**222. வியாழக்கிழமைகளில் எந்தக் குருவை வழிபட வேண்டும்? நவகிரக சன்னிதியில் உள்ள வியாழ பகவானையா? தட்சிணாமூர்த்தி யையா? மகான்களையா?**

குரு வழிபாடு என்பது நவகிரகங்களில் ஒன்றான வியாழனை வழிபடுவது. தேவ குரு என்னும் பிரகஸ்பதியை வியாழ பகவான் என்கி றோம். நவகிரகங்களில் ஒன்றான குருவுக்கு மஞ்சள் நிற வஸ்திரம் அணிவித்து குரு அஷ்டோத்திரம் சொல்லி அர்ச்சனை செய்து வழி

பட்டால் மிகவும் நல்லது. இதை அனைவரும் செய்யலாம். தட்சிணா மூர்த்தி என்பது சிவபெருமானின் ஓர் அம்சம். சிவனின் 64 வடிவங்களில் தட்சிணாமூர்த்தியும் ஒன்று. ஆல மரத்தடியில் மௌனமாக தெற்கு நோக்கி அமர்ந்து சனகாதி முனிவர்களுக்கு ஞானோபதேசம் செய்யும் குருவாக விளங்குபவர் தட்சிணாமூர்த்தி. அவரை வழிபட்டால் கல்வி, நல்ல அறிவு, தெளிந்த ஞானம் ஆகியவை கிடைக்கும். நவகிரகத்தில் உள்ள குரு வேறு; தட்சிணாமூர்த்தி வேறு. ஜாதக ரீதியாக குருவின் நிலை சரியில்லை என்றால் நவகிரகத்தில் உள்ள வியாழ பகவானை வழிபடுவது மிகவும் முக்கியம். தட்சிணாமூர்த்தி வழிபாடு கல்விச் செல்வத்தைக் கொடுக்கும். வியாழக்கிழமைகளில் மகான்களை வழிபட்டால் வரப் போகும் தீமைகள் விலகிவிடும்.

**223. வாஸ்து மீன், சிரிக்கும் புத்தர் சிலை, சைனா மணி போன்றவை வீட்டில் இருந்தால் செல்வம் கொழிக்கும் என்கிறார்களே. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

இது சமீப காலத்தில் ஏற்பட்ட சென்டிமெண்ட். சாஸ்திரங்களில் இவை பற்றிய குறிப்புகள் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. வீட்டை அழகுபடுத்தும் பொருட்களாகவே இவற்றை நான் பார்க்கிறேன்.

**224. சீதா பிராட்டி விரித்த கூந்தலுடன் கவலைப்பட்டுக்கொண்டு அசோகவனத்தில் அமர்ந்திருப்பது போன்ற படம் ஒன்று எங்கள் வீட்டில் பல வருடங்களாக உள்ளது. ரவிவர்மா வரைந்த படம் என்பதால் அதன் மதிப்பு இன்று ஒரு லட்சத்துக்கும் மேல் இருக்கும். இந்தப் படத்தை வீட்டில் வைத்துக்கொள்ளக்கூடாது என்று ஒரு பெரியவர் சொல்கிறார். நாங்கள் என்ன செய்வது?**

பொது இடங்களில் அந்தப் படம் இருக்கலாம். வீட்டில் வேண்டாம்.

**225. பூண்டு, வெங்காயம் ஆகிய இரண்டையும் அதிகம் சாப்பிட்டால் ஆரோக்கியத்துக்கு நல்லது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆனால், ஆன்மிகவாதிகளோ அதை அறவே விட்டுவிடு என போதிக்கின்றனர். நாங்கள் எதைப் பின்பற்றுவது?**

ஒரு மனிதனின் குணத்தை சத்வகுணம், தமோ குணம், ரஜோ குணம் என மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். சத்வகுணம் என்பது சாந்தமாக இருப்பது. ஆனால், சுறுசுறுப்பாக இயங்குவது; தமோ குணம் என்பது

சோம்பேறித்தனமாகவும் தத்தியாகவும் இருப்பது; ரஜோகுணம் என்பது ஆக்ரோஷமாகவும் அதிக சுறுசுறுப்புடனும் செயல்படுவது. ஒரு மனிதனின் உணவுப் பழக்கவழக்கத்தைப் பொறுத்தே அவனுடைய குணம் மாறுபடுகிறது. பகவத் கீதையில் ஆகார நியமம் பற்றி பரமாத்மா எடுத்துரைக்கிறார். ஆழ்நிலை தியானம் செய்பவர்கள், மந்திரங்களைப் பல முறை உச்சரித்து மந்திர சித்தி பெற விரும்புகிறவர்கள். யோகா பயிற்சி செய்பவர்கள், குண்டலினி சக்தியை எழுப்ப முயற்சிப்பவர்களாக இருக்க வேண்டும். ஒரு காவல்துறை ஊழியர் ரஜோ குணம் கொண்டவராகத்தான் இருக்க வேண்டும். பூண்டு, வெங்காயம் சத்வ குணத்தைப் போக்கி, ரஜோ குணத்தை அதிகரிக்கச் செய்யும். குண்டலினி சக்தியை எழுப்ப அது தடையாக இருக்கும். பூண்டு, வெங்காயத்துக்கு பாலுணர்ச்சியைத் தூண்டும் ஆற்றல் உண்டு. ஆகவேதான், தீவிரமாக ஆன்மிகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இவற்றைத் தவிர்க்கச் சொன்னது. டாக்டர்கள் கூறும் கருத்து முற்றிலும் சரியானதே. நீங்கள் இளம் வயதினராகவும் உடல் உழைப்பு அதிகம் உள்ளவராகவும் இருந்தால் டாக்டர்கள் சொல்வதுபோல் நிறைய பூண்டு, வெங்காயம் சாப்பிடுங்கள். உங்கள் தொழிலுக்கு உடல் வலிமையைக் காட்டிலும் மனோ வலிமை அதிகம் தேவைப்பட்டால் உணவில் இவற்றைக் குறைத்துக்கொள்வது நல்லது.

https://t.me/Digital_eLibrary

**226. காளஹஸ்திக்கு யார் போகலாம்? என்றைக்குப் போகவேண்டும்? அங்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும்? அங்கு வழிபாடு செய்ய ஏதேனும் வழிமுறைகள் உண்டா?**

ஸ்ரீகாளஹஸ்தி என்பது முக்கியமான சிவஸ்தலங்களுள் ஒன்று. யார் வேண்டுமானாலும் என்றைக்கு வேண்டுமானாலும் அங்கு சென்று இறைவனை வழிபடலாம். சிவன் ராகுவாகவும் அம்பிகை கேதுவாகவும் விளங்குகிற தலம் என்பதால், ராகு - கேதுவால் ஏற்படும் தோஷம் நிவர்த்தியடைய அங்கு சென்று சிறப்பு பூஜை செய்கின்றனர்.

ஜாதகத்தில் ராகு-கேது தோஷம் உள்ளவர்களும் எந்த தோஷமும் இல்லாதவர்களும் அங்கு சென்று வழிபடலாம். திருத்தணி, திருப்பதி போன்ற பிற தலங்களுக்குச் சென்று விட்டு வரும் வழியில் ஸ்ரீகாளஹஸ்திக்குப் போகலாம். அல்லது ஸ்ரீகாளஹஸ்திக்குச் சென்று சாமி தரிசனம் செய்து விட்டு அதன் பிறகு திருப்பதிக்குச் சென்றாலும் தவறில்லை.

ஸ்ரீ காளஹஸ்தி செல்பவர்கள் அங்கு ஓர் இரவு தங்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. உடுத்தியிருக்கும் எந்தத் துணியையும் அங்கு விட்டுவிட்டு வர வேண்டாம். நம் உள்ளூரில் இருக்கும் சிவன்

கோயிலுக்கு எப்படிச் சென்று வழிபடுகிறோமோ அதே போல ஸ்ரீ காளஹஸ்திக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் சென்று சிவபெருமானையும் அம்பிகையையும் எல்லோரும் வழிபடலாம்.

**227. என் மகளுக்கு வரன் பார்த்துக்கொண்டிருக்கிறோம். திருமணத்துக்குப் பிறகு தனிக்குடித்தனத்தோடு, சுதந்தரமாக வாழ அவள் விரும்புகிறாள். ஆனால், எங்களுக்கு வருகின்ற ஜாதகம் எல்லாமே பெரிய குடும்பத்தில் இருந்துதான் கிடைக்கிறது. பெற்றோர்களோ, உடன் பிறந்தவர்களோ இல்லாத மாப்பிள்ளை எங்களுக்குக் கிடைப்பாரா?**

அனாதை ஆசிரமத்திலிருந்து ஒருவரை உங்கள் மகளுக்குக் கல்யாணம் செய்து வையுங்கள். தவறொன்றுமில்லை.

**228. சொந்த வீடு அமைய எந்த கிரகம் வலுவாக இருக்க வேண்டும்?**

ஒரு ஜாதகத்தில் செவ்வாய் நல்ல நிலையில் இருந்தால் சொந்த வீடு அமையும். லக்னம், நான்காம் வீடு, பன்னிரண்டாம் வீடு ஆகிய ஸ்தானங்களின் அதிபதிகள் வலுவாக இருக்க வேண்டும். 1, 4, 7, 10, 12 ஆகிய இடங்களில் செவ்வாய் ஆட்சியாகவோ, உச்சமாகவோ இருந்தால் சொந்த வீடு நிச்சயம் உண்டு. 12க்குடையவன் வலுவிழந்து போனால் சொந்த வீடு இருந்தும் வாடகை வீட்டில் வசிக்கும் சூழ்நிலை உருவாகும். செவ்வாய், சந்திரன், சுக்கிரன் சேர்க்கை பெற்று குருவால் பார்க்கப்பட்டால் தாய் வழியில் பூர்விகச் சொத்து கிடைக்கும். குரு தனுசிலும், செவ்வாய் மேஷத்திலும், சூரியன் சிம்மத்திலும் அமர்ந்து இந்த மூன்று வீடுகளில் ஒன்று லக்னமாகவும் அமைந்தால் மிகப் பெரிய நிலமும் பல வீடுகளும் உண்டு. செவ்வாயுடன் கேது சேர்ந்து குருபார்வை பெற்றால் சுவீகாரம் செய்வதன் மூலம் பிறர் சொத்து கிடைக்கும்.

**229. எனக்கு திருவாதிரை நட்சத்திரம், மிதுன ராசி. நான் எந்தக் கோயிலுக்குப் போக வேண்டும்? வழிபட வேண்டிய தெய்வம் எது?**

திருவாதிரை நட்சத்திரம் வரும் நாட்களில் சிதம்பரம் சென்று நடராஜப் பெருமானை வழிபட வேண்டும். ஒவ்வொரு மாதமும் திருவாதிரை நட்சத்திர நாளில் சிதம்பரம் போக முடிந்தால், சென்று தரிசனம் செய்துவிட்டு வாருங்கள். அப்படிச் செல்ல முடியாவிட்டால் வருடத்துக்கு இரண்டு முறையாவது சென்று வாருங்கள். அனைத்து நலங்களும் வளங்களும் கிடைக்கும். சிதம்பரம் செல்ல இயலாதவர்கள் அருகில்

உள்ள ஆலயத்துக்குச் சென்று நடராஜர் சந்நிதியில் அர்ச்சனை செய்தும் வழிபடலாம்.

**230. 35 அடி உயர ஆஞ்சநேயர், 50 அடி உயர பிள்ளையார், 60 அடி உயர முருகன் என்றெல்லாம் அண்மைக் காலத்தில் பிரம்மாண்டமான சிலைகளைச் செய்து ஆலயம் அமைக்கும் வழக்கம் தென்னிந்தியாவில் அதிகரித்துள்ளது. இந்த ஆன்மிக வளர்ச்சி பற்றி தங்கள் கருத்து என்ன?**

கடவுளின் திருவுருவச் சிலை மிகப்பெரிதாக அமைந்தால் பக்தி அதிகரிக்கும், ஆன்மிகம் வளர்ந்து விடும் என்று நினைப்பது சரியல்ல. பண்டைக் காலத்தில் மன்னர்கள் கட்டிய ஆலயங்கள்தான் அளவில் பெரிதாகவும் பிரம்மாண்டமாகவும் உள்ளன. ஆனால், மூலவரின் திருமேனியைச் சிறிதாகத்தான் அமைத்தனர். பழைய காலத்துக் கோயில்களில் மூர்த்தி சிறிதாகவும் கீர்த்தி பெரிதாகவும் விளங்குவதை நாம் காண்கிறோம்.

விக்ரகத்தின் அளவுக்கும் நைவேத்யம் செய்யப்படும் பிரசாதங்களின் அளவுக்கும் ஒரு விகிதாச்சாரம் உண்டு. மிகப் பிரம்மாண்டமான விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டால் பல மூட்டை அரிசி வடித்து தினசரி நைவேத்யம் செய்ய வேண்டும். இந்தக் காரணத்தினால்தான் நமது முன்னோர்கள் ஆலயத்தைப் பெரிதாகவும் மூலவர் விக்ரகங்களைச் சிறிதாகவும் அமைத்தனர். பெரியதாக இருக்க வேண்டியது பக்திதான், சிலாரூபங்கள் அல்ல.

**231. ஒருவரின் உடலில் உள்ள சில உறுப்புகளை மற்றவர் உடலுக்கு மாற்றும் அறுவை சிகிச்சை செய்யும் ட்ரான்ஸ்ப்ளான்ட் முறை இன்று மருத்துவ உலகில் மிகப் பிரபலமாக உள்ளது. இதிகாசப் புராணங்களில் இவை பற்றி ஏதேனும் கூறப்பட்டுள்ளதா?**

2800 ஆண்டுகளுக்கு முன்பு காசியில் வாழ்ந்த சுஷ்ருதா என்னும் முனிவர்தான் உலகின் முதல் அறுவை சிகிச்சை நிபுணர். இவர் எழுதியுள்ள சுஷ்ருதா சம்ஹிதை என்னும் நூலில் 1120 வகையான நோய்கள், 300 வகை அறுவை சிகிச்சைகள், 120 சர்ஜிகல் கருவிகள், மனித உடற்கூறுகளின் அனாடமி போன்ற அனைத்துத் தகவல்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் கி.பி.750-ல் அரபி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இத்தாலிய மொழியிலும் பிற ஐரோப்பிய மொழிகளிலும் இந்நூலின் சில பகுதிகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பிறநாட்டவர் பலரும் சுஷ்ருதாவின் கண்டுபிடிப்புகளை நன்கு பயன்படுத்திக்கொண்டுள்ளனர். தற்போது ஹரித்வாரில் இந்த மருத்துவ மாமேதைக்குச் சிலை வைத்துள்ளனர்.

திருக்கருகாவூர் தலபுராணத்தில் ஒரு பெண்ணின் வயிற்றில் வளரும் கருவை வேறு ஓர் இடத்துக்கு மாற்றி வைத்து கர்பரட்சாம்பிகை IVF முறையில் கருச்சிதைவு நிகழாமல் காப்பாற்றிய புராண வரலாறு உள்ளது. கண்ணப்ப நாயனார் தமது கண்களை இறைவனுக்கு (சிவலிங்கத்துக்கு) ஐ ட்ரான்ஸ்ப்ளான்ட் செய்த வரலாறு உள்ளது. இப்படி உறுப்புதானம் மற்றும் ஆர்கன் ட்ரான்ஸ்ப்ளான்ட் நமது நாட்டில் நடைபெற்றுள்ள விவரங்களைப் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். உலகில் இன்று பிரபலமாக உள்ள பல மருத்துவ முறைகள் அனைத்தும் இந்தியாவிலிருந்து சென்றவை என்பதை ஏராளமான ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியும்.

**232. நவகிரகங்களுக்கு உரிய தெய்வங்கள் எவை?**

சூரியன்: சிவபெருமான், சந்திரன்: உமா தேவி, செவ்வாய்: முருகன், புதன்: திருமால், வியாழன்: பிரம்மா, சுக்கிரன்: இந்திரன், சனி: எமன், ராகு: காளி, கேது: சித்ரகுப்தன். இதை நவகிரக அம்சம் என்று பழைமையான நூல் ஒன்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் அதிதேவதை ப்ரத்யதி தேவதை என்பது வேறு.

**233. என் மகளுக்குத் திருமணம் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளோம். வரன் தானே வருமா அல்லது நாங்கள் தேடிக்கொண்டு செல்ல வேண்டுமா?**

மனித முயற்சியும் தெய்வத்தின் அருளும் சேர்ந்தால் மட்டுமே எதுவும் நடக்கும். தானே நடக்கும் என்று சும்மா இருப்பது தவறு. பழங்காலத்தில் மக்கள் தமது பூர்விக ஊரிலேயே வசித்து வந்தனர். எந்தத் திசையில் வரன் அமையும் என்று ஜோதிடர்கள் சொன்னது பலித்தது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் எல்லா ஊர்க்காரர்களும் உலகெங்கும் பரவலாக வசித்து வருகின்றனர். எனவே, எந்தத் திசையிலிருந்து வரன் வரும் என்று கூறுவது சாத்தியமில்லை. திருமணத்துக்கான இணையதளம், வலைத்தளம் வாயிலாகவும், சங்கங்கள் வாயிலாகவும் வரன் தேடும் பணியைத் துரிதப்படுத்துங்கள். தானே வரும் என நம்பி காலத்தை வீணாக்காதீர்கள்.

**234. செவ்வாய் தோஷம், ராகு-கேது தோஷம் என்பது போல் சுக்ர தோஷம் என்று ஏதேனும் உள்ளதா?**

லக்னத்துக்கு ஏழாம் இடத்தில் சுக்ரன் இருந்தால் சுக்ர தோஷம் ஏற்படும். இதை காரகோ பாவ நாஸத்தி என்று ஜோதிட நூல்கள்

கூறுகின்றன. இந்த தோஷம் இருந்தால் திருமணம் தாமதமாகும். எந்த லக்னம் என்பதைப் பொறுத்து இந்த தோஷத்தின் தன்மை மாறுபடும். இதற்கு பரிகாரம் சுயம்வரா பார்வதி ஹோமம். 7ல் சுக்ரன் உள்ள சில ருக்குத் திருமணமே நடக்கவில்லை. ஒருசிலர் கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்னும் நிலையில் உள்ளனர்.

**235.** நான் இசைத் துறையில் சாதிக்க விரும்புகிறேன். சங்கீத ஞானம் அதிகரிக்கவும், அதன் மூலம் புகழ் பெறவும் என்ன வழிபாடு செய்ய வேண்டும்?

கும்பகோணம் ராமசாமி கோயிலில் வீணை வாசித்துக்கொண்டே பாட்டுப் பாடும் கோலத்தில் ஆஞ்சநேயர் அருள்பாலிக்கிறார். அவரை வழிபட்டால் உங்கள் விருப்பம் நிறைவேறும்.

**236.** சாமி கும்பிடும் போதும், சமையல் செய்யும் போதும் கர்ப் பிணிப் பெண்கள் தேங்காய் உடைக்கக்கூடாது என்கிறார்களே?

ஆம். பெண்கள் கர்ப்பமாக இருக்கும்போது கடினமான வேலை களைச் செய்யக்கூடாது என்பது அறிவியல்பூர்வமான காரணமும்கூட.

**237.** பெயரை மாற்றிக்கொண்டால் தலை எழுத்து மாறுமா?

மா மரம் என்று ஒரு பலகையில் எழுதி, தென்னை மரத்தில் தொங்க விட்டால் தேங்காய்க்குப் பதில் மாங்காய் காய்க்குமா?

**238.** புருஷ காலம், ஸ்த்ரீ காலம் என்று சொல்கின்றனர். அது என்ன?

நவகிரகங்களில் ஆண் பால், பெண் பால் உண்டு. பன்னிரண்டு ராசி களுக்கும் இந்தப் பாகுபாடு உண்டு. நேரத்திலும் ஆண் நேரம், பெண் நேரம் என்று உண்டு. ஆண் நேரத்தை புருஷ காலம் என்றும் கூறுவர். ஆண் நேரத்தில் பெண் குழந்தை பிறந்தால் அதற்கு ஆண்மைத்தனம் சற்று அதிகமாக இருக்கும். ஸ்த்ரீ காலத்தில் பிறந்த ஆண் குழந்தைக்கு பெண்மைத்தனம் மிகுந்து காணப்படும்.

**239.** இரண்டு அமாவாசை வரும் மாதத்தில் திருமணம் செய்யக் கூடாதா?

ஆமாம்.

**240. வில்வம், துளசி, அருகம்புல் ஆகிய மூன்றும் மிகவும் புனிதமானவை என்று கூறுவதன் காரணம் என்ன?**

இவை மூன்றும் மருத்துவக் குணம் கொண்ட மூலிகைகள். தினமும் சிறிது வில்வ இலையை உட்கொண்டால் சர்க்கரை நோய் கட்டுப்பாட்டில் இருக்கும். நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் ஆற்றல் வில்வத்துக்கு உண்டு. சிறிதளவு துளசி இலை சாப்பிட்டால் ரத்த அழுத்தம் வெகுவாகக் குறையும். அருகம்புல்லின் சாறு ரத்தத்தைச் சுத்தம் செய்து கிருமிகளை நாசம் செய்யும். மனிதன் ஆரோக்கியமாக வாழ இவை மூன்றும் துணைபுரிகின்றன. இந்த அறிவியல் உண்மையைச் சொன்னால் பழங் காலத்தில் பலரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதால் புனிதம், தெய்விகம் என்னும் சமயச் சாயம் பூசிவிட்டனர்.

**241. ஆனி மாதத்தில் திருமணம், கிரகப்பிரவேசம் போன்ற சுப விசேஷங்கள் நடத்தலாமா?**

ஆனி மாதத்தில் வீடு மாற்றலாம். கிரகப்பிரவேசம் செய்யலாம். திருமணம், வளைகாப்பு, சீமந்தம் உட்பட அனைத்து சுப விசேஷங் களும் நடத்தலாம். கேட்டை நட்சத்திரத்தில் பிறந்த தலைச்சன் குழந்தைக்கு மட்டும் ஆனி மாதத்தில் திருமணம் செய்யக்கூடாது. மற்ற அனைவருக்கும் ஆனி மாதத்தில் திருமணம் செய்யலாம்.

**242. ஒரு செயலைத் தொடங்கும்போது முதலில் விநாயகர் வழிபாடு செய்கிறோம். அந்த வழிபாடு சிறக்க என்ன செய்ய வேண்டும்?**

சரஸ்வதி தேவியை மனத்தில் தியானம் செய்துகொண்டு விநாயகர் வழிபாடு தொடங்க வேண்டும். மனத்தில் உறுதி, சிந்தையில் தெளிவு, புத்திகூர்மை ஆகியவற்றை அளிப்பவள் சரஸ்வதி தேவி. எந்தச் செயலைத் தொடங்கினாலும் சரஸ்வதி வழிபாடு செய்வது அவசியம். இதைத்தான் மகாகவி பாரதியார் செய்வம் என்றொரு செய்கை எடுப் போர் செம்மை நாடிப் பணிந்திடும் தெய்வம் என்கிறார். சரஸ்வதி வெறும் கல்விக்கு மட்டும் அதிபதி அல்ல. மனம், புத்தி, சிந்தை, மூளை ஆகியவை நன்றாகச் செயல்பட சரஸ்வதியின் அருள் வேண்டும். எந்தச் செயலைச் செய்தாலும் முதலில் சரஸ்வதியையும் விநாயகரையும் வழிபட வேண் டும்.

**243. ஆயில்யம், மூலம் போன்ற சில நட்சத்திரம் உள்ள பெண் மருமகளாக வந்தால் மாமனார் உயிருக்கே ஆபத்து என்று சொல்கின்றனர்.**

**இதில் எந்த அளவு உண்மை உள்ளது?**

இதில் சிறிதும் உண்மை கிடையாது. இது ஒரு மூடநம்பிக்கை. ஜோதிட சாஸ்திரத்தில் அப்படி எதுவும் சொல்லப்படவில்லை. இது ஒரு லேடீஸ் சென்டிமென்ட். எந்த நட்சத்திரத்தில் மருமகள் வந்தால் மாமியார் - மாமனார் நூறு வயது வரை வாழ உத்திரவாதம் உண்டு என்பதை யாரிடமாவது கேட்டு எனக்குச் சொல்லுங்களேன்!

**244. மூலம் நட்சத்திரத்தில் பிறந்த எனது சகோதரிக்குத் திருமணம் மிகவும் தாமதமாகிறது. விரைவில் நடைபெற என்ன பரிகாரம்?**

திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி என்னும் ஊர் உள்ளது. வானமாமலை, திருவரமங்கை என்னும் பெயர்களும் இத்தலத்துக்கு உண்டு. 108 வைணவ திவ்யதேசங்களில் ஒன்றான நாங்குநேரியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ தோத்தாத்ரி பெருமாளை தரிசனம் செய்து விட்டு வாருங்கள். மூல நட்சத்திர மரம் மாமரம். நாங்குநேரியிலும் தலவிருட்சம். இத்தலத்தில் வானமாமலைப் பெருமாளுக்கு தினமும் நல்லெண்ணெய் அபிஷேகம் நடைபெறுகிறது. எண்ணெய்க் கிணறு ஒன்றும் உள்ளது. ஐப்பசி மாதம் வரும் மூலம் நட்சத்திர நாளில் இத்தலத்தில் விசேஷ பூஜைகள் நடைபெறும். மூலம் நட்சத்திரம் வரும் நாளில் நாங்குநேரிக்குச் சென்று பெருமாளை சேவித்து நல்லெண்ணெய் பிரசாதம் பெற்றுக் கொண்டு வரவும். மூலம் நட்சத்திரம் உள்ள ஆண்களுக்கும் பெண்களுக் கும் விரைவில் திருமணம் நடக்க இது ஒரு நல்ல பரிகாரம்.

**245. என் கணவருக்கு 43 வயதாகிறது. நல்ல ஆரோக்கியத்துடன் உள் ளார். யாரோ ஒரு ஜோதிடர் நீ சீக்கிரம் இறந்து விடுவாய் என்று என் கணவரிடம் கூறிவிட்டாராம். அந்த மரண பயத்தில் இவர் மனநோயாளி ஆகிவிட்டார். மரண பயம் நீங்கி அவர் மகிழ்ச்சியாக வாழ என்ன செய்ய வேண்டும்?**

அவர் ஜாதகப்படி ஆயுள் தீர்க்கமாக உள்ளது. யாரோ ஒரு கத்து குட்டி ஜோதிடரிடம் உங்கள் கணவர் ஜாதகத்தைக் காண்பித்தது முதல் தவறு. அவர் சொன்னதை அப்படியே நம்பிப் பயந்து போனது அதை விடப் பெரிய தவறு. அவரை நல்ல மனவியல் நிபுணரிடம் அழைத்துச் சென்று கவுன்சிலிங் செய்யுங்கள். அபிராமி அந்தாதியில் வரும் மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணி புனைந்த அணியே, அணியும் அணிக்கழகே, அணுகாதவர்க்குப் பிணியே, பிணிக்கு மருந்தே அமரர் பெறு விருந்தே பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்த பின்னே என்னும் பாடலைப் படித்து வந்தால் மரண பயம் நீங்கும்.

**246. நான் தினசரி கணபதி, முருகன், சிவன், அம்பாள், நாராயணன் ஆகிய தெய்வங்களின் தமிழ் சுலோகங்களைப் படித்து வழிபாடு செய்து வருகிறேன். அண்மையில் ஒரு ஜோதிடரிடம் சென்றேன். அவர் நாராயண மந்திரம் சொல்ல வேண்டாம் என்றார். இதனால் மனவேதனையும் குழப்பமும் அடைந்துள்ளேன். தயவுசெய்து வழிகாட்டவும்.**

அந்த ஜோதிடர் கூறிய கருத்து முற்றிலும் தவறானது. ஹிந்து மதத்தை ஆறு பிரிவுகளாகப் பிரித்து வழிபாட்டு முறைகளை வகுத்துக்கொடுத்தவர் ஆதிசங்கரர். சூரியனை பிரதான தெய்வமாகக்கொண்டு வழிபடும் பிரிவுக்கு சௌரம் என்று பெயர். விநாயகரே பரப்ரும்மம் அவரே முழு முதற்கடவுள் என்கிறது காணாபத்யம். முருகப் பெருமானை முன்னிலைப்படுத்தி வழிபடுவது கௌமாரம், சிவனை வழிபடுவது சைவம். மகாவிஷ்ணுவை மட்டுமே வழிபடுவது வைஷ்ணவம், யாதுமாகி நின்ற அம்பிகையை வழிபடுவது சாக்தம். இந்த ஆறு பிரிவுகளும் சேர்ந்ததுதான் ஹிந்து மதம். இதை ஷண்மதம் (அறுவகைச் சமயம்) என்று கூறுவர்.

நீங்கள் இந்த அறுவகைச் சமயக் கோட்பாட்டைப் பின்பற்றுங்கள். நாராயணனை வணங்காதே என்று கூறிய அந்தக் குறுகிய எண்ணம் கொண்ட நபரை புறக்கணித்து விடுங்கள். ஹிந்து மதம் வளர வேண்டுமானால் இத்தகைய பிரிவினை வாதிகளை நாம் சட்டை செய்யாமல் ஓரம் கட்டிவிட வேண்டும்.

**247. இறைவனிடம் பிரார்த்தனை செய்துகொண்டு ஒரு செயல் நடந்து முடிந்து விட்டால், வேண்டுதலை நிறைவேற்ற எத்தனை நாட்கள் எடுத்துக் கொள்ளலாம்?**

தெய்வக் கடன் நூற்றாண்டு என்று கூறுவார்கள். குறிப்பிட்ட காலத்துக்குள் செய்ய வேண்டும் என்று வரையறை எதுவும் கிடையாது. எனினும், விரைவில் செய்து விடுவது நல்லது.

**248. இலுப்பை எண்ணெயில் விளக்கேற்றலாமா?**

கடலை எண்ணெய் தவிர மற்ற எல்லா எண்ணெய்களிலும் விளக்கு ஏற்றலாம். சிவன் கோயிலில் இலுப்பை எண்ணெய் தீபம் ஏற்றினால் செல்வம் வளரும். ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இலுப்பை எண்ணெயில் தீபம் ஏற்றினால் மிகவும் நல்லது. ரேவதி நட்சத்திரத்துக்கு உரிய மரம் இலுப்பை.

**249.** நரிக்கொம்பு, புலி நகம், யானைத் தந்தம் போன்றவற்றை டாலராகச் செய்து அணிந்துகொண்டால் என்ன கிடைக்கும்?

ஒரு வருடம் கடுங்காவல் சிறைத் தண்டனை கிடைக்கும்.

**250.** பஞ்சகவ்யம் என்றால் என்ன? எதை எப்படித் தயாரிக்க வேண்டும்? அதன் பயன்பாடு என்ன?

பசு மாட்டிலிருந்து கிடைக்கும் ஐந்து பொருட்களை ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் கலந்து தயாரிக்கப்படும் கலவைக்கு பஞ்சகவ்யம் என்று பெயர். பசும் பால் 7 பங்கு, பசுந்தயிர் 3 பங்கு, பசு நெய் 1 பங்கு, கோஜலம் (பசுவின் சிறுநீர்) 1 பங்கு, பசுஞ்சாணத்தைக் கரைத்து வடி கட்டிய நீர் (கோமய ரஸம்) 1/2 பங்கு என்னும் ஐந்தையும் கலந்து தர்பைப் புல் ஊறிய நீரில் கலந்து உடனடியாக உட்கொள்ள வேண்டும். வேதம் கற்றவர்கள் கோ சூக்தம் என்னும் மந்திரத்தை உச்சரித்து பஞ்ச கவ்யம் தயாரிப்பார்கள். இதை அருந்தினால் மனித சரீரம் தூய்மை அடைகிறது என்று நமது சாஸ்திரம் கூறுகிறது. பழங்காலத்தில் ஆலயங்களில் பூஜை செய்பவர்கள் தினசரி பஞ்சகவ்யம் அருந்திவிட்டுத்தான் கர்பகிரகத்துக்குள் பிரவேசிக்க வேண்டும் என்னும் விதி பின்பற்றப்பட்டு வந்தது.

பஞ்சகவ்யம் சாப்பிடுவோர்க்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். பல நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் பஞ்சகவ்யத்துக்கு உண்டு. அறிவியல் ரீதியாக இது எந்த அளவுக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது என்று தெரியவில்லை. ஆனால் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள ஓலைச்சுவடி பிரிவில் பஞ்சகவ்யம் பற்றிய அரிய தகவல்கள் பல உள்ளன. கோமூத்திரத்துக்கு வருணனும் கோமயத்துக்கு அக்னியும் பாலுக்கு சந்திரனும் தயிருக்கு வாயுவும் நெய்க்கு விஷ்ணுவும் அதிபதிகள் என்று ஸ்ம்ருதிகள் கூறுகின்றன. இதைப் பஞ்சகௌவ்யம் என்றும் கூறுவர். ஆபிசாரப்ரயோகம், காத்து, கருப்பு, துர்தேவதை தொல்லை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பஞ்சகவ்யம் கொடுத்தால் அவை நீங்கிவிடும்.

அபிதான சிந்தாமணி என்னும் நூலில் ஐந்து வெவ்வேறு நிறத்தில் உள்ள ஐந்து பசுக்களிடம் இருந்து கிடைத்த ஐந்து பொருட்களைக் கொண்டு பஞ்சகவ்யம் தயாரிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**251.** நாகதோஷம் நீங்க என்ன பரிகாரம்?

கர்னாடக மாநிலம் மங்களூருக்கு அருகில் சுப்ரமண்யா என்னும் ஊர் உள்ளது. அங்கு அருள்பாலிக்கும் முருகனை வழிபட்டு, நாகப்ரதிஷ்டை செய்யுங்கள். குமாதாரா என்னும் நதி, அத்தலத்தை ஒரு பூ மாலை போலச் சுற்றி வருகிறது. அங்கு உடனடியாகச் செல்ல இயலாதவர்கள் காஞ்சிபுரம் குமரக்கோட்டம் முருகனை வழிபட்டு அர்ச்சனை செய்து வரலாம். நாகம் குடை பிடிக்கும் கோலத்தில் முருகன் காட்சியளிக்கும் தலங்கள் இவை இரண்டுமே.

**252. எனக்கு வயது 80 ஆகிறது. நான் தினமும் வீட்டில் பூஜை செய்து வருகிறேன். மடியாக நைவேத்யம் தயாரித்துக் கொடுக்க யாரும் ஒத்துழைக்கவில்லை. என்ன செய்வது?**

முந்திரிப் பருப்பு, கற்கண்டு, உலர்ந்த திராட்சை, வாழைப் பழம் போன்றவற்றை சுவாமிக்கு நைவேத்யம் செய்யுங்கள். குளித்து மடியாக நைவேத்யம் தயாரிக்கும்படி உங்கள் மருமகளைக் கட்டாயப்படுத்தினால் முதியோர் இல்லத்துக்கு அனுப்பிவிடுவார்கள். காலத்துக்கேற்ப அனுசரித்துச் செல்லுங்கள். மடி ஆசாரத்தைவிட மகனும் மருமகளும்தான் முக்கியம்.

**253. ஒருவர் ஒரு வீட்டில் வசிக்கும்போது அவரது ஜாதகப் பலன் மேலோங்கி நிற்குமா? அல்லது வீட்டின் வாஸ்து ஜாதகப் பலனையும் மீறி பாதிக்குமா?**

ஜாதகப் பலன்தான் மேலோங்கி பலன் அளிக்கும். ஜாதகப்படி நல்ல தசைகள் நடைபெற்றால் வாஸ்து நன்றாக உள்ள வீடு அமையும். நேரம் நன்றாக உள்ளபோது, வசிக்கும் வீட்டின் வாஸ்து சரியாக அமையாவிட்டால் நற்பலன் சற்றுக் குறைவாக வேண்டுமானால் நடக்க வாய்ப்புண்டு. வாஸ்துவால் ஒருவரின் தலையெழுத்தே முற்றிலுமாக மாறிவிடும் என்று கூறுவது ஏற்புடையதல்ல. ஜாதகப் பலன் 75 சதவிகிதம் என்றும், வாஸ்து பலன் 25 சதவிகிதம் என்றும் கூறலாம். தீமைகள் செய்யும் தசை நடைபெறும்போது என்னதான் வாஸ்துப்படி வீடு இருந்தாலும் தீமைகள் நடந்தே தீரும்.

**254. பூஜையறையில் தெய்வப் படங்களை வடக்குப் பார்த்து வைத்தால் சாபம் உண்டாகும் என்று கூறுகிறார்களே உண்மையா?**

இது தவறான கருத்து. வீட்டில் பூஜையறையில் தெய்வத் திருஉருவப் படங்களை எந்தத் திசை பார்த்து வேண்டுமானாலும் வைக்கலாம். ஆனால் விழுந்து வணங்கும்போது தெற்கு நோக்கி நமஸ்காரம்

செய்யக்கூடாது. வடக்கு நோக்கிப் படம் இருந்தால் நீங்கள் தெற்கு முகமாக நமஸ்காரம் செய்வீர்கள் என்பதால் யாரோ இப்படிச் சொல்லியுள்ளனர். படம் எந்தத் திசையைப் பார்த்து வேண்டுமானாலும் வைக்கலாம். ஆனால் சாஷ்டாங்க நமஸ்காரம் தெற்கு நோக்கிச் செய்யக் கூடாது.

**255.** பழைய வீட்டை இடித்து விட்டு அதே இடத்தில் புதிதாக ஒரு வீடு கட்ட உள்ளோம். பழைய கிணற்றைத் தூர்த்து விட்டு அருகில் புதிய கிணறு தோண்டலாமா? கிணற்றை மூடக்கூடாது எனச் சிலர் கூறுகின்றனர்.

பழைய கிணற்றை மூடுவதற்கு முன்பும், புதிய கிணறு தோண்டிய பிறகும் வருண பூஜை செய்ய வேண்டும். உங்கள் திட்டப்படி வீடு கட்டுங்கள்.

**256.** என் பேரனுக்கு எப்பொழுது பேச வரும்?

குழந்தையின் தாயை வாக்வாதினி மந்திரம் ஜபிக்கச் சொல்லுங்கள். ஓம் ஐம் வத வத வாக்வாதின்யை ஸ்வாஹா. இதைக் குறைந்தபட்சம் 108 முறை தினமும் ஜபிக்க வேண்டும். முடிந்தால் 1008 முறை கூட ஜபிக்கலாம். குழந்தை நிச்சயம் பேசும்.

**257.** பூர்வ ஜென்மத்தில் நாம் யாராக இருந்தோம் என்பதை அறிய முடியுமா?

அதை அறிந்துகொள்ள எதுவும் வழியில்லை. நமக்கு நடக்கும் நன்மை தீமைகளைக் கொண்டு பூர்வ ஜென்மத்தில் நாம் செய்த பாவ புண்ணியங்களை ஓரளவு யூகிக்க முடியும். உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்லலாம். ஒன்றாக இணைந்து சந்தோஷமாக வாழ வேண்டிய இளம் தம்பதியை ஒன்று சேர விடாமல் பிரித்து வைப்பது மிகப்பெரிய பாவம். அந்தப் பாவத்தைச் செய்தால் மறு பிறவியில் திருமணமே நடக்காது. அல்லது திருமண வாழ்க்கை முறிவடையும்.

**258.** ஆடி மாதத்தில் என்னவெல்லாம் செய்யலாம்? எவை செய்யக் கூடாது?

ஆடி மாதத்தில் திருமணம் செய்யக்கூடாது. ஆனால், திருமண முயற்சிகளைத் தொடரலாம். ஜாதகம் கொடுப்பது, வாங்குவது, பொருத்தம் பார்ப்பது, பெண் பார்ப்பது, பேச்சுவார்த்தை நடத்துவது போன்ற முன் ஏற்பாடுகள் அனைத்தும் செய்யலாம். ஆடியில் வீடு மாற்றம் செய்யக்கூடாது. கிரகப்பிரவேசம் செய்யக்கூடாது. ஆனால்

வீடு பார்ப்பது, முன்பணம் கொடுப்பது, பத்திரங்களைச் சரிபார்ப்பது, ஒப்பந்தம் செய்துகொள்வது போன்ற அனைத்தும் ஆடியில் செய்யலாம். ஆடி மாதத்தில் ஆலய தரிசனம் செய்வது, புனித தீர்த்தங்களில் நீராடுவது, பரிகாரங்கள் செய்வது, நேர்த்திக்கடனை நிறைவேற்றுவது போன்றவை செய்வது நல்லது. அம்மன் வழிபாடு அதிகமாகச் செய்ய வேண்டும்.

**259. ராகு-கேது தோஷத்துக்குச் சொல்ல வேண்டிய சுலோகம் எது?**

சுவாமி தேசிகன் அருளிச் செய்த கருட தண்டகம், கருட பஞ்சாசத் படித்து வந்தால் ராகு-கேது தோஷம் முற்றிலுமாக விலகும்.

**260. விரத நாட்களில் மோர் அருந்தக்கூடாது என்கிறார்களே! இது சரியா?**

ஆமாம்.

**261. கோயிலில் இறைவனின் திருமேனியில் அலங்கரிக்கப்பட்ட மலர் மாலையை நமது கழுத்தில் சில அர்ச்சகர்கள் போட்டு விடுகின்றனர். இது சரியா? அந்த மாலையை நாம் என்ன செய்ய வேண்டும்?**

அது இறைவனின் அருட்பிரசாதம். அதை நிர்மால்ய புஷ்பம் என்பார்கள். இறைவனுக்கு அணிவித்த மாலையை பக்தர்களுக்கு கழுத்தில் போடுவது ஆலயத்தில் செய்யப்படும் ஒரு மரியாதை. அதில் எந்தத் தவறும் கிடையாது. நாம் பயன்படுத்திய மலர்களைத்தான் இறைவனுக்கு அணிவிக்கக் கூடாது. இறைவனுக்கு அணிவித்த மலர்களை நாம் சூடிக் கொள்ளலாம். ஆலயத்தில் நமக்கு அணிவிக்கப்படும் மாலைகளை வீட்டுக்கு எடுத்து வரலாம்.

**262. ஏழரைச் சனி, அஷ்டமச்சனி போன்றவை நடைபெறும்போது திருமணம் செய்யலாமா?**

ஏழரைச் சனி நடைபெறும் போதுதான் பெரும்பாலானவர்களுக்குத் திருமணம் நடக்கும். நிறைய பேருக்கு வாழ்க்கை செட்டில் ஆவதே ஏழரைச் சனிக்காலத்தில்தான். ஏழரைச் சனியில் திருமணம் செய்யலாம். அஷ்டமச் சனிக் காலத்தில் திருமணம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். மீன ராசிக்கு 2014 டிசம்பர் வரை அஷ்டமச்சனி உள்ளது. ஜனன கால ஜாதகத்தில் நல்ல தசாபுக்தி நடைபெற்றால் அஷ்டமச் சனி

யையும் மீறி சிலருக்குத் திருமணம் நடக்கும். எனினும் அது இரண்டாம் பட்சம்தான்.

**263.** **நவகிரகங்களுக்கு உரிய மலர்கள் எவை?**

சூரியன் - செந்தாமரை, சந்திரன் - வெள்ளை அலரி, செவ்வாய் - செண்பகம், புதன்-வெள்காந்தன், குரு-முல்லை, சுக்ரன்-வெண்தாமரை, சனி - கருங்குவளை, ராகு: மந்தார புஷ்பம், கேது: சிகப்பு அல்லி. இவற்றின் ரம்யம் மனதுக்கு நம்பிக்கை தரும்.

**264.** **எனது தந்தைக்கு வயது 88. தாயாருக்கு 80 வயதாகிறது. காசி - கயா சென்று பித்ருக்களுக்கு சிரார்த்தம் செய்ய விரும்புகின்றனர். ஆனால் அவர்களின் ஆரோக்கியம் அதற்கு ஒத்துழைக்கவில்லை. கயா சிரார்த்தம் செய்வதற்கு பதில் வேறு என்ன செய்யலாம்?**

திருவெண்காடு சென்று அத்தலத்தில் சிரார்த்தம் செய்யலாம். தென்னிந்தியாவின் கயா என்னும் பொருள்பட அதை தட்ஷிண கயா என்பார்கள். முன்னோர்களின் ஆத்மா சாந்தி அடையவும் பித்ருதோஷம் நீங்கவும் திருவெண்காட்டில் எந்த நாளில் வேண்டுமானாலும் சிரார்த்தம் செய்யலாம். பிரம்ம வித்யா அம்பாள் சன்னிதிக்கு எதிரில் அட்ஷய வடம் என்னும் மரமும் ருத்ர பாதமும் உள்ளது. கயா செல்ல இயலாதவர்கள் திருவெண்காட்டில் பார்வண ஹோம விதானத்துடன் சிரார்த்தம் செய்து 96 பிண்டம் போடும் வழக்கம் உண்டு. உங்கள் பெற்றோர்களைத் திருவெண்காடு அழைத்துச் செல்லுங்கள். முன் கூட்டியே சென்று சிரார்த்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டு அதன்பிறகு பெற்றோர்களை அழைத்துச் செல்லவும்.

**265.** **கர்ப்பிணிப் பெண்கள் படிக்க வேண்டிய சுலோகங்கள், செய்ய வேண்டிய சிறப்பு வழிபாடுகள் என்ன?**

ஸ்ரீகிருஷ்ணாஷ்டகம் தினமும் நிறைய முறை படிக்க வேண்டும். ஸ்ரீமத் பாகவதம், நாராயணீயம் கேட்க வேண்டும். வீணை இசை நிகழ்ச்சிகள் இயன்ற அளவு கேட்க வேண்டும். நகைச்சுவை உணர்வைத் தூண்டக்கூடிய கதைகளைப் படிப்பது, நாடகம், திரைப்படம் பார்ப்பது மிகவும் அவசியம். கர்ப்பிணிப் பெண்கள் வாய்விட்டுச் சிரித்தால் குழந்தைக்கு நல்லது. பயம், சோகம் போன்ற உணர்வுகள் மனத்தில் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நிறைய பேருடன் தாய் மொழியில் கலகலப்பாகப் பேசிப் பழக வேண்டும்.

**266. வழிபாடு, பிரார்த்தனை, பரிகாரம் இவை மூன்றுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

மனிதனாய்ப் பிறந்த அனைவரும் அனுதினமும் இறைவனை வணங்க வேண்டும். இதைத்தான் வழிபாடு என்கிறோம். நாம் தினசரி உணவு உட்கொள்வது போன்ற ஒரு கடமை வழிபாடு. நமது குறிப்பிட்ட சில விருப்பங்கள் நிறைவேற செய்யப்படும் சிறப்பு வழிபாட்டுக்குப் பெயர் பிரார்த்தனை. உணவு உட்கொள்வது மட்டுமின்றி கூடுதல் சக்திக்காக நாம் அருந்தும் டானிக் போன்றது பிரார்த்தனை. உடலில் நோய் ஏதேனும் ஏற்பட்டால் அதைப் போக்கிக்கொள்ள நாம் சாப்பிடும் மருந்து போன்றது பரிகாரம். ஒவ்வொரு வியாதிக்கும் ஒரு மருந்து உள்ளது போல் ஒவ்வொரு பிரச்னைக்கும் சில சிறப்பு வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் பரிந்துரைக்கப்படுகின்றன. அவைதான் பரிகார பூஜை. இவை அனைத்துமே முழு பக்தியுடன் இறைவனை வேண்டிக் கொள்வதுதான். தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.

**267. விபூதி அணிந்துகொள்ளும் போது சொல்ல வேண்டிய மந்திரம் எது?**

யஜுர் வேதத்தின் ஓர் அங்கமான ஸ்ரீருத்ரத்தில் வரும் கீழ்க்கண்ட வரிகளைச் சொல்லிய படி திருநீறு அணிய வேண்டும். த்ரயம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டிவர்த் தனம் உர்வாருகமி வபந்தனாத் ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத். திருநீற்றுப் பதிகம் ஓதியபடியும் அணிய லாம்.

**268. இரும்பு வளையங்களைச் சில இளைஞர்கள் கைகளில் அணிகின் றனர். இது சரியா?**

நமது உடலில் அணியத்தக்க உலோகங்கள் தங்கம், வெள்ளி, தாமிரம் ஆகிய மூன்று மட்டுமே.

**269. ஏதோ ஒரு கோயிலில் சிவலிங்கத்துக்கு வெந்நீர் அபிஷேகம் செய்யப்படுவதாகக் கேள்வியுற்றேன். அது பற்றிய தகவல் தெரிவியுங் களேன்?**

சென்னை அம்பத்தூருக்கும் ஆவடிக்கும் இடையே உள்ள திருமுல்லைவாயல் என்னும் தலத்தில் ஒவ்வொரு வருடமும் சித்திரை மாத சதயம் நட்சத்திர நாளில் மூலவர் மாசிலாமணீஸ்வரருக்கு வெந்நீர்

அபிஷேகம் நடத்தப்படுகிறது. இந்த ஈஸ்வரன் தீண்டாத் திருமேனி. அவரை யாரும் தொட்டு பூஜை செய்ய மாட்டார்கள். வருடத்தில் ஒரு நாள் வெந்நீர் அபிஷேகம் செய்து சந்தனக் காப்பிட்டு மூடிவிடுவார்கள். லிங்கத் திருமேனி மீது எப்பொழுதும் வெள்ளிக் கவசம் இடப்பட்டிருக்கும். இத்தலத்து அம்பிகை - கொடியிடை நாயகி என்னும் லதாமத்யாம் பாள். வெள்ளிக்கிழமையும் பௌர்ணமியும் சேர்ந்து வரும் நாட்களில் பெருந்திரளான பக்தர்கள் இங்கு வருகை புரிவார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகம் பாடிய திருமறைத் தலங்களுள் இதுவும் ஒன்று.

**270. இந்த இந்த தெய்வத்தின் சன்னிதியில் இத்தனை பிரதட்சிணம் செய்ய வேண்டும் என்று ஏதேனும் கணக்கு உள்ளதா?**

அப்படி எதுவும் சட்டதிட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. பொது வாக எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் மூன்று முறை வலம் வருவது வழக்கம். விநாயகர் சன்னிதியில் 21 முறை வலம்வருவது வழக்கம். சிவன் சன்னிதியில் 11 முறை பிரதட்சிணம் செய்வது வழக்கம். ஓம் நமோ நாராயணா என்னும் எட்டெழுத்து மந்திரத்தை உச்சரித்தபடி பெருமாளை எட்டு முறை வலம் வந்தால் அஷ்டலக்ஷ்மி அருள் கிடைக்கும். ஸ்ரீ ராகவேந்திர சுவாமி ம்ருத்திகா பிருந்தாவனத்தில் 12 முறை வலம் வருவது மத்வ சம்பிரதாயம். ஆஞ்சநேயரைத் தினமும் 108 முறை வலம் வந்தால் தடைகள் விலகும். நவகிரகங்களை 9 முறை வலம் வரலாம். இதில் எதுவும் கட்டாயம் இல்லை.

**271. கரிநாள் அன்று திருமணம் செய்யலாமா? சுப காரியங்கள் நடத்த லாமா? பயணங்கள் மேற்கொள்ளலாமா?**

ஒரு வருடத்தில் கரிநாட்கள் 35. அந்த நாட்களில் திருமணம் நடத்தக் கூடாது; நடந்தால் குழந்தை பிறக்காது; ஆரோக்கியம் பாதிக்கப்படும். சுபகாரியங்களும் செய்யக்கூடாது; பயணங்கள் மேற்கொள்ளக்கூடாது. கரிநாள் விவரம் : சித்திரை - 6, 15, வைகாசி - 7,16,17, ஆனி- 1, 6, ஆடி - 2, 10, 20, ஆவணி - 2, 9, 28, புரட்டாசி - 16, 29, ஐப்பசி - 6, 20, கார்த்திகை - 1, 10, 17 மற்றும் முதல் திங்கட்கிழமை, மார்கழி - 6, 9, 11, தை - 1, 2, 3, 11, 17, மாசி - 15, 16, 17, பங்குனி - 6, 15, 19.

**272. என் வயதான தந்தை என்னுடன் வசிக்கிறார். நானும் மனைவியும் காசிக்குப் போகலாமா?**

காசிக்கு யார் வேண்டுமானாலும் போகலாம். தந்தை உள்ளவர்களும் கங்கையில் நீராடி அங்கு உள்ள கோயில்களைத் தரிசனம் செய்துவிட்டு வரலாம்.

**273.** **என் மகளுக்கு அஸ்வினி, மருமகனுக்கு பரணி. அவர்கள் புதிய வீட்டுக்கு சித்திரை மாதத்தில் கிரகப்பிரவேசம் செய்யலாமா? சித்திரையில் குடிபோகக் கூடாது என்கிறார்களே?**

சித்திரை மாதத்தில் கிரகப்பிரவேசம் செய்யலாம். அனைத்துவித சுப விசேஷங்களும் சித்திரையில் செய்யலாம். ஆடி, புரட்டாசி, மார்கழி, பங்குனி ஆகிய நான்கு மாதங்கள் தவிர மற்ற எட்டு மாதங்களும் கிரகப் பிரவேசம் செய்யலாம். சித்திரையில் கிரகப்பிரவேசம் செய்தால் சீரும் சிறப்புமாக வாழ்வார்கள்.

**274.** **விநாயக சதுர்த்தி நாளில் வீட்டிலும் கோயிலிலும் சில இலைகளைக் கொண்டு பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்வார்களே ஏன்? விவரம் அளிக்கவும்.**

விநாயக சதுர்த்தியன்று 21 இலைகளும் 21 மலர்களும் விநாயகரின் பூஜைக்குப் பயன்படுத்தப்படும். அர்ச்சனைக்கு உரிய 21 இலைகள்: மாசிப்பச்சை, கண்டங்கத்திரி, வில்வம், அருகம்புல், ஊமத்தை, இலந்தை, நாயுருவி, துளசி, மா, அரளி, விஷ்ணுக்ரந்தி, நெல்லி, மருக்கொழுந்து, நொச்சி, ஜாதி, வெள்ளெருக்கு, வன்னி, கரிசலாங்கண்ணி, அகத்திக்கீரை, மருதம், மாதுளை ஆகிய இலைகளால் கணபதிக்கு அர்ச்சனை செய்ய வேண்டும். இதில் ஏதேனும் ஓர் இலை கிடைக்காவிட்டால் அதற்கு பதில் அரச மரத்து இலையைப் பயன்படுத்தலாம்.

21 புஷ்பங்கள்: புன்னை, எருக்கு, மாதுளை, மந்தாரம், மகிழம், வெற்றிவேர், பாதிரி, தும்பை, ஊமத்தை, சண்பகம், மாம்பூ, தாழம்பூ, முல்லை, கொன்றை, செங்கழுநீர், செவ்வந்தி, அரளி, ஜாதிமல்லி, பவழ மல்லி, தாமரை, வெண் சம்பங்கி ஆகிய 21 மலர்களால் பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்ய வேண்டும். இவற்றில் ஏதேனும் கிடைக்காவிட்டால் அல்லி, ரோஜா ஆகிய பூக்களைப் பயன்படுத்தலாம். வெற்றி வேர், அருகம்புல் ஆகிய இரண்டும் அதிக அளவில் பூஜையில் சேர்க்கவும்.

**275.** **நவகிரகங்களுக்கு உரிய நவதானியங்களைத் தானமாகக் கொடுத்து பரிகாரம் செய்யலாமா?**

செய்யலாம். அதைவிட முக்கியம் அவரவர்க்கு என்ன தசை

நடைபெறுகிறதோ அந்தக் கிரகத்துக்குரிய தானியத்தை உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். சனி தசை நடைபெறும்போது உடல் மிகவும் இளைத்து விடும். அப்பொழுது சனிக்குரிய தானியமான எள்ளை உணவில் சற்று அதிகமாக சேர்த்துக்கொள்ள வேண்டும். கேது தசை நடைபெறும்போது உடல் மிகவும் பருமனாகி விடும். கேதுவின் தானியமான கொள்ளு சாப்பிட்டால் உடல் பருமன் குறைந்து விடும். கொள்ளு அடை, கொள்ளு வடை, கொள்ளுக்கஞ்சி போன்றவை செய்து நவகிரகத்தில் உள்ள கேதுவுக்கு நைவேத்யம் செய்து சனிக்கிழமைகளில் சாப்பிடலாம். இளைத்தவனுக்கு- எள்ளு; கொழுத்தவனுக்கு- கொள்ளு என்று பழமொழி உண்டு. நவதானிய அடை அனைவரும் சாப்பிடலாம்.

**276. ஒவ்வொரு பிரதோஷ தினத்தன்றும் கோயிலில் நடைபெறும் அபிஷேகத்துக்கு பசும்பால் அளித்து வருகிறேன். என்னென்ன பொருட் களால் அபிஷேகம் செய்தால் என்ன பலன் கிடைக்கும் என்று தெரிவிக் கவும்?**

பசும்பால் அபிஷேகம் செய்தால் நோய்கள் தீரும், நீண்ட ஆயுள் கிடைக்கும். பசுந்தயிர் அபிஷேகம் செய்தால் குழந்தை பாக்கியம் கிடைக் கும். தேன் அபிஷேகம் செய்தால் இனிய குரல் வளமும் இசை ஞானமும் கிடைக்கும். இளநீர் அபிஷேகம் செய்வோர்க்கு அரசாங்கப் பதவிகள் கிடைக்கும். சர்க்கரை அபிஷேகம் செய்தால் எதிர்ப்புகள் அகலும். சந்தன அபிஷேகம் செல்வச் செழிப்பை ஏற்படுத்தும். பன்னீர் அபிஷேகம் புகழ் கொடுக்கும், பச்சைக் கற்பூரம் மனஅமைதி அளிக்கும். மனோபலம் அதிகரிக்கும். குங்குமப்பூ தெய்விகத் தன்மை தரும். கஸ்தூரி அபிஷேகம் வெற்றி அளிக்கும். நல்லெண்ணெய் அபிஷேகம் சுகமான வாழ்வளிக் கும். விபூதி அபிஷேகம் ஞானம், கல்வி அளிக்கும்.

அரிசி மாவுப் பொடி அபிஷேகம் செய்தால் கடன் தீரும். நெல்லிப் பொடி கவலை தீரும், பழச்சாறு திருமணத் தடை விலகும். பஞ்சாமிர்த அபிஷேகம் வம்ச விருத்தி அளிக்கும். கரும்புச் சாறு அபிஷேகம் செய்தால் மிக உயர்ந்த பதவிகள் கிடைக்கும். புஷ்பாபிஷேகம் செய் தால் தெய்வ தரிசனம் கிட்டும், கலச தீர்த்தத்தை மகன்யாச ஏகாதச ருத்ர ஜபம் செய்து அபிஷேகம் செய்தால் நவகிரக தோஷங்கள் அனைத்தும் விலகும். வலம்புரிச் சங்கில் கங்கை நீரை நிரப்பி ஸ்ரீருத்ரம் ஜபித்து அபி ஷேகம் செய்தால் ஏழு பிறவிகளில் செய்த பாவங்கள் நீங்கி அனைத்து நன்மைகளும் நடைபெறும்.

**277. என் கணவருக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்தது. என்**

தாலியை, திருப்பதி உண்டியலில் போடுவதாக வேண்டிக்கொண்டேன். என் வீட்டில் உள்ள பெரியவர்கள் தாலியைக் கழற்றக் கூடாது என்கின்றனர். நான் என்ன செய்வது?

உங்கள் வீட்டுப் பெரியவர்கள் சொல்வது முற்றிலும் சரியானது. சுமங்கலிப் பெண்கள் எக்காரணம் கொண்டும் தாலியைக் கழற்றக் கூடாது. புதிதாக ஒரு திருமாங்கல்யம் வாங்கி அதை உண்டியலில் போடவும். இனிமேல் இப்படி வேண்டிக்கொள்ளாதீர்கள்.

**278. என் கணவருக்கும் மூத்த மகனுக்கும் ஒரே நட்சத்திரம். இருவரும் ஒரே வீட்டில் வசிக்கலாமா?**

நிறைய பேருக்கு ஏற்படும் சந்தேகம் இது. ஒரு குடும்பத்தில் குழந்தை பிறக்கும்போது அந்தக் குடும்பத்தில் உள்ள யாரேனும் ஒருவரின் நட்சத் திரத்தில்தான் பிறக்கும். தாய்-தந்தையரின் முகச் சாயல் இருப்பது போல், ஜாதகத்திலும் சில ஒற்றுமைகள் நிச்சயம் இருக்கும். அதில் எந்தத் தவறும் கிடையாது. அவர்கள் இருவரும் ஒரே வீட்டில் வசிப்பதால் யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

**279. என் கணவர் இறந்து நான்கு மாதமாகிறது. இந்நிலையில் என் மகளுக்கு ஒரு நல்ல வரன் அமைந்துள்ளது. அவர் இறந்து ஒரு வருடத்துக்குள் திருமணம் செய்யலாமா?**

செய்யலாம்.

**280. என் மூத்த மகனுக்கும் இளைய மகனுக்கும் பேச்சுவார்த்தை கிடை யாது. என் கணவருக்கும் அவரது சகோதரர்களுக்கும் ஜென்மப் பகை. என் மாமனாரும் அவரது சகோதரர்கள் மீது வாழ்நாள் முழுவதும் வழக்குத் தொடர்ந்துகொண்டே இருந்தார். எங்கள் குடும்பத்தில் பகை உணர்வு நீங்கி அனைவரும் ஒற்றுமையாக வாழ என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?**

அம்பிகை அசுரர்களை வதம் செய்து தேவர்களைக் காத்தருளிய புராண வரலாற்றைச் சித்தரிக்கும் ஸ்ரீமத் தேவி பாகவதம் படிக்கவும் அல்லது கேட்கவும். 700 சுலோகங்கள் கொண்ட இதை சப்தசதி பாராயணம் என்பார்கள்.

சண்டிஹோமம் எங்கு நடைபெற்றாலும் அதில் நீங்கள் கலந்து கொண்டு பூர்ணாஹூதிக்குத் தேவையான ஹோமப் பொருட்களை இயன்ற அளவு நன்கொடையாக அளித்து வரவும். அம்பாள் அனுக்ரஹத் தால் உங்கள் குடும்பத்தில் விரோத மனப்பான்மை அகலும். நல்லிணக்கம்

உருவாகும். ஆதி சங்கரர் துங்கபத்ரா நதிக்கரைக்கு வந்தபோது அங்கு ஓர் அதிசயத்தைக் கண்டார். பிறவி எதிரிகளான பாம்பும் தவளையும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று அன்பு செலுத்தின. நல்ல வெயில் நேரத்தில் பிரசவ வேதனையால் துடித்துக்கொண்டிருந்த ஒரு தவளைக்கு நாகம் குடை பிடிப்பது போல் நிழல் கொடுத்துக்கொண்டிருந்தது. ருஷ்யசிங்கர் என்னும் மகரிஷி தவம் செய்த இடம் என்பதால் அங்கு கருணையும் அன்பும் மிகுதியாக விளங்குவதை ஆதிசங்கரர் உணர்ந்தார். அவர் அங்கு நிறுவிய மடம்தான் சிருங்கேரி சாரதா பீடம். வீட்டில் சாரதாம்பாள் படம் வைத்து பூஜை செய்யுங்கள். குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும்.

***281.* ஒரு ஜாதகத்தில் லக்னத்துக்கு 7-ம் இடம் 8-ம் இடம் காலியாக இருந்தால் அதை சுத்த ஜாதகம் என்று கூறுவது சரியா?**

7, 8 ஆகிய வீடுகள் காலியாக இருந்து அவற்றில் எந்தக் கிரகமும் இல்லாமல் இருப்பதால் ஒரு ஜாதகத்தை சுத்த ஜாதகம் என்று கூற முடியாது. 7-க்குடைய கிரகம் வலுவாக இருக்க வேண்டும். 7-ம் இடத்துக்கு பவ கிரகங்களின் பார்வை இருக்கக்கூடாது. சுக்கிரன் நல்ல நிலையில் இருக்க வேண்டும். சந்திரனும் கேதுவும் எந்த இடத்திலும் ஒன்றாகச் சேரக்கூடாது. செவ்வாயுடன் சூரியன் சேரக்கூடாது. 7-ம் வீட்டோன் நவாம்சத்தில் நீச்சம் பெற்று கேதுவுடன் சேரக்கூடாது. இவ்வாறு உள்ள ஜாதகத்தையே சுத்த ஜாதகம் என்று கூறலாம். நட்சத்திரப் பொருத்தம் பார்க்கும்போது வெறும் தினப் பொருத்தம் மட்டும் பார்த்தால் போதாது. ரஜ்ஜுப் பொருத்தமும் யோனிப் பொருத்தமும் மிகவும் முக்கியம். பெண் ராசிக்கு 6வது ராசியும், 8வது ராசியும் ஆணின் ராசியாக வரக்கூடாது.

***282.* ஏதேனும் ஒரே ஒரு தெய்வத்தை மட்டுமே வழிபடுவது அதிக நன்மை அளிக்கும் என்று ஒரு பெரியவர் அறிவுரை கூறினார். அவ்வாறு வழிபடலாமா?**

உபாசனா தெய்வமாக ஏதேனும் ஒரு தெய்வத்தை வழிபடலாம். ஆனால் பிற தெய்வங்களை நிந்தனை செய்யக் கூடாது.

***283.* சில கோயில்களில் அம்மனுக்கு அணிவித்த புடைவைகளை ஏலத்தில் விற்பனை செய்கின்றனர். அவற்றை வாங்கி நாம் பயன் படுத்தலாமா?**

அதில் எந்தத் தவறும் இல்லை.

**284.** என் குடும்பத்தில் உள்ள ஒருவர் இறந்து போவது போலக் கனவு அடிக்கடி வருகிறது. இக்கனவு பலித்து விடுமோ என பயமாக உள்ளது?

பயப்பட வேண்டாம். இப்படிக் கனவு வந்தால் அவர் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்.

**285.** கந்தர்சஷ்டி கவசம் படிப்பது சிறந்ததா அல்லது கந்தர் அனுபூதி பாராயணம் செய்வது நல்லதா?

தேவராய சுவாமிகள் இயற்றிய கந்தர் சஷ்டி கவசம், அருணகிரிநாதர் அருளிச் செய்த கந்தர் அனுபூதி ஆகிய இரண்டுமே மிகவும் உயர்வான மந்திர சக்தி கொண்டவை. மிகக் கடுமையான எதிரித் தொல்லை, நீதிமன்ற வழக்குகள், தீராத பயங்கர நோய்கள், மீள முடியாத, வெளியில் சொல்ல முடியாத அளவுக்கு வறுமை, கடன் தொல்லை, செல்லும் இடத் திலெல்லாம் பகைவர்கள் போன்ற கடும் பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள் கந்தர்சஷ்டி கவசம் அவசியம் படிக்க வேண்டும். அத்தகைய மிகக் கடுமையான பாதிப்புகள் எதுவும் இல்லாமல் சாதாரணமாக நடுத்தரக் குடும்பத்தில் வாழ்க்கை நடத்துபவர்கள் கந்தர் அனுபூதி படித்தால் போது மானது. எந்தப் பெரிய பிரச்னையும் இல்லாதவர்கள் கந்தர்சஷ்டி கவசம் படிப்பது கொசு அடிக்க ஏகே 47 எடுத்துச் செல்வது போலாகும். கந்தர் அனுபூதி படித்தால் மகிழ்ச்சியான, ஆரோக்கியமான, வசதியான குடும்ப வாழ்க்கை அமையும்.

**286.** நானும் எனது மனைவியும் காசிக்குச் செல்ல விரும்புகிறோம். எங்களுக்குத் திருமண வயதில் ஒரு மகளும் மகனும் உள்ளனர். அவர் களுக்குத் திருமணம் நடந்த பிறகுதான் நாங்கள் காசிக்குச் செல்ல வேண்டும் என்று ஒருவர் கூறினார். இக்கருத்து சரியா?

இக்கருத்து முற்றிலும் தவறானது. காசிக்குப் போவதற்கும் பிள்ளை களுக்குத் திருமணம் நடத்துவதற்கும் தொடர்பே கிடையாது. திருமணம் ஆகாத பிள்ளைகளை உடன் அழைத்துக்கொண்டும் காசிக்குச் சென்று வரலாம். பெற்றோர்கள் உயிரோடு இருந்தால் காசிக்குப் போகக் கூடாது என்று சிலர் கூறுகின்றனர். அதுவும் தவறான கருத்து. யார் வேண்டுமா னாலும் காசிக்குச் சென்று கங்கையில் புனித நீராடி அங்கு உள்ள கோயில் களைத் தரிசனம் செய்துவிட்டு வரலாம்.

**287.** என் மகளுக்கு மீன ராசி. அஷ்டமச் சனி நடைபெறும்போது திருமணம் செய்யலாமா?

பொதுவாக அஷ்டமச்சனி நடைபெறும்போது திருமணம் செய்வ

தைத் தவிர்க்க வேண்டும். ஜாதக அமைப்பு, தற்போது நடைபெறும் தசா புக்தி ஆகியவற்றைப் பொறுத்து ஒரு சிலருக்கு அஷ்டமச் சனி நேரத்தி லும் திருமணம் நடைபெறும்.

**288. கழுத்தில் நிரந்தரமாக ருத்ராட்சம் அணிந்துகொள்ளலாமா? அதற்குப் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் என்ன? எத்தனை முகம் கொண்ட ருத்ராட்சம் அணியலாம்?**

குழந்தைகள், பிரம்மச்சாரிகள், குடும்பஸ்தர்கள் என அனைவரும் நிரந்தரமாகக் கழுத்தில் ருத்ராட்சம் அணிந்துகொள்ளலாம். அவ்வாறு அணிபவர்கள் சுத்த சைவமாக இருக்க வேண்டும். அசைவ உணவு உட்கொள்ளும் வழக்கம் உள்ளவர்கள், ருத்ராட்சம் அணிவதைத் தவிர்த்து விடுவது நல்லது. ஒரு முகம் முதல் 21 முகம் வரை கொண்ட ருத்ராட்சங்கள் உள்ளன. அவற்றின் விலை ரூ.5 முதல் ஐந்து லட்சம் வரை விற்கப்படுகின்றன. 13 முகம் கொண்ட ருத்ராட்சம் மிகவும் உயர் வானது. கிடைப்பதற்கு மிகவும் அரிதானது. அதை அணிந்துகொண்டால் ஆயுள், ஆரோக்கியம், பெருஞ்செல்வம், புகழ், மன அமைதி என அனைத்தும் கிடைக்கும். ருத்ராட்சம் அணிபவர்கள் ஓம் நமச்சிவாய என்னும் பஞ்சாட்சர மந்திரத்தைத் தினமும் இயன்ற அளவு உச்சரிக்க வேண்டும்.

**289. ஏகாதசி, சங்கடஹர சதுர்த்தி ஆகிய நாட்களில் முழுப் பட்டினியாக இருந்து விரதம் மேற்கொள்கிறேன். எனக்கு வயது 54. என் வீட்டில் உள்ளவர்கள் எனது ஆரோக்கியம் கருதி விரதம் இருக்க எதிர்ப்பு தெரிவிக் கின்றனர். நான் இந்த விரதங்களைத் தொடர்வதா அல்லது முடித்துக்கொள் ளலாமா?**

நமது ஆரோக்கியம் மிகவும் முக்கியம். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். முழுப் பட்டினியாக இருந்து விரதம் அனுஷ்டிக்க நமது ஆரோக்கியம் ஒத்துழைத்தால் மட்டுமே விரதம் இருக்க வேண்டும். கஞ்சி, பழச்சாறு, டீ, காபி போன்ற திரவப் பொருட்களை மட்டும் அருந்தி விரதம் இருக்கலாம். அல்லது ஒரு பொழுது உணவருந்தியும் விரதம் இருக்கலாம். முழுப் பட்டினியாக இருப்பது சுத்த உபவாசம் என்று பெயர். இது எல்லோராலும் முடியாது. உங்கள் ஆரோக்கியம் இதற்கு அனுமதிக்காவிட்டால் நீங்கள் லிக்விட் டயட் (திரவ ஆகாரம்) அருந்தி விரதம் இருக்கலாம்.

குருவின் அருள் கிடைக்க வியாழக்கிழமைகளில் விரதம் அனுஷ்டிக்க லாம். விநாயகப் பெருமானுக்கு உரிய விரதங்கள் வளர்பிறை சதுர்த்தி,

தேய்பிறை சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, செவ்வாய்க்கிழமை விரதம், வெள்ளிக்கிழமை விரதம் ஆகியவை. பெருமாளுக்கு உரிய விரதங்கள் ஏகாதசி விரதம், திருவோண விரதம், சனிக்கிழமை விரதம். சிவனுக்கு பிரதோஷ விரதம், திங்கட்கிழமை விரதம். முருகனுக்கு கார்த்திகை விரதம், சஷ்டி விரதம், செவ்வாய்க்கிழமை விரதம். அம்பிகைக்கு பௌர்ணமி விரதம், வெள்ளிக்கிழமை விரதம். உடலாரோக்கியம் அனுமதித்தால் மட்டுமே விரதம் இருக்க வேண்டும். விரத நாட்களில் மோர் குடிக்கக் கூடாது. பகலில் தூங்கக் கூடாது. வெங்காயம், பூண்டு ஆகிய இரண்டையும் உணவில் சேர்க்கக்கூடாது. இவை அனைத்தையும்விட மிக முக்கியமானது விரத நாட்களில் தெய்வ சிந்தனையுடன் இருக்க வேண்டும். உபவாசம் என்னும் சொல்லுக்கு இறைவனுக்கு அருகில் இருத்தல் என்று பொருள்.

**290. இளம் பெண்கள் மொட்டை அடித்துக்கொள்ளலாமா?**

பெரும்பாலான குடும்பங்களில் இந்த வழக்கம் கிடையாது. இது அவரவர் விருப்பம்.

**291. என் மகள் பரத நாட்டியம் கற்றுக்கொள்கிறாள். அவளது ஆசிரியர் ஒரு நடராஜர் சிலை வாங்கி வீட்டில் வைத்துக்கொள்ளச் சொல்கிறார். வீட்டில் நடராஜர் சிலை வைத்து வழிபடலாமா?**

நடராஜரின் சிலை வீட்டில் வைத்து வழிபடலாம். உலோகங்களினால் ஆன நடராஜர் விக்ரகம் வீட்டில் இருந்தாலே நல்லது.

**292. சனீஸ்வர பகவானின் மூலமந்திர ஹோமம் வீட்டில் செய்யலாமா?**

வேண்டாம்.

**293. வெள் எருக்கஞ்செடி வீட்டில் வளர்க்கலாமா?**

கூடாது.

**294. எனக்குப் பெற்றோர் உள்ளனர். ஆனால், மாமனார் இல்லை. அமாவாசைக்கு நான் வீட்டில் கும்பிட வேண்டுமா?**

மாமனார் உயிரோடு இல்லாத பெண்கள் அவரவர் குல வழக்கப்படி அமாவாசை தினத்தில் அவசியம் கும்பிட வேண்டும்.

**295. சிவன் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்யும்போது சண்டிகேஸ்வரர் சன்னிதியில் கைகளைத் தட்டி வணங்குவது எதற்காக?**

**அவர் என்ன செவிட்டுச் சாமியா?**

அவர் செவிட்டுச் சாமியல்ல. சிவன் கோயிலில் இருந்து எந்தப் பொருளையும் நாம் எடுத்துச் செல்லவில்லை. வெறும் கையோடுதான் வெளியேறுகிறோம் என்பதை உறுதிப்படுத்துவதற்காக கைகளைத் தட்டி வணங்குகிறோம்.

**296. என் கணவரும் அவரது முன்னோர்களும் பரம்பரையாக பூஜை செய்துகொண்டிருந்த பல சுவாமி விக்ரகங்களும் எந்திரங்களும் எங்கள் வீட்டு பூஜையில் உள்ளன. என் மகன் வெளிநாட்டில் செட்டில் ஆகிவிட்டதாலும் எனது முதுமையினாலும் அவற்றுக்கு தினசரி பூஜை செய்ய முடியவில்லை. என்ன செய்வது?**

அவற்றை ஏதேனும் மடத்துக்கோ கோயிலுக்கோ கொடுத்து விடுங்கள். அல்லது கடலில் போட்டு விடலாம். சாளக்ராமம், பாணலிங்கம், மஹாமேரு, ஸ்ரீசக்ரம் போன்றவற்றை பூஜை செய்யாமல் சும்மா வைத்துக்கொள்ளக் கூடாது.

**297. பத்தாம் வகுப்பில் படிக்கும் என் மகனுக்கு ராகு தசை நடைபெறுகிறது. படிப்பில் ஆர்வம் படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது. கவனச் சிதறல் ஏற்படாமல் தடுக்க என்ன செய்வது?**

சண்டி ஹோமம் நடைபெறும் இடங்களுக்குச் சென்று அதில் பங்கு பெறுங்கள். பூர்ணாஹுதிக்குத் தேவையான பொருட்களை இயன்ற அளவு வாங்கிக் கொடுங்கள். ராகு தசையின் தீய பலன்களைக் கட்டுப்படுத்த சண்டி ஹோமம் மிகச் சிறந்த பரிகாரம்.

**298. வேத மந்திரங்களை வீட்டில் ஒலிக்கச் செய்து அனைவரும் கேட்கலாமா?**

வேதங்கள் அனைவருக்கும் பொதுவானவை. வேத மந்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள ஒலி நாடாக்கள் அல்லது குறுந்தகடுகளை யார் வேண்டுமானாலும் தினசரி வீட்டில் ஒலிக்கச் செய்து கேட்கலாம். அவற்றுள் ஸ்ரீருத்ரம், சமகம், நமகம், புருஷ சூக்தம், நாராயண சூக்தம், ஸ்ரீ சூக்தம், துர்கா சூக்தம் ஆகியவை மிக முக்கியமானவை.

**299. அமெரிக்காவில் வசிக்கும் என் மகனுக்கு, குடி உரிமைக்கான க்ரீன் கார்டு கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அது விரைவில் கிடைக்க என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?**

ராமேஸ்வரம் ராம நாதஸ்வாமி கோயிலில் உள்ள ஆஞ்சநேயரை வேண்டிக்கொள்ளுங்கள். அங்கு வழங்கப்படும் செந்தூரத்தை உங்கள் மகனுக்கு அனுப்பி வையுங்கள். அவருக்கு க்ரீன் கார்டு கிடைத்துவிடும். கடல் தாண்டிச் சென்ற ராமதூதன் அந்த ஆஞ்சநேயர்தான்.

**300. என் இரண்டு மகள்களுக்கும் திருமணம் நிச்சயமாகியுள்ளது. ஒரே நாளில் இருவருக்கும் திருமணம் நடத்தலாமா?**

ஒரே மேடையில் இரண்டு மகள்களுக்கும் திருமணம் நடத்தலாம். கண் திருஷ்டி பட்டுவிடுமோ என்னும் பயத்தில் சிலர் அவ்வாறு செய்வதில்லை. இரண்டு மகள்களுக்கும் ஒரே முகூர்த்தத்தில் திருமணம் செய்வது சாஸ்திரப்படி தவறில்லை.

***

https://t.me/Digital_eLibrary

கேள்விகளால் நிறைந்தது மனித வாழ்க்கை. கனவில் பாம்பு வருவது ஏன்? ஒரே நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் திருமணம் செய்துகொள்ளலாமா? வீட்டில் விக்கிரகங்களை வைத்து வழிபட லாமா? எந்த நாளில், என்ன பூஜை செய்யலாம்? பில்லி, சூனியம் விலக என்ன செய்யவேண்டும்? அரசமரத்தைச் சுற்றினால் குழந்தை பிறக்குமா? அட்சயத் திரிதியை நாளில் என்ன செய்யவேண்டும்? நேர்த்திக்கடனை எத்தனை நாள்களுக்குள் செய்யவேண்டும்? நட்சத்திர பலன், ராசி பலன் எதைப் பின்பற்றுவது? எதிரிகள் தொல்லை விலக என்ன செய்யவேண்டும்? திருமணம் தாமத மானால் என்ன செய்யவேண்டும்? விதியை மதியால் வெல்ல முடியுமா? பித்ரு தோஷம் என்றால் என்ன? வெளிநாடு செல்ல விசா கிடைக்க என்ன செய்யவேண்டும்? மிகப் பெரிய செல் வம் கிடைக்க என்ன செய்யவேண்டும்? கடன் தொல்லையில் இருந்து விடுபட என்ன செய்யவேண்டும்? குழந்தைக்குப் பேச்சு வர என்ன செய்யவேண்டும்?... இப்படி அன்றாட வாழ்க்கையில் ஆயிரம் சந்தேகங்கள்.

இவை ஒவ்வொன்றும் ஏன் நடக்கிறது? இவற்றுக்கு என்ன பரிகாரம் செய்யவேண்டும்? கல்கி இதழில் வெளிவந்த சூப்பர் ஹிட் தொடர், இப்போது புத்தக வடிவில்.

https://t.me/Digital_eLibrary



தொலைக்காட்சிகளில் அநேகமாக இவருடன் தான் பொழுது விடியும். பிரபல பத்திரிகைகளைத் தொட்டால் இவர் எழுதும் ராசி பலன் இடம் பெற்றிருக்கும். அந்த அளவுக்குப் பிரபலமான ஜோதிடர் ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்.

கல்கி பதிப்பகம்

Palich Parikaarangal
₹ 50